YARL OSAI
# யாழ் ஓசை
வார இதழ்
ஜன 21 - 27
ஓசை : 01 நாதம் : 12 வெள்ளிக்கிழமை 21.01.2011 வார இதழ் விலை : ரூபா 15.00

# யாழ். குடாநாட்டில் பணம் பறிப்பு கொள்ளைகளுக்கு காரணம் யார்?




கொழும்பில் தேங்காய் ஒன்று 50 தொடக்கம் 60 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது. இங்கு லொறி ஒன்றில் கொண்டுவரப்பட்ட தேங்காய்களை கொள்வனவு செய்வதற்காக மக்கள் வரிசையில் நேற்று காத்து நின்றபோது எடுத்த படம்.

## அரசுக்கு நெருக்கமான குழு என கூட்டமைப்பு பாராளுமன்றத்தில் தெரிவிப்பு

(அ.கனகராஜ், ஜே.ஜி.ஸ்டீபன்)

குடாநாட்டில் இடம்பெற்ற 24 சம்பவங்களையும் பார்க்கின்ற போது அவற்றுக்கிடையில் ஒத்ததன்மை காணப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் பாதாள உலகக் கோஷ்டியினர் இல்லை. மக்களை பயமுறுத்தி அச்சுறுத்தி பணம் பறிக்கும்-சொத்துக்களை அபகரிக்கும் செயற்பாட்டில் அரசாங்கத்திற்கு நெருக்கமான குழுவே ஈடுபடுகின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றஞ்சாட்டியது. தமிழ் மக்களுடன் இணக்கம் காண விரும்பினால் அரசாங்கத்திற்குள் இருக்கின்ற குற்றவியல் சக்திகளை அரசாங்கம் அகற்றிவிட வேண்டும். (6 ஆம் பக்கம் பார்க்க)

## ஆட்கடத்தலைத் தடுக்க கனடா நடவடிக்கை

தமது நாட்டுக்குள் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆட்கடத்தல்களை தடுக்க புதிய முனைப்புகளை மேற்கொள்ளப்போவதாக கனேடிய பொதுப் பாதுகாப்பு அமைச்சர் விக் டௌவ்ஸ் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் கனடாவில் மீள் இணைவதாக வெளியான தகவலை அடுத்தே (6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். தேர்தல் மாவட்டத்தில் 696,587 பேர் தேர்தலில் வாக்களிக்க தகுதிபெற்றுள்ளனர்

### 19 உள்ளூராட்சி மன்றங்களுக்கு பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படுவர்

(ரொபட் அன்டனி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ். மாநகர சபை தவிர்ந்த ஏனைய பகுதிகளில் இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்களிக்க ஆறு இலட்சத்து 96 ஆயிரத்து 587 பேர் தகுதி பெற்றுள்ளனர். இம்முறை தேர்தல் 2009 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் பிரகாரமே நடைபெறவுள்ளது என்று யாழ். மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் குகநாதன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட வாக்காளர் விடயம் தொடர்பில் விபரிக்கையிலேயே அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

யாழ். மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் இவ்விடயம் குறித்து மேலும் கூறியதாவது:-

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய நிர்வாக மாவட்டங்கள் (6 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் நீதிமன்றில் சரண் அவருக்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டம்

த.ம.வி.பு. கட்சியின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பூ. பிரசாந்தன் நீதிமன்றில் சரணடைந்துள்ள அதேவேளை, அவருக்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டமொன்றும் மட்டக்களப்பு-ஆரையம்பதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப்பொருள் விநியோகம் தொடர்பில் அண்மையில் மாகாண சபை உறுப்பினர் பிரசாந்தனுக்கும் ஆரையம்பதி பிரதேச செயலாளர் தனபாலசுந்தரத்துக்கும் இடையில் பிணக்கு (6 ஆம் பக்கம் பார்க்க)


உங்கள் திருமண விழாவை மென்மேலும் அலங்கரித்திட
புத்தம் புதிய திருமண பட்டாடைகள்...
JEYECHANDRANS
The Art of Fashion
No.433,Galle Road,Colombo-06 Tel:011-4528438/0114528435
www.jeyechandrans.com


noolaham.org | aavanaham.org

# முகாம்களில் எஞ்சியுள்ள மக்களை ஏப்ரல் 30க்குள் மீள்குடியேற்ற முடியும்

## அமைச்சர் குணரட்ன வீரக்கோன் நம்பிக்கை

(ரொபட் அன்டனி)

வவுனியா நலன்புரி முகாம்களில் எஞ்சியுள்ள சுமார் 20 ஆயிரம் அகதி மக்களை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிக்குள் மீள்குடியேற்றவே முயற்சிக்கின்றோம்.

நிலக்கண்ணிவெடிகளே மீள்குடியேற்றத்துக்குத் தடையாக அமைந்துள்ள பிரதான காரணியாகும் என்று மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரக்கோன் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றும் பணிகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பது தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் இது தொடர்பில் மேலும் கூறியதாவது:- இடம்பெயர்ந்த நிலையில் வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த மிக அதிகமான மக்கள் மீள்குடியேற்றப்பட்டு விட்டனர். தற்போதைய நிலைமையில் சுமார் 20 ஆயிரம் அகதி மக்களே எஞ்சியுள்ளனர்.

இந்நிலையில், முகாம்களில் எஞ்சியுள்ள மக்களை ஏப்ரல் மாதம் 30 க்குள் மீள்குடியேற்றிவிடவே முயற்சிக்கின்றோம். இடம்பெயர்ந்த மக்களை விரைவில் மீள்குடியேற்ற வேண்டும் என்பதே எமது ஆர்வமாகும்.

ஆனால் நிலக்கண்ணிவெடிகளே இந்த செயற்பாட்டில் பிரதான தடையாக வுள்ளது. நிலக்கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுவிட்டதாக பிரதேச செயலகம் எங்களுக்கு உறுதிப்படுத்த வேண்டும். மேலும் ஐக்கிய நாடுகள் சபையின் சான்றிதழ் பெறப்படவேண்டியதும் அவசியமாகும்.

அதன் பின்னரே குறிப்பிட்ட பிரதேசங்களில் மக்களை குடியேற்ற முடியும். எனவே, நிலக்கண்ணிவெடிகள் அகற்றப்படும் வரையே நாங்கள் காத்திருக்கின்றோம். இதேவேளை மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்களுக்குத் தேவையான வசதிகளை முடியுமானவரை நிறைவேற்றி வருகின்றோம்.

கடந்த டிசம்பர் மாதம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கினோம். அமைச்சுக்கு இதுவரை 250 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தேவைப்படின் மேலும் நிதியை பெற முடியும். தற்போது கிடைத்துள்ள நிதியை ஒவ்வொரு மாவட்டத்துக்குமாகப் பிரித்து செலவிடவுள்ளோம்.

## கலண்டர் எரிப்பு போராட்டத்தில் ஈடுபட்ட 200 பேர் கைது

### உடுமலைப் பேட்டையில் சம்பவம்

உடுமலைப்பேட்டையில் சைனிக் பாடசாலை கலண்டரை எரிக்கும் போராட்டத்தில் ஈடுபட்ட 200 இற்கும் அதிகமானோர் நேற்று கைதுசெய்யப்பட்டனர். தந்தை பெரியார் திராவிட கழகத்தை சேர்ந்த கு.இராமகிருஷ்ணன் தலைமையில் இந்தப் போராட்டம் நேற்று நடைபெற்றது.

உடுமலை இராணுவப் பாடசாலை வெளியிட்ட கலண்டரில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உருவப்படம் பொறிக்கப்பட்டிருந்தது. இதற்கு தமிழகத்திலுள்ள அரசியல் கட்சிகளும் தமது எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

இந்நிலையில் இந்தக் கலண்டரை வாபஸ் பெறவேண்டுமெனக் கோரி நேற்றைய தினம் பெரியார் திராவிட கழக உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸாருக்கும் தொண்டர்களுக்கும் இடையே மோதல்கள் இடம்பெற்றதுடன், 200 இற்கும் அதிகமான தொண்டர்கள் கைதுசெய்யப்படனர்.

### யாழ். போதனா வைத்தியசாலையில்

## நோயாளர்களைப் பார்வையிட வருவோர் புதிய நடைமுறையால் பெரும் நெருக்கடி



யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயாளர்களைப் பார்வையிடவருவோர் வைத்திய சாலையின் புதிய நடைமுறையால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

முன்னர் போல் வைத்தியசாலை முன்பக்கக் கதவினால் உட்செல்ல முடியாது. பின்பக்கமாக மணிக்கூட்டு வீதியால் வெலிங்டன் சந்தி வழியாகத் தான் செல் வேண்டியுள்ளது.

அதுவும் ஒரு நோயாளிகளுக்கு இரண்டு பாஸ் (அனுமதி அட்டை) வைத்திருப்பவர்கள் மட்டுமே உட்செல்ல முடியும். உணவைத் தவிர வேறு பிஸ்கட் போன்ற சிற்றுண்டி வகைகள் எடுத்துச் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சைக்கிளில் செல்பவர்கள் தமது வாகனத்தை வைத்தியசாலை முன்பக்க சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் நிறுத்திவிட்டு யாழ். பிரதான பஸ்தரிப்பு நிலையத்தைச் சுற்றி நடந்து செல்ல வேண்டிய நிலையும் காணப்படுகின்றது.

தூர இடங்களிலிருந்து, குறிப்பாக வன்னியிலிருந்து வரும் நோயாளிகளின் உறவினர்கள் தற்போதைய நடைமுறையினால் நோயாளிகளைப் பார்வையிடாமல் ஏமாற்றம் அடைந்து திரும்பிச் செல்கின்றனர்.

இதேவேளை, சைக்கிள், மோட்டார் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்திலிருந்து மாலை 6 மணிக்கு பிந்தினால் வாகனங்களை எடுக்கமுடியாது. மறுநாள் காலை 6 மணிக்குப் பின்னர்தான் இரவு பாதுகாப்பு கட்டணமாக 25 ரூபாவைச் செலுத்தி வாகனத்தை எடுத்துச் செல்ல முடியுமென கட்டாயப்படுத்தப்படுகின்றனர். இப்படியொரு நடைமுறையானது இருப்பது மக்களுக்குத் தெரியாத நிலையில், தற்போதைய நடைமுறைகளை மக்களின் பார்வைக்கு விளம்பரப்படுத்த வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுகின்றனர்.

## சரத் பொன்சேகாவின் ஜ.தே.கூ. பதிவு தேர்தல் திணைக்களத்தால் ரத்து

சிறையில் வைக்கப்பட்டுள்ள சரத் பொன்சேகாவின் அரசியல் கட்சியான ஜனநாயகத் தேசிய கூட்டமைப்பின் கட்சிப் பதிவை தேர்தல்கள் திணைக்களம் ரத்துச் செய்துள்ளது. கட்சி பதிவுக்கான விண்ணப்பத்தில், இந்தக் கட்சியின் கீழான உரிய கணக்கறிக்கைகளை தாக்கல் செய்யாமையே இதற்கான காரணம் என தேர்தல்கள் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில், தற்போதுள்ள கட்சிப் பதிவு சட்டத்தின் கீழ் புதிய அரசியல் கட்சி ஒன்றைப் பதிவுசெய்வது இலகுவான விடயம் இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சியாகப் பதிவுசெய்வதற்காக விண்ணப்பித்த பல்வேறு கட்சிகள் இதன் அடிப்படையில் ரத்துச்செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சரத் பொன்சேகாவின் கட்சிப் பதிவு ரத்துச்செய்யப்பட்டமை தொடர்பில் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் கருத்துத் தெரிவிக்கும்போது, இது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க விருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமது கட்சி உருவாக்கப்பட்ட ஒரு நிதி ஆண்டு நிறைவடையாத நிலையில், எவ்வாறு கணக்கறிக்கையை சமர்ப்பிக்க முடியும் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து விலகிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்தின் கட்சியான தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் விண்ணப்பமும் நிராகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஐக்கிய தேசிய கட்சி சார்பில் 25, 26, 27 ஆம் திகதிகளில் வேட்புமனு தாக்கல் செய்யப்படும்

### வடக்கு - கிழக்கிலும் சில தினங்களில் தெரிவு

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை தெரிவு செய்யும் பணிகள் விரைவில் நிறைவடையுள்ள நிலையில் 25, 26 மற்றும் 27 ஆம் திகதிகளில் வேட்புமனுத் தாக்கல்களை செய்யவுள்ளோம் என்று கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் போட்டியிடும் வேட்பாளர்கள் தெரிவு சில தினங்களில் நிறைவடையும் என்றும் அவர் குறிப்பிட்டார். உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பாளர் தெரிவு நடவடிக்கைகள் குறித்து விபரிக்கையிலேயே திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் இது தொடர்பில் மேலும் கூறியதாவது:- உள்ளூராட்சி தேர்தலுக்கான ஐ.தே.க. வின் நாடளாவிய ரீதியிலான வேட்பாளர் தெரிவுகள் சில தினங்களில் நிறைவு பெற்றுவிடும். அந்த வகையில் 25, 26 மற்றும் 27 ஆம் திகதிகளில், வேட்புமனுத் தாக்கல்களை செய்யவுள்ளோம். மேலும், பெண் வேட்பாளர்களுக்கு முக்கியத்துவம் வழங்குமாறு அறுவுறுத்தப்பட்டுள்ளது. குறைந்த பட்சம் ஒரு உள்ளூராட்சி மன்றத்தில் ஒரு பெண் பிரதிநிதியாவது இடம்பெற வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை தெரிவுசெய்யும் பணிகள் மும்முரமாக இடம்பெற்றுவருகின்றன. தற்போதைய நிலைமையில் கட்சியின் தேசிய வேட்புமனு சபை கூடி வேட்பாளர் தெரிவுகள் தொடர்பில் ஆராய்ந்துவருகின்றது.

இந்நிலையில், வடக்கு-கிழக்கு மாகாணங்களிலும் வேட்பாளர்கள் தெரிவுகள் இடம்பெற்று வருகின்றன.

(தொடர்ச்சி 6 ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பத்தர முல்லை வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் சமாதான நீதிவான்களின் மனித உரிமை அமைப்பின் 5 ஆவது ஆண்டு நிறைவு விழா அண்மையில் நடைபெற்றது. சமுக சேவைக்கான 'விஸ்வ கீர்த்தி' என்ற விருதிற்கு யாழ் மாவட்டத்திலிருந்து தெரிவாகிய ஜெ. சத்தியேந்திரன் பாராளுமன்ற உறுப்பினர் ஹசனலியிடமிருந்து விருதை பெறுவதையும் நிகழ்வில் பங்குபற்றியோரையும் படங்களில் காணலாம்.

# யாழ்.குடா நாட்டில் படையினரின் சோதனை நடவடிக்கைகள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்

யாழ்.மாவட்டத்தில் துப்பாக்கிச் கலாசாரம் மீண்டும் ஆரம்பித்ததைத் தொடர்ந்து படையினரின் பாதுகாப்பு நடவடிக்கையும் விரிவு படுத்தப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இடம்பெற்றது போல் பொலிஸாரும் இராணுவத்தினரும் வீடு வீடாகச் சென்று வீட்டில் வசிப்பவர்களின் விபரங்களைக் கேட்டு அறிவதில் ஈடுபட்டுள்ளார்கள்.

கடந்த சில மாதங்களாக யாழ்.மாவட்டத்தில் பல இடங்களில் இரவு, பகல் என்ற வேறுபாடின்றி துப்பாக்கி முனையில் கொலை, கொள்ளை போன்ற குற்றச் சம்பவங்கள் இடம்பெற்றுவருகின்றன.

இச்சம்பவங்களுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் எந்த விதமான தொர்புகளும் இல்லையென்று பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த திங்கட்கிழமை இரவு மானிப்பாயில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பெண் ஒருவர் காயமடைந்ததைத் தொர்ந்து, பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கை மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை தாவடிச் சந்தியில் குவிக்கப்பட்ட இராணுவத்தினரும் பொலிஸாரும் பல குழுக்களாகப் பிரிந்து தாவடி, கொக்குவில் ஆகிய பகுதிகளிலுள்ள வீடுகளுக்குச் சென்று வீட்டில் வசிப்பவர்களின் விபரங்களைச் சேகரிப்பதில் ஈடுபட்டுள்ளனர்கள்.

இவர்களின் இந்த நடவடிக்கை மக்கள் மத்தியில் பீதியையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

# காசநோய்த் தடுப்புச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம்

தெல்லிப்பழை,

வட இலங்கை காசநோய்த் தடுப்பு சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி 3 மணிக்கு மார்பு நோய் சிகிச்சை நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இவ் வருடாந்த பொதுக்கூட்டத்தில் யாழ். குடாநாட்டில் அண்மைக்காலமாகப் பெருகி வரும் காசநோயை விரைவாக கட்டுப்படுத்தும் நோக்கில் புதிய அங்கத்தவர்கள் இச் சங்கத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதுடன் 2011 ஆம் ஆண்டிற்குரிய புதிய நிர்வாக சபைத் தெரிவும் நடைபெறவுள்ளது.

இப் பொதுக்கூட்டத்தில் சகல பழைய அங்கத்தவர்களையும் புதிதாக இணைய விரும்புபவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

காசநோயாளிகளின் மனித உரிமைகள் தெர்டர்பாக அக்கறை உடையவர்களும் இக்கூட்டத்திற்க தவறாது சமுகம் தந்து தங்களது ஆலோசனைகளையும் அனுபவங்களையும் வழங்கி உதவுமாறும் அன்றைய தினம் எதிர்வரும் பங்குனி மாதம் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள விசேட நிகழ்வுகள் குறித்தும் கலந்தாலோசிக்கப் படவுள்ளதாக யாழ். மாவட்ட காச நோய் கட்டுப்பாட்டு அதிகாரி வைத்திய கலாநிதி எஸ். யமுனாநந்தா அறிவித்துள்ளார்.

## வெற்றுக்காணிகளில் கழிவுப்பொருட்கள் கொட்டப்படுவதாக மக்கள் கவலை

(வட்டுக்கோட்டை நிருபர்)

காரைநகரில் மக்கள் மீளக்குடியமராத காணிகளில் கழிவுப்பொருட்கள் கொண்டு வந்து கொட்டப்படுவதாக இப்பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வேதரடைப்பு கிராமத்தில் உள்ள கைவிடப்பட்ட வீடுகள், காணிகளில் இவ்வாறான கழிவுப்பொருட்கள் பெருமளவில் கொண்டு வந்து குவிக்கப்படுகின்றன.

இவ்விடயம் தொடர்பாக காரைநகர் பொது சுகாதார பரிசோதகரிடம் கேட்டபோது அவற்றைத் தான் பார்வையிட்டதாகவும் குறிப்பிட்ட பிரதேசத்து கிராம சேவையாளர்கள் பொது திட்ட வேலைகள் மூலம் அவற்றைத் துப்பரவு செய்ய முடியும் எனவும் குறிப்பிட்டனர்.

# வடமராட்சி ஆசிரியர் நிலையம் மெதடிஸ்த மிஷன் பாடசாலையில்

வடமராட்சி,

வடமராட்சி கலவி வலயத்தின் ஆசிரியர் நிலையம் புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை மாடிக்கட்டிடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயக் கட்டிடத்தில் ஏற்கெனவே இயங்கி வந்த ஆசிரியர் நிலையத்தில் ஆசிரியர்களின் வாண்மை விருத்தி தொடர்பான செயலமர்வுகளுக்கு இடவசதி போதாமையினாலேயே இந்நிலையம் புதிய இடத்திற்கு இடமாற்றப்பட்டது.

புலோலி மெதஸ்டித தமிழ்க் கலவன் பாடசாலை மாடிக்கட்டிடத்தில் முன்னர் வடமராட்சி கல்வி வலயம் இயங்கிவந்தது. கல்வி வலயம் பருத்தித்துறை முதலாம் கட்டையிலுள்ள சொந்தக் கட்டிடத்திற்கு மாற்றப்பட்டதையடுத்து அம்மாடிக்கட்டிடத்தில் ஆசிரியர் நிலையம் மாற்றப்பட்டதாக வலயப் பணிப்பாளர் வி.செல்வராசா தெரிவித்தார்.

# அடிப்படை வசதிகளின்றி பரிதவிக்கும் முஸ்லிம் மக்கள்

(எம்.எல். லாபிர்)

1990 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிகளின் ஒரு பகுதியினராகிய ஆயிரத்து 800 குடும்பங்கள் கடந்த வாரம் மீள் குடியேறுவதற்காக அழைத்துவரப்பட்டு தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 600 குடும்பங்களுக்கு யு.என்.எச்.சீ. ஆரின் உணவல்லாத பொருட்களும் 6 மாதத்திற்கான உணவுப் பொருட்கள் பெறுவதற்கான அட்டையும் கிடைக்கப் பெற்றுள்ளன.

மீள்குடியேறியுள்ள மக்கள் கதீஜா கல்லூரியிலும் வண்ணை முஸ்லிம் கலவன் பாடசாலையிலும் பொம்மை வெளியில் தனியார் கட்டிடத்திலும் அடிப்படை வசதிகளின்றி வசிக்கின்றனர்.

பெருந்தொகையானோர் வசிப்பதற்கு இடமின்றி தத்தளிக்கின்றனர். சிலர் வாழ வழியின்றித் திரும்பிச் சென்றுள்ளனர். அடிப்படை வசதிகள் இல்லாமையினால் புத்தளமும் யாழ்ப்பாணமுமாக அலைந்து திரிகின்றனர். மீள்குடியேற்ற பதிவை மேற்கொண்டவர்கள் இரண்டும் கெட்டான் நிலைலயில் காணப்படுகின்றனர்.

இவர்களின் அநேகமானவர்களின் வீடுகள் யாவும் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளன. வீதிகள், மின்சாரம், நீர் போன்ற அத்தியாவசியமான தேவைகளும் சீராக இல்லை. அடிப்படை வசதிகள் திட்டமிட்டு செயற்படுத்தும் வரை இம் மக்களின் நிலைமை கவலைக்கிடமானது.

2002 ஆம் ஆண்டு மீள்குடியேறி வாழும் மக்களுடைய வாழ்க்கைத் தரமும் முன்னேற்றமான நிலைமையில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# பருத்தித்துறை லீக் அணிக்கு வட மாகாண ஆளுநர் நிதி

நெடுங்கேணி

உதைபந்தாட்ட லீக் போட்டியில் சம்பியனான பருத்தித்துறை லீக் அணிக்கு வடமாகாண ஆளுநர் நிதியுதவி வழங்கியுள்ளார்.

கடந்த வெள்ளிக் கிழமை யாழ்ப்பாணத்தில் ஆளுனர் அலுவலகத்தில் இவர் கலந்து சிறப்பித்த வடமாகாண ஆளுனர் ஜி.ஏ.சந்திரசிறி வெற்றி பெற்றமைக்கு பாராட்டு தெரிவித்ததுடன் ஒவ்வொரு வீரருக்கும் தனித்தனியே உதைபந்தாட்ட பொருட்கள் வேண்டுவதற்கான நிதியுதவியைச் செய்துள்ளார்.

இதற்கேற்ப பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்க தலைவர் செயலாளர் ஒரு வீரருக்கு ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களாக 30 வீரர்களுக்கும் கொள்வனவு செய்து வழங்கியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Yarl Osai
# யாழ் ஓசை
*2011 ஜனவரி 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை*
**இல.117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.**
Tel: 021-2222730, Fax: 0212222730
E-mail-jaffna@virakesari.lk

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளக் கட்டியெழுப்புவதன் அவசியம்

கிழக்கு மாகாணத்தை மிகக் கடுமையாகப் பாதித்த வெள்ளம் தற்போது வடிந்துவிட்ட நிலையில் அங்கு இயல்பு வாழ்க்கை மீளத் திரும்பிக் கொண்டிருக்கிறது. பாடசாலைகளும் அலுவலகங்களும் மீண்டும் இயங்க ஆரம்பித்துவிட்டன. போக்குவரத்தும் சீரடைந்துள்ள நிலையில் வியாபார நடவடிக்கைகளும் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட சுமார் ஒரு மில்லியனுக்கும் அதிகமானோருக்கு அரசாங்கத்தினாலும் அரச சார்பற்ற அமைப்புகளாலும் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இருப்பினும் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட உதவிகள் போதாது எனவும் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு போதியளவு நிவாரண உதவிகள் சென்றடையவில்லை எனவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

அத்துடன் சில பகுதிகளில் நிவாரண விநியோகத்தின்போது ஊழல் மோசடிகள் இடம்பெற்றதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. சில பகுதிகளில் பொது மக்கள் ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டுள்ளனர்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களைப் பொறுத்தவரையில் பெரும்பாலானோர் மீண்டும் தமது வீடுகளுக்குத் திரும்பிவிட்டபோதிலும் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டோரின் நிலை இன்று வரை கேள்விக்குரியதாகவே உள்ளது.

குறிப்பாக சுமார் 2,898 வீடுகள் முற்றாகவும் 16,111 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்திருக்கின்றன. சுமார் 4 இலட்சம் ஏக்கர் வயல் நிலங்கள் அழிவடைந்துள்ளன. மீன்பிடித் தொழிலும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் இந்த மக்களுக்குரிய நிவாரண உதவிகள் எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மாத்திரம் 30 நாட்களுக்குள் நஷ்டயீடு வழங்கப்படும் என விவசாய காப்புறுதி சபை அறிவித்துள்ளது.

போர் முடிவுக்கு வந்த பின்னர் கிழக்கு மாகாணத்தின் பெரும்பாலான பகுதிகளில் இம் முறை விவசாயச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இருப்பினும் மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல அவ்வாறு முதன் முறையாகப் பயிரிடப்பட்ட வயல் நிலங்களும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளமை கவலைக்குரியதாகும்.

அந்தவகையில் அரசாங்கமும் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களும் வெறும் உலருணவுப் பொருட்களுடன் மாத்திரம் தமது நிவாரண உதவிகளை நிறுத்தி விடாது வெள்ளத்தினால் அடிப்படை வசதிகளை இழந்து தவிக்கும் மக்களின் வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்பவும் முன்வர வேண்டும்.

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் அதிகளவான சர்வதேச நாடுகளும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும் இலங்கைக்கு உதவிகளை வழங்கியிருந்தன. அந்த உதவிகளுடன் ஒப்பிடுகையில் தற்போது மிகச் சில நாடுகள் மாத்திரமே இலங்கைக்கு உதவ முன் வந்துள்ளன.

இந்நிலையில் தான் இலங்கையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அடுத்த 6 மாதங்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கும்பொருட்டு சுமார் 51 மில்லியன் டொலர் தேவைப்படுவதாகவும் இத் தொகையை திரட்டுவதற்கு உதவியளிக்குமாறும் சர்வதேச நாடுகளிடம் ஐக்கிய நாடுகள் சபை வேண்டுகோள்விடுத்துள்ளது.

அத்துடன் தற்போது இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐ.நா.வின் அவசர கால நிவாரண இணைப்பாளர் கதரின் பிறேக் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டுள்ளதுடன் இன்றைய தினம் அரசாங்க உயர்மட்டத் தலைவர்களைச் சந்தித்து மனிதாபிமான உதவி நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே ஐக்கிய நாடுகள் சபையினால் திரட்டப்படும் இந்த நிதி இலங்கைக்கு கிடைக்கப் பெறும்பட்சத்தில் அவற்றைக் கொண்டு கடுமையான பாதிப்புக்களைச் சந்தித்த மக்களின் வாழ்வாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும்.

# தமிழர் அரசியலை முன்னெடுக்க முட்டுக்கட்டையாக இருக்கும் தடைகள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

அரசியலின் ஆணிவேர்களில் ஒன்றாக இராஜதந்திரம் திகழ்கிறது. சமகால அனைத்துலக அரசியல் என்பது, பொருளாதார நலனை அடிப்படையாக வைத்தே நகர்கிறது. அரசியலில் நிரந்தர நண்பனுமில்லை, நிரந்தர எதிரியுமில்லையென்பது எமது மூதாதையர்களால் எமக்கு சொல்லப்பட்ட கூற்று. இன்றைய அனைத்துலக அரசியல் அதற்கு நல்ல உதாரணம்.

இதனை நடைமுறையோடு இணைத்துப் பார்ப்பது காலத்திற்கு பொருத்தமாவதுடன், தமிழ் சமூகத்துக்கு தேவையாகவுள்ள கருத்தாடல் களத்துக்கு வழியமைத்து மாயைகளை களைய வழியமைக்க வேண்டும் என்பது இப்பத்தியின் நோக்கு.

யுத்தம் இலங்கைக்கு சாதகமான முறையில் நிறைவடைவதற்கு பல நாடுகள் பல்வேறு வழிவகைகளில் உதவிபுரிந்தன .

அதேவேளை, இலங்கை மீது அனைத்துலக அழுத்தங்களும் தொடர்ச்சியாக இறுகிவருகின்றன. இதற்கான காரணங்களாக இலங்கைத் தீவில் அதிகரித்து வரும் சீனாவின் மேலாண்மையே காரணம் என்று பரவலாக கருத்துத் தெரிவிக்கப்பட்டு வருகிறது. சீனாவின் மேலாண்மையை இந்தியாவும், அமெரிக்காவும் விரும்பவில்லையென்றும்,

ஆதலாலேயே இலங்கைக்கு எதிரான அனைத்துலக நெருக்கடிகள் அதிகரிக்கின்றன என்று வாதத்திற்கு வலுச்சேர்க்கும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இலங்கைத் தீவில் அதிகரித்த வரும் சீனாவின் மேலாண்மை என்பது பலகாரணிகளில் ஒன்றாக இருக்கலாமே தவிர, அது ஒரு பிரதான காரணியாக இன்றுவரை வளர்ச்சியடைவில்லை என்பதே நிகழ்கால மெய்நிலை.

சீனாவுடன், அமெரிக்காவும் இந்தியாவும் மிக இறுக்கமான பொருளாதார செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளன. தமது மண்ணில் சீனா ஆழமாகக் காலூன்றுவதற்கு தாமே வழியமைத்துக் கொடுக்கும் அமெரிக்காவும் இந்தியாவும், சீனா, இலங்கைத் தீவில் காலூன்றுவதை தமக்கான பெரும் அச்சுறுத்தலாக கணிப்பதற்கான சந்தர்ப்பங்கள் குறைவு.

சீனா மிகப்பெரும் சக்தியாக வளர்ந்து வருகிறது என்பதுவும், இது ஏனைய சக்திமிக்க தரப்புகளுக்கு நல்ல செய்தியில்லை என்பதும் உண்மை. ஆனால், அதன் காரணமாக எந்தக் கட்டத்திலும் சீனாவுடன் ஒரு போருக்கோ அல்லது ஆழமான முரண்பாடுகளை உருவாக்கும் நிலைக்கோ அமெரிக்காவோ, இந்தியாவோ வித்திடப்போவதில்லை.

கடந்த காலங்களைவிட, அண்மைய ஆண்டுகளிலேயே சீனாவுடனான இரு தரப்பு வர்த்தக உடன்பாடுகள் கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன், மும்முரமான வாணிபங்களிலும் இந்தியாவும் அமெரிக்காவும் ஈடுபட்டுவருகின்றன.

அரசியலிலும் பார்க்க பொருளாதார நலன்களே அனைத்துலக உறவுகளை வடிவமைக்கின்றன. அவற்றுக்கு உதாரணமாக, இந்தியா உள்விவகார அமைச்சு தகவல்களின் படி, 2006-2007 வரை இந்தியாவில் 900 ஆக காணப்பட்ட சீனத் தொழிலாளர்களின் எண்ணிக்கை, 2010 ஜூனில் 7,000 ஐத் தாண்டிவிட்டது.

இந்தியாவின் பாதுகாப்பு, விமான மற்றும் துறைமுகப் போக்குவரத்து தவிர்ந்த ஏனைய அனைத்து முக்கியமான துறைகளிலுமே சீனாவின் தொழிலாளர்கள் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள். மின்வலு, மின்சக்தி எரிபொருள், தொலைத்தொடர்பு உட்பட்ட முக்கியமான துறைகளும் இதற்குள் உள்ளடக்கம்.

2006 இல் 16 பில்லியன் அமெரிக்க டொலராக காணப்பட்ட சீனாவுடனான இந்தியாவின் வர்த்தகம், 2010 இன் இறுதிக் காலப்பகுதியில், 42 பில்லியன் அமெரிக்க டொலரைத் தாண்டிவிட்டது. இதில், 30 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இறக்குமதியையும், 11.6 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான ஏற்றுமதியையும் சீனாவுடன் இந்தியா மேற்கொள்கிறது.

பொருளாதார ஒத்துழைப்பின் நன்மை கருதி, அதன் தாக்கம் உணர்ந்து, பாகிஸ்தானின் கட்டுப்பாட்டிலுள்ள காஷ்மீர் பகுதியில் சுமார் 11000 சீனத் துருப்பினர் நிலைகொண்டுள்ளனர் என்ற மிகுந்த சர்ச்சைக்குரிய செய்தியை சீனாவின் வெளிவிவகாரத்துறை பேச்சாளர் ஜியாங் யூ மறுத்துள்ளார்.

'இந்தியாவுக்கும் - சீனாவுக்கும், பாகிஸ்தானுக்கும் - சீனாவுக்கும் இடையில் நிலவும் உறவில் விரிசலை ஏற்படுத்துவதற்காக சில சக்திகள் திரிபுபடுத்தி வெளியிடும் கருத்துக்கள்' என அவர் தெரிவித்துள்ளார். இதனை இந்தியத் தரப்பினரும் மறுக்கவில்லை.

மாறாக, சுயாதீனமான முறையில் அந்தச் செய்தி உறுதிப்படுத்தப்படும் என தெரிவித்துள்ளன.

இவையனைத்தையும் விஞ்சுமாற் போலவே, அமெரிக்காவுக்கும் சீனாவுக்குமான வர்த்தக மற்றும் வாணிப உறவுகள் வளர்ச்சியடைந்து செல்கின்றன.

இவையனைத்தும் சில சிறு உதாரணங்கள் மட்டுமே. ஆகவே, இலங்கைத் தீவில் அதிகரித்து வரும் சீனாவின் மேலாண்மை காரணமாக ஏனைய சர்வதேச சக்திகள் தமிழ்மக்களுக்கு ஆதரவாக மாறும் அல்லது செயற்படும் என்று மீண்டும் ஒரு மாயைக்குள் விழாமல், காலத்திற்கும் நடைமுறைக்கும் ஏற்றவகையில் பூகோள அரசியலின் போக்குக்கு அமைவாக, நீண்ட காலத்திற்கு அமைவான திட்டங்களைத் தீட்டி, அதற்கு வடிவம்கொடுத்து எமக்கான உரிமையையும், இறைமையையும் மீளப் பெற்றுக் கொள்ளவதற்கான ஆக்க பூர்வமான நடவடிக்கைகளில் தமிழ்மக்கள் ஈடுபடுவதே இன்றைய காலத்தின் தேவையும், கட்டாயமும் ஆகும்.

- நிர்மானுசன் பாலசுந்தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்புப் பணத்தை உடனே மீட்டு கொண்டு வர வழியில்லை: பிரதமர்



## அரசின் நிலைப்பாட்டால் உருவாகி வருகிறது புதிய சர்ச்சை

டில்லி:

இந்தியாவின் பொருளாதாரம் கொள்ளையடிக்கப்பட்டு, வெளிநாட்டு வங்கிகளில் கறுப்புப் பணமாக முடக்கி வைக்கப்பட்டிருக்கிறது என்று உச்சநீதிமன்றம் கடுமையாக சாடியுள்ள நிலையில், கறுப்புப் பணத்தை மீட்டு கொண்டு வர உடனடி தீர்வு எதுவும் இல்லை என்று கூறியுள்ளார் பிரதமர் மன்மோகன் சிங்.

கறுப்புப் பண விவகார வழக்கில் நேற்று முன்தினம் மத்திய அரசை மிகக் கடுமையாக சாடியது உச்சநீதிமன்றம். நாட்டையே கொள்ளையடித்திருக்கிறார்கள். நாட்டின் பொருளாதாரத்தை திருடியிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களின் பெயர்களை வெளியிட மத்திய அரசு தயங்குவது ஏன் என்று உச்சநீதிமன்றம் மத்திய அரசை கடுமையாக கேட்டுள்ளது. மேலும் இந்தப் பெயர்களை மத்திய அரசு வெளியிட்டேயாக வேண்டும் என்றும் கண்டித்துள்ளது. ஆனால் இதற்கு நேர்மாறாக பிரதமர் மன்மோகன் சிங் கருத்து தெரிவித்துள்ளார்.

உச்சநீதிமன்றத்தின் கண்டனம் குறித்து நேற்றுமுன்தினம் குடியரசுத் தலைவர் மாளிகையில் நடந்த அமைச்சரவை மாற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற பிரதமர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில், உச்சநீதிமன்றம் என்ன கூறியிருக்கிறது என்பது எனக்கு தெரியவில்லை. இருப்பினும் கறுப்புப் பணத்தை உடனடியாக மீட்டுக் கொண்டு வர நம்மிடம் எந்தத் தீர்வும் இல்லை.

கறுப்புப் பணம் தொடர்பாக அரசிடம் உள்ள தகவல்களை உச்ச நீதிமன்றத்துக்கு தெரிவிப்போம். அதேசமயம், இதை பகிரங்கமாக அனைவருக்கும் தெரியப்படுத்த முடியாது. அதில் பல சட்டச் சிக்கல்கள் உள்ளன.

நமக்கு சில தகவல்கள் (ஜெர்மனியின் லிச்சன்ஸ்டைன் வங்கியில் கறுப்புப் பணத்தைக் குவித்து வைத்துள்ளவர்கள் குறித்த பட்டியல்) வந்துள்ளன. அதேபோல மற்ற நாடுகளிடமிருந்தும் தகவல்களைப் பெறுவோம். இவற்றுக்கு உரியவர்களிடமிருந்து உரிய வரிகள் விதிக்கப்பட்டு அவை வசூலிக்கப்படும் என்றார் பிரதமர்.

பிரதமர் அளித்துள்ள பதிலைப் பார்க்கும் போது கறுப்புப் பணம் வைத்திருப்போர் குறித்த பட்டியலை நாட்டு மக்களுக்கு மத்திய அரசு தெரிவிக்காது என்று தெளி வாகத் தெரிய வருகிறது. மேலும், இந்தப் பணத்துக்கு ஒரு வரியை போட்டு அதை வசூலித்து விட்டு, அந்தப் பணத்தை வெள்ளைப் பணமாக மாற்றிக் கொள்ள மத்திய அரசே வழி வகுத்துக் கொடுக்கப் போவதும் தெரிய வருகிறது.

ஆனால் நேற்றுமுன்தினம் இதைத்தான் உச்சநீதிமன்றம் கடுமையாக கண்டித்தது. இதை ஏதோ ஒரு வரி ஏய்ப்புப் பிரச்சினை போல பார்க்கிறது மத்திய அரசு. ஆனால் உண்மையில் இது மிகப் பெரிய பொருளாதாரக் கொள்ளை என்று உச்சநீதிமன்றம் சாடியது குறிப்பிடத்தக்கது.

எனவே எதிர்வரும் நாட்களில் கறுப்புப் பண விவகாரம் மத்திய அரசுக்குப் புதிய தலைவலியைக் கொடுக்கும் என்று கருதப்படுகிறது.

## நானே முதல்வராக தொடருவேன்: எடியூரப்பா



பெங்களூர்:

நான் தான் முதல்வராக தொடருவேன் என முதல்வர் எடியூரப்பா கூறினார்.

பெங்களூர் லால்பாக் கண்காட்சியை ஆரம்பித்த வைத்த பின் நிருபர்களின் கேள்விக்கு பதிலளித்து பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

கவர்னரின் நடவடிக்கைக்கு பயந்து, டில்லி சென்றதாக சித்தராமையா கூறியுள்ளது, எனக்கு உற்சாகமளிக்கிறது, தைரியம் மூட்டுகிறது. கர்நாடக மக்கள் எனக்கு தைரியம் மூட்டுகின்றனர். இதனால், நான் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை.

வரும் இரண்டரை ஆண்டுகள், தொடர்ந்து நான் தான் முதல்வராக இருப்பேன். அடுத்து நடக்கும் தேர்தலிலும், பா.ஜ. தான் ஆட்சிக்கு வரும் என்றார்.

## நடிகர் விஜய் அ.தி.மு.க.வுக்கு ஆதரவாக பிரசாரம் செய்வாரா என்பதை அவரிடம் தான் கேட்கவேண்டும்

### செய்தியாளர்களின் கேள்விக்கு ஜெயா பதில்

சென்னை:

நடிகர் விஜய் எமக்கு ஆதரவாக பிரசாரம் செய்வாரா இல்லையா என்பதை அவரிடம் தான் கேட்க வேண்டும் என்று கூறியுள்ளார் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா.



இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் மேலும் கூறுகையில்,

நடிகர் விஜயின் தந்தை என்னை சந்தித்துப் பேசிய போதும், எதிர்வரும் தேர்தலின் போது அ.தி.மு.க.வுக்காக விஜய் பிரசாரம் செய்வாரா என்பதை அவரிடம்தான் கேட்க வேண்டும்.

காங்கிரஸ் அரசு, மக்களுக்கு எதிராக எப்போது எல்லாம் செயற்பட்டிருக்கிறதோ அப்போது எல்லாம் அதை எதிர்த்து போராட கருத்து தெரிவிக்க ஒரு போதும் நாங்கள் தயங்கியது இல்லை. மேலும் காங்கிரஸ்-அ.தி.மு.க. கூட்டணி வரும் என்று நான் ஒரு போதும் சொல்லவில்லை.

மேலும் கூட்டணி தொடர்பாகவும், தொகுதிப் பங்கீடு தொடர்பாகவும் சில கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. கார்த்திக் தலைமையில் இயங்கும் கட்சியுடன் கூட்டணி பற்றி பேச்சுவார்த்தை இன்று (நேற்று) முடிந்து, அவரது கட்சி அ.தி. மு.க. தலைமையிலான கூட்டணியை ஆதரிப்பது என்ற முடிவெடுத்துள்ளது. மற்ற கட் சிகளுடன் கூட்டணி சேருவது குறித்த முடிவுகள் எடுக்கப்பட்டதும் ஒவ்வொன்றாக உங்களுக்கு அறிவிக்கப்படும் என்றார்.

## சபரிமலைக்கு ஆண் வேடத்தில் வந்த இரு பெண்களால் பரபரப்பு

சபரிமலை

சபரிமலைக்கு ஆண் வேடமணிந்து வந்த இரண்டு இளம்பெண்களை இனங்கண்ட பொலிஸார் அவர்களை வழிமறித்து திருப்பியனுப்பினர்.

சபரிமலை ஐயப்பன் கோவிலுக்கு 10 முதல் 50 வயது வரை உள்ள பெண்கள் வர தடை விதிக்கப்பட்டுள்ளது. இதை மீறி வருபவர்களை பம்பையிலேயே பொலிஸார் தடுத்து நிறுத்தி திருப்பி அனுப்புவது வழக்கம்.

இந்நிலையில் நேற்று முன்தினம் பெங்களூரில் இருந்து வந்த 20 பக்தர்கள் பம் பையில் இருந்து சந்நிதானத்திற்குச் சென்று கொண்டிருந்தனர். அதில் இருவரின் நடவடி க்கையில் பொலிஸாருக்கு சந்தேகம் வந்தது.

மேலும் அவர்கள் தலைமுடியை கறுப்புத் துணியால் கட்டி இருமுடியை போர்வையால் சுற்றி அதன்மேல் வைத்து மறைத்திருந்ததோடு, கறுப்பு நிற காற்சட்டையும், மேற்சட்டையும் அணிந்திருந்ததினால் பொலிஸாரின் சந்தேகம் வலுத்தது. இதனையடுத்து அவர்களின் அருகில் சென்ற பொலிஸார் விசாரித்ததில் இருவரும் இளம் பெண்கள் எனத் தெரியவந்தது. இதனால் அவ்விருவரையும் பொலிஸார் பம்பைக்கு திருப்பி அனுப்பினர்.

எனினும் அங்கிருந்து செல்லாத அவர்கள் சிறிது நேரம் கழித்து பக்தர்க ளோடு பக்தர்களாக சந்நிதானம் செல்ல முனைந்தனர். ஆனால் அப்போதும் அங்கு விரைந்த பொலிஸாரினால் அவ்விருவரும் தடுத்து நிறுத்தப்பட்டு எச்சரிக்கப்பட்டார்கள்.

இதன்போது தாங்கள் அரவாணிகள் என்பதை அவர்கள் தெரிவித்த போதும் அதனையேற்க பொலிஸார் மறுத்து அங்கிருந்து திருப்பியனுப்பினர்.

## வங்கிப் பாதுகாப்பு பெட்டகத்திலிருந்து 4 1/2 கோடி ரூபா பெறுமதியான வைரங்கள் திருட்டு

### நால்வர் கைது

மும்பை,

வங்கியொன்றின் பாதுகாப்புப் பெட்டகத்தில் வைக்கப்பட்டிருந்து 4 1/2 கோடி ரூபா பெறுமதியான வைரங்களை திருடிய குற்றச்சாட்டில் பொலிஸ் குற்றப்பிரிவினரால் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மும்பையை சேர்ந்தவர் வைர வியாபாரி மேஹூல் தோஷி. இவர் மும்பை ஓபரா ஹவுஸ் பகுதியில் அமைந்துள்ள ஸ்டேட் வங்கி கிளை பாதுகாப்புப் பெட்டகத்தில் வைத்திருந்த ஒரு கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள வைரங்கள் திருடப்பட்டு விட்டன.

இது தொடர்பாக சம்சுதீன் ஆஸ்மி, அஜய் மேத்தா, பரீத் ஹாஸ்மி, இவர்களின் நண்பர் சந்திராசென் பொர்டே ஆகியோரை மும்பை பொலிஸ் குற்றப்பிரிவு கைது செய்தனர்.

விசாரணையில், அவர்கள் அனைவரும், கடந்த 3 ஆண்டுகளில் அந்த வங்கியில் கள்ளச்சாவி மூலமாக 14 பாதுகாப்புப் பெட்டகத்திலிருந்த ரூ.4 கோடியே 40 இலட்சம் மதிப்புள்ள வைரங்களை திருடியது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து திருடப்பட்ட வைரங்கள் அனைத்தையும், குஜராத்தில் வல்சாத்தில் உள்ள மேத்தாவின் வீட்டில் இருந்து பொலிஸார் கைப்பற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வடக்கு மாகாணக் கல்வித்திணைக்கள அலுவலகம் யாழ்ப்பாணம் மருதனார்மடத்தில் திறக்கப்பட்டு பால் காய்ச்சும் நிகழ்வு நடைபெறுவதையும், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவன், வடமாகாண கல்விப்பணிப்பாளர் விக்கினேஸ்வரன் மற்றும் அரச அதிகாரிகள், ஆசிரியர்கள் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# யாழ். போதனா வைத்திய சாலையில் 3 மாடிக்கட்டடத்திற்கு இன்று அடிக்கல்

யாழ். குடாநாட்டு மக்கள் நன்மையைக் கருத்தில் கொண்டு ஜப்பான் அரசின் நிதியுதவியுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் மூன்று மாடிக் கட்டடத் தொகுதி அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு வைத்தியசாலை வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு வர்த்தக அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கைக்கான ஜப்பானிய உயர் ஸ்தானிகர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இலங்கை மற்றும் ஜப்பான் நாடுகளுக்கிடையிலான நட்புறவின் ஒரு பகுதியாக தொழில் நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்தும் பொருட்டு ஜப்பான் அரசினால் வழங்கப்பட்ட 2 ஆயிரத்து 900 மில்லியன் ரூபா நிதியுதவியினால் 3 மாடிக் கட்டடத் தொகுதியின் நிர்மாணப் பணிகள் ஆரம்பமாகவுள்ளன.

## கிழக்கு மாகாண..(தொடர்ச்சி)

ஏற்பட்டிருந்தது.

அதன்போது, மாகாண சபை உறுப்பினரும் அவரது ஆதரவாளர்களும் பிரதேச செயலாளர் அலுவலகத்தைத் தாக்கி சேதப்படுத்தியதாக பிரதேச செயலாளர் குற்றம் சாட்டியிருந்தார். அதனை மாகாண சபை உறுப்பினர் பிரசாந்தன் மறுத்திருந்தார்.

ஆயினும், பிரதேசச் செயலாளர் செய்திருந்த முறைப்பாட்டை அடுத்து அவரைக் கைதுசெய்வதற்கான விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்திருந்தனர். அத்துடன், அவரைக் கைதுசெய்யுமாறு கோரி நேற்று மட்டக்களப்பு-ஆரையம்பதியில் பொது மக்களின் ஆர்ப்பாட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அவ்வாறான நிலையில் மாகாண சபை உறுப்பினர் பூ. பிரசாந்தன் நேரடியாக நீதிமன்றில் சரணடைந்துள்ளார்.

## ஆட்கடத்தலை... (தொடர்ச்சி)

அமைச்சர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

ஒட்டாவா சிட்டிஸன் பத்திரிகையே விடுதலைப் புலிகளின் தலைவர்கள் கனடாவில் ஒன்றிணைவதாக தெரிவித்திருந்தது.

அத்துடன், சுமார் 400 இலங்கை தமிழர்களை ஏற்றிய கப்பல்கள் கனடாவுக்கு சென்று கொண்டிருப்பதாகவும் ஒட்டாவா சிட்டிஸன் குறிப்பிட்டிருந்தது.

இந்த நிலையில் தமது நாட்டுக்கான ஆட்கடத்தல் தொடர்பாக புதிய தகவல்கள் எவையும் தற்போதைக்கு இல்லை என்றும் கனேடிய அமைச்சர் விக்டௌவ்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

## ஐக்கிய தேசிய கட்சி..... (2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு திருமதி விஜயகலா மகேஸ்வரன் எம்.பி.யும் வன்னி மாவட்டத்துக்கு சுவாமிநாதன் எம்.பி.யும் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கிலும் கிழக்கிலும் சில தினங்களில் வேட்பாளர் தெரிவுகள் நிறைவுபெற்றுவிடும். விஜயகலா எம்.பி. யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து வேட்பாளர் தெரிவு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றார்.

மேலும் எம்.பி. க்களான சுவாமிநாதன் மற்றும் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன ஆகியோர் வன்னி மாவட்டத்துக்கு எதிர்வரும் திங்கட்கிழமை விஜயம் செய்யவுள்ளனர். அவர்கள் அங்கு விஜயம் செய்து வேட்பாளர் தெரிவு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

அத்துடன் கிழக்கு மாகாணத்திலும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான வேட்பாளர் தெரிவுகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

## யாழ். தேர்தல்... (தொடர்ச்சி)

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டமாக உள்ளது. அந்த வகையில் இம்முறை உள்ளூராட்சிமன்ற தேர்தலின்போது யாழ். மாநகர சபைக்கு தேர்தல் நடத்தப்படமாட்டாது.

அந்த வகையில் யாழ். மாநகர சபை தவிர்ந்த யாழ்ப்பாண மாவட்டத்தின் 16 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் கிளிநொச்சியில் 3 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இம்முறை தேர்தல் நடைபெறும்.

யாழ்ப்பாணத்தில் தேர்தல் நடைபெறவுள்ள 16 உள்ளூராட்சி மன்றங்களில் 13 பிரதேச சபைகளும் 3 நகர சபைகளும் உள்ளடங்குகின்றன. யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி உள்ளடங்களாக யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் 19 உள்ளூராட்சிமன்றங்ளுக்கு தேர்தல் நடைபெறும்.

அதன்படி தேர்தலில் ஆறு இலட்சத்து 96 ஆயிரத்து 587 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

இம்முறை உள்ளூராட்சிமன்ற தேர்தல் 2009 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் பிரகாரமே நடைபெறவுள்ளது.

## குடாநாட்டில்... (தொடர்ச்சி)

இன்றேல் எங்களுடைய சாதாரணமான சந்தேகம் உண்மையாகிவிடும் என்றும் கூட்டமைப்பு சுட்டிக் காட்டியது.

பாராளுமன்றத்தில் நேற்று சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றும்போதே கூட்டமைப்பின் எம்.பி.யான எம்.சுமந்திரன் இவ்வாறு தெரிவித்தார். அவர் இங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், இரண்டு தடவைகள் ஒழுங்கு பிரச்சினையை எழுப்பிய ஆளும் கட்சியின் எம்.பி.யான ஏ.எச்.எம்.அஸ்வர் பிரேரணையை சமர்ப்பிப்பதற்கு ஓர் ஒழுங்கு இருக்கின்றது. பிரேரணையை வாசிக்க வேண்டும். பின்னர் அதனை முன்மொழிய வேண்டும் என்று சுட்டிக்காட்டினார்.

பிரேரணையை சமர்ப்பித்து சுமந்திரன் எம்.பி. தொடர்ந்து உரையாற்றுகையில்,

குடாநாட்டில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் கூட்டமைப்பு 4ஆம் திகதி விடயத்தை சபைக்கு கொண்டுவரவிருந்தது. எனினும் மொழிபெயர்ப்பு பிரச்சினையால் மறுநாளே சமர்ப்பிக்க முடிந்தது. பல்வேறு சம்பவங்கள் இடம் பெற்றன.

பாதுகாப்பு பிரிவினரின் தகவல்களின் பிரகாரம் சம்பவத்துடன் தொடர்புடைய ஈ.பி.டி.பி.யினர் கைது செய்யப்பட்டுள்ளனர். விடயம் தொடர்பில் கூட்டமைப்பினர் பிரேரணையை கொண்டு வருவதற்கு முன்னர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முந்திக்கொண்டார். இரண்டிற்குமே அரசாங்கம் பதிலளிக்கவில்லை.

குடாநாட்டில் இடம்பெற்ற 24 சம்பவங்களுக்கும் ஒன்றுடன் ஒன்று ஒத்ததன்மை இருக்கின்றது. இறந்தவர்களின் சடலங்கள் கிணற்றில் இருந்தே மீட்கப்பட்டுள்ளன. அதுவும் சித்திரவதைக்கு உட்படுத்தி கொலைச் செய்ததன் பின்னரே சடலத்தை கிணற்றில் வீசியுள்ளனர்.

யாழ்ப்பாணத்திற்கு சென்றிருந்த ஜனாதிபதி பாதாள உலக கோஷ்டியினரை துடைத்தெறிவதாக காத்திரமான கருத்தொன்றை முன்வைத்தார். பாதாள உலக கோஷ்டியினர் யாழ்ப்பாணத்தில் இல்லை. குடாநாட்டு விடயத்தில் ஜனாதிபதி நீண்டதூரம் சென்றிருக்க வேண்டிய தேவையில்லை. மிக எளிமையாக கண்டிருக்கலாம். குடாநாட்டு மக்களை அச்சுறுத்தி பணம் பறிக்கும் பொருட்களை சூறையாடும் குழுசெயற்படுகின்றது. அது அரசாங்கத்துக்கு நெருங்கிய குழுவாகும்.

24 சம்பவங்களில் துப்பாக்கி சூட்டினால் கொலை செய்யப்பட்ட சம்பவங்களும் இருக்கின்றன. அதில் ஒரு சம்பவத்தை பார்க்கின்றபோது குறிபார்த்து சுடுவதில் நன்கு பயிற்சி பெற்ற ஒருவரே செய்துள்ளார். அவருடைய கால் அடையாளம் அவ்வீட்டின் அடுப்படியில் இருக்கின்றது.

சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்தி குற்றவாளிகளை கைதுசெய்யாமல் அரசாங்கம் எதிர்மறையாக பகிரங்கப்படுத்தலை தானாகவே மேற்கொண்டு வருகின்றது.

பாதுகாப்புப் படையினர் முழு நாட்டையும் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் வன்செயல்களை நிறுத்துவதற்கு அரசாங்கம் விருப்பமின்றி செயற்பட்டு வருகின்றது. இன்றேல் அரசாங்கம் குருட்டு கண்ணைக் காட்டிக்கொண்டு ஈ.பி.டி.பி.யின் செயற்பாடுகளை கண்டும் காணாமல் இருக்கின்றதா?

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையின் பிரகாரம் சட்டவிரோதமான ஆயுதங்களை வைத்திருப்போர் இருக்கின்றனர் என்று குறிப்பிட்டுள்ளது. சாட்சியமளித்தவர்களில் பலரும் மேற்படி விடயத்தை முன்வைத்துள்ளனர். ஈ.பி.டி.பி.யும் சட்டவிரோத ஆயுதங்களை வைத்துள்ளது. இது அரசாங்கத்தின் ஒரு பகுதியாகவே செயற்படுகின்றது.

24 சம்பவங்களில் 2, 3 சம்பவங்கள் விசாரிக்கப்பட்டு 2, 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளமை விநோதமானது. நாட்டிலுள்ள படையினரில் 10 வீதமான படையினர் வடக்கில் இருக்கின்றனர். ஆங்கு சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெறுவதற்கு அனுமதியளித்தால் சம்பவங்களுடன் அரசாங்கத்துடன் நெருக்கமான குழு செயற்படுகின்றது என்ற சாதாரணமான எமது சந்தேகம் உண்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுகு வலியே போ போ



பெண்களைப் பாதிக்கும் பிரச்னைகளில் முதுகுவலி முக்கிய இடத்தைப் பிடித்து விட்டது. வீட்டிலிருக்கும் பெண்கள், அலுவலகத்துக்குப் போகும் பெண்கள் என வித்தியாசம் பார்க்காமல் அனைவரையும் இந்த வலி வாட்டி வதைக்கிறது.

குழந்தைகளை அவசர அவசரமாக எழுப்பி, சமைத்து பள்ளிக்கு அனுப்பி விட்டு, கணவரை அலுவலகத்துக்கு அனுப்பி விட்டு எல்லா வேலைகளையும் முடித்து டி.வி. முன்னால் அமரும் குடும்பத் தலைவிகளுக்கு அடுத்த சில நிமிடங்களில் முதுதுவலி பின்னியெடுக்கும்.

இதேபோல், அவசர அவசரமாக பஸ்ஸைப் பிடித்து அலுவலகத்துக்கு செல்லும் பெண்கள், இருக்கையில் அமர்ந்ததும் முதுகுவலி ஆரம்பிக்கும்.

அண்மைக்காலமாக உலகளாவியப் பிரச்னையாக மாறி வரும் முதுகுவலியின் பாதிப்பு பத்து பேரில் எட்டு பேருக்கு இருப்பதாக மருத்துவ ஆய்வறிக்கை கூறுகிறது. குறிப்பாக பெண்களே இந் நோயால் அதிகம் பாதிக்கப்படுவதாகவும், பேறுகாலத்தின்போது 50 சதவீத பெண்கள் இந்த வலியால் அவதியுறுவதாகவும் ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மிக்ஸி, கிரைண்டர், வாஷிங் - மெஷின் என பெண்களின் அன்றாட அலுவல்கள் எளிதாகி, உடல் உழைப்பு குறைந்ததே முதுகு வலிக்கு மூலக் காரணம் என்று கூறுகின்றனர் மருத்துவர்கள்.

முதுகுவலிக்கான காரணத்தை ஆராயும் முன், தண்டுவடத்தின் வடிவமைப்பை அறிந்துக் கொள்வது அவசியம்.

நரம்புகள், மூட்டுகள், தசைகள், தசை நாண்கள் மற்றும் தசைநார்கள் ஒன்றோடொன்று இணைந்திருக்கும் சிக்கலான பிணையம் தண்டுவடம். தோள்பட்டை, மார்பு, இடுப்பு, வயிறு என அனைத்து உறுப்புகளின் தசைகளும் முதுகு தண்டுவடத்தோடு இணைந்திருக்கின்றன.

அதிசய வடிவமைப்பு கொண்ட தண்டுவடத்தில் 33 உருண்டைகள் உள்ளன. இவை அனைத்தும் நீட்சித்தன்மை கொண்ட தசைநார்களால் பிரிக்கப்பட்டுள்ளன. இதனால், நாம் எத்தனை முறை எம்பிக் குதித்தாலும், துள்ளினாலும் தண்டுவடம் 'ஸ்பிரிங்' போல் செயல்பட்டு நமது உடலைப் பாதுகாக்கிறது.

அரக்கப் பரக்க வேலை செய்யும்போது தண்டுவடத்தின் தசைகள் இறுகி விடுகின்றன. வேலை முடிந்து ஓய்வு எடுக்கும்போது இவை இறுக்கம் தளர்ந்து இயல்பு நிலைக்கு திரும்பப் பார்க்கின்றன. இதன் விளைவே முதுகு வலி என்று கூறப்படுகிறது.

கழுத்து வலி, மேல்முதுகு வலி, கீழ் முதுகு வலி என மூன்று வகைகளாக முதுகு வலி பிரிக்கப்படுகிறது.

அளவுக்கு அதிகமான பாரம் தூக்குவது, தவறான முறையில் நிற்பது, நடப்பது, அமர்வது, தூங்குவது, இருசக்கர வாகனத்தில் செல்லும்போது பள்ளத்தில் ஏறி, இறங்குவது, நான்கு சக்கர வாகனங்களில் திடீர் பிரேக் போடும்போது, குளியலறை, மாடிப்படிகளில் வழுக்கி விழுவது என பல்வேறு காரணங்களால் முதுகு வலி பாதிப்பு ஏற்படுகிறது.

இவை தவிர எலும்பு சம்பந்தமான நோய்களின் பாதிப்புகளாலும் இந் நோய் அழையா விருந்தாளியாக தொற்றிக் கொள்கிறது.

உயிருக்கு ஆபத்தில்லாத இந் நோய்க்கு இதுவரை எந்த மாய, மந்திர மருந்தும் கண்டுபிடிக்கப்படவில்லை. வருங்காலத்தில் கண்டுபிடிக்கப்படுவதும் அரிது என்றே தோன்றுகிறது.

வலி நிவாரணிகள், மிகவும் சிக்கலான நிலையில் அறுவைச் சிகிச்சை ஆகியவையே முதுகு வலிக்கு தீர்வாக உள்ளன. எனினும், பெண்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் எளிய பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலம் முதுகு வலியிலிருந்து நிவாரணம் பெறலாம் என்கின்றனர் மருத்துவர்கள்.

நிற்கும்போது உடலின் எடையை இரு கால்களும் தாங்கியிருக்கும்படி நிற்க வேண்டும்.

கூன் முதுகிட்டு அமர்வது, நடக்கும் போது கூன் போடுவது, பொருள்களை தூக்கும்போது முதுகை வளைப்பது அறவே கூடாது.

தண்ணீர் வாளி, குடங்களை தூக்கும் போது முதுகு நேராக இருப்பது அவசியம்.

அலுவலகத்துக்கு செல்லும் பெண்கள் இருக்கையில் அமரும்போது முதுகுப் பக்கத்துக்கு குஷன் வைத்த தலையணையை வைத்துக் கொள்ளலாம்.

இருக்கையை பின்புறம் சாய்வாக வைத்துக் கொள்வது நல்லது. கார் ஓட்டுபவர்கள் இருக்கையை 15 டிகிரி பாகை சாய்வாக வைத்துக் கொள்ளலாம்.

ஹை ஹீல்ஸ் காலணி, ஷூக்களை தவிர்க்க வேண்டும்.

குப்புறப்படுத்து தூங்குவது கூடாது. இதனால், முதுகு வலி ஏற்படுவதோடு முகத் தசைகளும் சீக்கிரமே முதுமையாகி விடும்.

ஒரு பக்கம் சரிந்து முழங்கால்களை சற்று மடித்துப் படுப்பதே தூங்குவதற்கு ஏற்ற நிலையாகும்.

முழங்கால்களுக்கு இடையே சிறிய தலையணையை வைத்துக் கொள்வது சொகுசாக அமையும்.

மிகவும் மென்மையாக மெத்தென்று இருக்கும் படுக்கைகளைத் தவிர்க்க வேண்டும். கடினமான படுக்கையே முதுகுக்கு இதமளிக்கும்.

இவை தவிர நீந்துவது, காலை, மாலையில் விரைவு நடைப்பயிற்சி என அன்றாட அலுவல்களை அமைத்துக் கொண்டால் முதுகு வலிக்கு விரைவில் 'குட் பை' கூறிவிடலாம்.



## மசாலா சாதம்

### தேவையான பொருட்கள்

சம்பா அரிசி அல்லது சிவப்புபச்சை அரிசி - 1 சுண்டு,

பிஞ்சுக் கத்திரிக்காய் - 250 கிராம், சின்ன வெங்காயம் - 100 கிராம், பச்சைமிளகாய் - 3, மஞ்சள்தூள் - 1/4 தேக்கரண்டி, மிளகாய்த்தூள் - 1 தேக்கரண்டி, கறிவேப்பிலை,உப்பு - அளவாக, பழப்புளிக்கரைசல் -1 மேசைக்கரண்டி, கடுகு -1/2 தேக்கரண்டி, பெருஞ்சீரகம் -1/2 தேக்கரண்டி, நல்லெண்ணெய் -3 மேசைக்கரண்டி

### செய்முறை

அரிசியை உப்புச் சேர்த்துப் பதமாக வேகவைத்து எடுத்துக் கொள்ளவும்.

கத்தரிக்காய், வெங்காயம், பச்சைமிளகாய், கறிவேப்பிலை இவற்றைச் சுத்தஞ் செய்து குறுணலாக வெட்டிக் கொள்ளவும். நல்லெண்ணெயில் கத்தரிக்காயைப் பொன்னிறமாகப் பொரித்து எடுக்கவும்.

வெங்காயம், பச்சைமிளகாய், கறிவேப்பிலை, கடுகு,பெருஞ்சீரகம் இவற்றைத் தயாரித்துக் கொள்ளவும்.

தாளிக்கும் பொருட்கள் பொன்னிறமாகியதும் பொரித்த கத்தரிக்காய், மஞ்சட் தூள், மிளகாய்த்தூள், புளிக் கரைசல், உப்பு இவற்றைச் சேர்த்துக் கலக்கவும்.

பின் சோற்றையும் இவற்றுடன் சேர்த்து நன்கு கலந்து கொள்ளவும்.

மசாலா சாதம் தயார்.



## கோழி இறைச்சி மசாலா

### தேவையான பொருட்கள்

கோழி இறைச்சி - 250 கிராம், வெங்காயம் - 50 கிராம், வெள்ளைப்பூடு - 3 பல்லு, மஞ்சட்தூள் - 1/2 தேக்கரண்டி, மிளகு தூள் - 1/4 தேக்கரண்டி, கறிவேப்பிலை, றம்பை - சிறிதளவு, ஏலம், கறுவா, உப்பு - அளவாக மாஜரின் - 1 மே.கரண்டி, - அளவாக

### செய்முறை

கோழி இறைச்சியைச் சுத்தம் செய்து நடுத்தரத் துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும்.

இறைச்சியுடன் மஞ்சள் தூள், மிளகுத்தூள் சிறிதளவு, உப்பும் சேர்த்துக் கொள்ளவும்.

ஒரு தம்ளர் நீர் விட்டு மெல்லிய நெருப்பில் மூடி வேக வைத்த நீர் வற்றியவுடன் இறக்கவும்.

மாஜரினைச் சூடாக்கி வெங்காயத்தை இட்டுப் பொரிக்கவும்.

வெள்ளைப் பூடைத் தட்டிக் கொள்ளவும். வெங்காயம் பொரித்துக் கொண்டிருக்கும் போது கறிவேப்பிலை, றம்பை, ஏலம், கறுவா அரைத்த பூடு இவற்றை இட்டுத் தாளிக்குவம்.

தாளிதம் பொன்னிறமாகியதும் அவித்த இறைச்சியை அதனுள் இடவும்.

மிளகாய்த்தூளையும் சேர்த்து நன்கு கிளறி சிறிது நேரத்தின் பின் இறக்கிக் கொள்ளவும்.

மங்கையரே உங்களின் சமையற் கலை, அழகுக் குறிப்புக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்
யாழ்.ஓசை வீரகேசரி கிளைக் காரியாலயம்
117, ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலா மையமாகும் நிலாவரை

## வற்றா நீர் நிலையும் நவசைலேஸ்வரமும்

யாழ்.மாவட்டத்தில் நீர்ப்பாசனத்திட்டம் ஒன்று நடைமுறையில் இருந்தது. அதனூடாக நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலத்தில் வாழைச்செய்கை மேற்கொள்ளப்பட்டது. வாழைச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு பல்வேறு விதமான வசதி வாய்ப்புக்கள் அந்த நீர்ப் பாசனத்திட்டத்தின் மூலம் கிடைத்தன. வந்தது. இந்த நீர்ப்பாசனத் திட்டம் 1949 ஆம் ஆண்டுகாலப்பகுதியில் இருந்து 1987 வரை ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் காலையும் மாலையும் நீர்ப்பாசனம் தினசரி 6 மணி நேரம் நடைபெற்று வந்தது. நிலாவரை வற்றா நீர் ஊற்றால் இருந்து 8 அங்குல விட்டமுள்ள குழாய் மூலம் நீர் இறைக்கப்பட்டது. 8 கிலோ மீற்றர் வரை நீளமான மான சீமெந்து வாய்க்கால் மூலம் நீர் வீதியோரமாக எடுத்துச் செல்லப்பட்டு வாழைத்தோட்டங்களுக்கு பாய்ச்சப்பட்டது. எஞ்சிய நீர் சிறுப்பிட்டி பகுதியின் நெற்பயிர்ச்செய்கைக்கு பயன்பட்டது. சுன்னாகம் வீதியில் வீதிக்கு வடக்கு புறமாகவும் இராசா வீதியில் வீதிக்கு கிழக்கு புறமாகவும் 3X3 அடி ஆழம் அகலம் கொண்ட சீமெந்து வாய்க்காலின் அழிபாடுகள் இன்றும் காணப்படுகின்றன. யுத்த வடுக்களாக நவசைலேஸ்வரத்தின் வாசலில் அமைந்துள்ள வற்றா நீர் ஊற்று 52 அடி நீளம் 37 அகலம் கொண்ட நீள் சதுர வடிவமைப்பில் நான்கு புறமும் சீமெந்தால் கட்டப்பட்டு பாதுகாப்பு சுவர் மற்றும் இரும்புக் கேடர்களால் வேலி போடப்பட்டுள்ளது. நில மட்டத்தில் இருந்து 15 அடியளவில் நீர் காணப்படுகிறது. நீரின் ஆழம் 382 அடிக்கு குறையாது எனக் கூறப்படுகின்றது. 'நீர் மட்டத்தில் இருந்த 30 அடி வரையில் உள்ள நீர் மக்களின் பயன்பாட்டிற்கு பயன்படுத்தக்கூடியது. 30-82 அடி வரையில் உ ள்ள நீர் உவர்தன்மை கொண்ட வன்நீர் 82 அடிக்கு கீழ் உள்ள நீர் உப்பு நீர் சமுத்திர நீரோட்டங்களுடன் தொடர்புடையது என நிலாவரை நீர்ப்பாசனத்திட்டத்தின் நீர் இறைக்கும் 'பம்' ஒப்பரேட்டரும், பொறுப்பாளராகவும் இறுதி வரை கடமையாற்றிய வேலுப்பிள்ளை அருணாசலம் கூறுகின்றார்.

நிலாவரை நீர் நிலை தொடர்பாக புராண இதிகாசங்களுடன் தொடர்புபடுத்தி சமய ரீதியில் கதைகள் கருத்துக்கள் கூறப்பட்ட போதிலும் விஞ்ஞான ரீதியில் புவிச்சரிதவியலாளர்கள் முன்வைக்கும் கருத்துக்கள் நீர் நிலைக்கும்- யாழ்ப்பாண சுண்ணக்கல் நிலக்கீழ் நில உலுவங்களுக்கும் நெருங்கிய தொடர்புள்ளன என்பதாகும்.

யாழ்ப்பாணக் குடாநாடு 'மயோசின் கால' சுண்ணக்கற்களால் ஆனது. இந்தக் கற்களுக்கு மழை நீரை உட்புகவிடும் தன்மையுண்டு. மழை நீர் உட்கசிந்து பாறை நீராக தேங்கிநிற்கும்.

மழை நீர் காற்றின் ஊடாகவரும் போது அதனுடன் காபனீரொட்சைட் ($Co_2$) கலக்கின்றது. அந்த நிலையில் மழை நீர் காபோனிக் அமிலமாக ($H_2Co_3$) மாறுகின்றது. இங்குள்ள மயோசின் சுண்ணக்கற்கள் கல்சியம் காபனேற் ($CaCo_3$) என்ற இராசயன பதார்த்தை உடையதாகும். கல்சியம் காபனேற்றைக் காபோனிக் அமிலம் கரைத்துவிடக்கூடியது. இதன் காரணமாக சுண்ணக்கல் பாறைகளை கரைத்து நீர் உட்செல்லுகின்றது. பாறைகள் கரையும் போது சில இடங்களில் தரைகீழ் பெரிய பள்ளங்கள் உருவாகிவிடுகின்றன. இத்தகைய பள்ளங்கள் நீர் நிலைகளாகவும் பெரும் குகைகளாகவும் (தொண்டைமானாறு கெருடாவில் குகை) விளக்கமுடியும். இந்தவகையில் நிலாவரை, பொக்கனை, மானிப்பாய் உள்ளிட்ட இடங்களில் நீர் நிலைகள் தோன்றியது என விஞ்ஞான ரீதியிலான கருத்து முன்வைப்புக்கள் காணப்படுகின்றன.



நிலாவரை நீர்நிலை தொடர்பாக காலத்துக்கு காலம் வெளிநாட்டு ஆய்வாளர்கள் என்ற வகையில் செக்கோசிலோவாக்கியா, பிரித்தானியா, ஜேர்மனிய ஆய்வாளர்கள் ஆய்வுகளை மேற்கொண்டனர். இந்த ஆய்வுகள் மூலம் நிலாவரை வற்றா நீர் ஊற்றின் உள்ளார்ந்த நிலைகள் பல வெளிக்கொணரப்பட்டன. அத்துடன் இயல்புநிலையில் இருந்த காலப்பகுயில் நிலாவரைக் கிணற்று நீர் குறிப்பிட்ட ஆழங்களில் போத்தல் மூலம் பெறப்பட்டு நீரியல் ஆய்வு கூடத்தில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட தோடு அதன் அறிக்கைகளும் பேணப்பட்டன. யுத்தசூழ் நிலையில் அவை அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்தன.

யாழ்.மாவட்டத்தில் ஒரேயொரு நீர்ப்பாசனத்திட்டமாக இருந்து வந்த நிலாவரை வாழைப்பயிர் நீர்ப்பாசனத்திட்டம் மீண்டும் செயலுருப் பெறாதா என்ற ஏக்கம் விவசாயிகள் மத்தியில் உண்டு. இந்த நிலை யாழ். நகரத்துக்கான குடிநீர் தேவைக்கு பயன்படுத்துவதற்கு திட்டமுன் மொழிவுகள் இராச வீதியோரமாக மேற்கொள்ளப்பட்டு 8 அங்குல விட்டம் கொண்ட குழாய்கள் 10 கிலோ மீற்றர் தூரம் வரையில் நிலத்துக்கு கீழாக இணைப்புச் செய்யப்பட்ட நிலையில் இடை நிறுத்தம் செய்யப்பட்ட நிலையில் உள்ளது.

வாழைச்செய்கை அபிவிருத்தியில் சிறுப்பிட்டி - கோப்பாய் - உரும்பிராய் முக்கோண வலயம் முன்னெடுக்கப்பட விருப்பதால் யாழ்.குடாநாட்டு அபிவிருத்தியில் நிலாவரை நீர்ப்பாசனத் திட்டத்தை மீண்டும் முன்னெடுப்பது மிக மிக அவசியமாகும். நிலாவரை வற்றா நீர் நிலை பிரதேசம் சுற்றுலா மையமாகக் காணப்படுவதால் வலி.கிழக்கு பிரதேச சபை சுற்றுலா பயணிகளுக்கான மேலதிகவசதிகளை உருவாக்கி கொடுப்பதோடு பார்வையிடும் பயணிகளிடம் குறைந்த கட்டணம் ஒன்றை அறவீடு செய்வதன் மூலம் மேலும் சில அபிவிருத்தி முன்னெடுப்புக்களை மேற்கொள்ள முடியும் என்பது பொது சன அபிப்பிராயமாகும். (முற்றும்)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் மலர்

## கொன்றை வேந்தன்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஆலயம் தொழுவது சாலவும் நன்று
இல்லறம் அல்லது நல்லறம் அன்று
ஈயார் தேட்டை தீயார் கொள்வர்
உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்
ஏவா மக்கள் மீவா மருந்து
ஐயம் புகினும் செய்வனே செய்
ஒருவனைப் பற்றி ஓரகத்திரு

நேசராஜ்குமார் தமிழினி
தரம் 03
கிளிநொச்சி ம.வி.



## சீடர்கள்!



எழுகிணறு என்ற ஊரில் சீனு, வேணு, ராமு என்று மூன்று நண்பர்கள் இருந்தனர். அவர்கள் மூவருமே அறிவைத் தேடுவதில் நாட்டம் கொண்டிருந்தனர்.

"வெகு தொலைவில் துறவி ஒருவர் உள்ளார். அவர் சோதனை வைத்தே சீடர்களைச் சேர்ப்பார். நாம் அவரிடம் செல்வோம். சோதனையில் வெற்றி பெற்றாள் சீடர்களாகச் சேர்வோம். இல்லையேல் திரும்பி விடுவோம்," என்றான் சீனு. மற்ற இருவரும் அதற்குச் சம்மதித்தனர்.

பல நாட்கள் பயணம் செய்து துறவியின் குடிலை அடைந்தனர். "எங்களைச் சீடர்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும்!" என்று வேண்டினர்.

அருகே கிடந்த மரக்குச்சி ஒன்றைக் கையில் எடுத்த துறவி. "என் பின்னால் வாருங்கள்!" என்றார்.

தோட்டத்திற்குச் சென்றார். அவர்களும் பின்னாள் சென்றனர். அங்கே நிறைய பூக்கள் அழகாகப் பூத்திருந்தன. தன் கையிலிருந்த குச்சியினால் அந்தப் பூக்களை எல்லாம் அடித்து வீழ்த்தினார் அவர். அவர்கள் மூவரும் இதைப் பார்த்தனர். பிறகு அவர் குடிலுக்கு வந்தார். அவர்களும் அவருடன் வந்தனர்.

"நான் செய்ததை பாத்தீர்கள் அல்லவா? இதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்? நீங்கள் ஒவ்வொருவராகச் சொல்லுங்கள்!" என்றார் அவர்.

அதற்கு வேணு "மற்றவர்களைவிட தன்னை உயர்ந்தவனாக நினைக்கக் கூடாது. அப்படி நினைத்தால் அழிவு ஏற்படும். அதைத்தான் இந்தப் பூக்களின் நிலை காட்டுகிறது!" என்றான்.

அடுத்ததாக ராமு "தோற்றத்தில் அழகாக இருப்பவை எல்லாம் உயர்ந்தவை அல்ல அதைத்தான் இந்தப் பூக்களின் நிலை காட்டுகிறது!" என்றார்.

மூன்றாவதாக சீனு. "உயிர் இல்லாத குச்சி உயிர் உள்ள பூக்களுக்கு துன்பம் தந்தது. அறிவு இல்லாதவர்களால் அறிவு உள்ளவர்களுக்கு துன்பம் தர முடியும். இதைத்தான் இந்தப் பூக்களின் நிலை காட்டுகிறது!" என்றார்.

மகிழ்ந்த அவர் "நீங்கள் மூவருமே சோதனையில் வெற்றி பெற்று விட்டீர்கள். உங்களைச் சீடர்களாக ஏற்றுக்கொள்கிறேன்!" என்றார்.

இந்தப் படத்திற்கு அழகிய வர்ணம் தீட்டி அனுப்பி வையுங்கள்

- வாழை மரங்கள் உண்மையில் மரங்கள் இல்லை. அதாவது வாழை மரம் என்று நாம் கூறுவது தவறு. அது ஒரு தாவரம். ஏன் எனில் மரங்களில் உள்ளது போல் கடினமான தண்டுப் பகுதியோ, கிளைகளோ இருப்பதில்லை.
- இது தவாரங்களைப் போல பூத்துக் காய்த்தபின் இறந்துவிடுகின்றன.
- உலகிலேயே பெரிய தாவரம் வாழை மரம் என்று கூறப்படுகிறது.
- வாழை ஆசியாவில் தோன்றியது என்றாலும், அது மற்ற வெப்ப மண்டலக் கண்டங்களான ஆப்ரிக்கா, தென் அமெரிக்கா போன்றவற்றுக்குப் பரவியது.

## போஸ்ட்வானா

பெண் வெள்ளாட்டுக்கும், ஆண் செம்மறி ஆட்டுக்கும் இயற்கை கலப்பின முறையில் பிறந்த குட்டி தான் போட்ஸ்வானா. விலங்கியல் ஆராய்ச்சியாளர்கள் போட்ஸ்வானா என்ற இடத்தில் இதை முதன் முதலில் கண்டுபிடித்ததால் இதற்கு இப்பெயர் வைக்கப்பட்டுள்ளது. இதன் உட்பகுதி ரோம்ங்கள் செம்மறி ஆடு போன்றும் வெளிப்பகுதி ரோமங்கள் வெள்ளாடு போன்றும் இருக்கும். செம்மறி ஆடு போன்று உடல் வலிமையாகவும் வெள்ளாடு போன்று கால்கள் நீண்டும் காணப்படுகிறது.

போட்ஸ்வானா ஆட்டுக் குட்டிகள்மற்ற செம்மறி ஆடு வெள்ளாட்டுக் குட்டிகளை விட வேகமாக வளர்கிறது. ஆபிரிக்க கால்நடை பண்ணையாளர் வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளை பல நூற்றாண்டுகளாக ஒரே வேலியில் அடைத்து பாதுகாக்கின்றனர். ஆனால் இவைகளுக்கிடையேயன கலப்பினக் குட்டிகள் தற்போதுதான் பிறந்துள்ளன.



செ.இலக்கியா தரம் 6
யா/சுண்டுக்குழி மகளிர் கல்லூரி




ச.கிரிசாந் தரம் 9C
யா/சாவகச்சேரி இந்தக்கல்லூரி

சிறுவர்களே உங்களது ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்

**அனுப்பவேண்டிய முகவரி**
'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக் காரியாலயம்
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துனிசிய முன்னாள் ஜனாதிபதியின் மனைவி தங்கத்துடன் தப்பியோட்டம்

ஆபிரிக்கா நாடான துனிசியாவில் கடந்த 23 ஆண்டுகளாக ஜனாதிபதியாக இருந்தவர் ஷின் அல்- அபிடின் பென் அலி (74 வயது). இவர் பதவி விலக வலியுறுத்தி நடந்த கலவரத்தை தொடர்ந்து தனது குடும்பத்துடன் நாட்டை விட்டு வெளியேறினார். தற்போது அவர் சவூதி அரேபியாவில் தங்கியுள்ளார். இந்த நிலையில், நாட்டைவிட்டு வெளியேறும் போது அவரது மனைவி லெய்லா டிரா பெல்சி (53 வயது) 1500 கிலோ தங்கக் கட்டியுடன் சென்றார் என்ற செய்தி தற்போது வெளியாகி உள்ளது.

நாட்டைவிட்டு வெளியேற முடிவெடுத்தவுடன் பென் அலி சென்று விட்டார். ஆனால் அவரது மனைவி லெய்லா டிராபெல்சி துனிசியாவின் மத்திய வங்கிக்குச் சென்று அங்கு தனது பெட்டகத்தில் பதுக்கி வைத்திருந்த தங்க கட்டிகளை எடுக்க முயன்றார். அதற்கு வங்கியின் ஆளுனர் அனுமதி அளிக்கவில்லை. எனவே, லெய்லா தனது கணவர் பென் அலியை போனில் தொடர்பு கொண்டார். அவர் வங்கி ஆளுனருடன் பேசி அவற்றை எடுத்து செல்ல வழிசமைத்தார்.

இதை தொடர்ந்து 1500 கிலோ தங்கக் கட்டிகளுடன் அவர் சவூதி அரேபியா சென்று தனது கணவருடன் சேர்ந்து கொண்டார். இந்த தகவலை பிரான்ஸ் உளவுத்துறை தெரிவித்ததாக அங்கிருந்து வெளிவரும் ஒருபத்திரிகையில் செய்தி வெளியாகி உள்ளது. அவர் கடத்தி சென்ற தங்கத்தின் மதிப்பு ரூ.315 கோடி என கணக்கிடப்பட்டுள்ளது.

# நாய்களாக நடத்தப்படும் அடிமைகள்!



புகலிடம் வழங்குதல் என்கிற போர்வையில் மன நலம் பாதிக்கப்பட்டவர்கள், ஆதரவற்றவர்கள் ஆகியோரை அடிமைகளாக நடத்தி வேலை வாங்கி வந்த சீன தம்பதிகள் அந்நாட்டு பொலிஸாரிடம் சிக்கி உள்ளனர். அடிமைகளாக நடத்தப்படுவோரில் பெரும்பாலானோருக்கு சம்பளம் கிடையாது.

அத்துடன் ஒழுங்காக உணவு வழங்கப்படுவதும் இல்லை. வளர்ப்பு நாய்கள் வாய் வைத்துச் சாப்பிடும் பாத்திரங்களுக்குள் இருந்து தான் இவர்களுக்கு உணவு பரிமாறப்படுகின்றது.

ஒழுங்கான தங்குமிடம் இல்லை. இவர்கள் தொழிற்சாலைகளுக்கும் விற்கப் படுகின்றனர்.

# நேட்டோ படையின் பெட்டிகள் திருட்டு

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா மற்றும் நேட்டோ படையினருக்கு அனுப்பப்பட்ட 50,000 பெட்டிகளை திருடிய குற்றச்சாட்டின் கீழ் வருவாய் கூட்டமைப்பு கழகம் மற்றும் தேசிய திறன் பிரிவின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. நேட்டோ படையினருக்கு 50,000 பெட்டிகள் அனுப்பபப்பட்டன.

பாகிஸ்தான் நாட்டிற்குள் வந்த இந்த பெட்டிகள் திருடப்பட்டதாக அந்நாட்டின் புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# எலி பிடிக்க பூனைகளுக்கு பயிற்சி



எலிகளின் பரம எதிரி பூனை. எலிக்கு திண்டாட்டம் பூனைக்கு கொண்டாட்டம் என்பது பழமொழி. ஆனால் எலிகளை பிடிக்க பூனைகளுக்கு பயிற்சி வழங்கு கின்றார் சீன நாட்டவர். அறுபது பூனைகளுக்கு இப் பயிற்சிகள் வழங்கப்பட்டு இருக்கின்றன.

துணியால் செய் யப்பட்ட எலிகளை கச்சிதமாக பிடிக்கும் பயிற்சி இதில் பிரத்தியேகமானது.



அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, வாஷிங்டனில் உள்ள வெள்ளை மாளிகையில், சீனாவின் ஜனாபதி ஹுஜின்டோவை வரவேற்று உரை நிகழ்த்து வதை படத்தில் காணலாம்.

# போதைப்பொருள் கடத்திய புறா!



புறாவின் காலிலும், கழுத்திலும் கட்டி தூது விட்டது அந்தக்காலம். தற்போது சிறைக்குள் போதைப்பொருள் அனுப்பி வைப்பதற்காக இந்த வழிமுறை பின்பற்றப்படுகின்றது.

கொலம்பியாவின் வடபகுதி நகரான புகாரமங்காவில் தான் இந்த வினோத முறை பின்பற்றப்பட்டமை தெரியவந்துள்ளது. சிறைக்குள் 45 கிராம் போதைப் பொருளைக் கடத்திச் செல்ல பயன்படுத்தப்பட்ட புறா பொலிஸாரிடம் சிக்கிக் கொண்டது.

சிறைக்கு சில மீற்றர் தூரத்தில் வைத்தே இந்தப் புறா அதிகாரிகளிடம் மாட்டியது. இது மிகவும் புத்திசாலித் தனமான ஒரு முயற்சியென்று அதிகாரி ஒருவர் கூறினார். இந்தப் புறாவின் உட லில் 40 கிராம் ஹெரோயினும், ஐந்து கிராம் ஏனைய போதைப்பொருளும் சேர்க்கப் பட்டிருந்தன.

ஒரு பறவை சுமந்து செல்வ தற்கு இந்த எடை மிகவும் கூடுதலானது. இங்கு தான் சம்பந்தப்பட்டவர்கள் தவறிழைத்து விட்டனர். இந்த எடையை சுமந்து கொண்டு பறக்க முடியாத பறவை குறிப்பிட்ட தூரத்துக்கு முன்பே கீழே வந்துவிட்டது. அதனால் தான் அது எங்களிடம் மாட்டிக் கொண்டது என்று பொலிஸார் விளக்க மளித்துள்ளனர்.

சோதிடகேசரி
ஒவ்வொரு மாதமும்
★ ராசி, நட்சத்திர பலன்கள்,
★ பரிகாரங்கள்,
★ எண்சோதிடம்,
★ விரதங்கள்-பலன்கள்,
★ விஷேட தலங்கள்,
மேலும்பல அரிய தகவல்களுடன்
ரூபா 50/= மட்டுமே


An Express Newspapers Publication

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்களின் எதிர்ப்பால் இடம்மாறிய மதுபான விற்பனை நிலையம்

(வட்டுக்கோட்டை நிருபர்)

பனை, தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் ஈழத்துச் சிதம்பரத்துக்குச் செல்லும் காரைநகர் சிவன் கோயில் வீதியில் மதுபான விற்பனை நிலையம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந் நடவடிக்கைக்கு ஊர்மக்கள் மற்றும் கிராமிய சமூக அமைப்புக்களிடமிருந்து எதிர்ப்பு அலைகள் எழவே, சங்கம் அவ்விடத்தில் மதுபான விற்பனை நிலையம் அமைக்கும் முயற்சியைக் கைவிட்டு வேறு இடத்தில் அமைப்பதற்குக் காணி ஒன்று தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## வீதி விபத்துக்களில் இருவர் படுகாயம்

கொடிகாமம்,

தென்மராட்சிப் பகுதியில் நேற்று முன்தினம் காலை நடந்த இரு வேறு விபத்துச் சம்பவங்களில் இருவர் படுகாயமடைந்தனர்.

மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து முன்னால் சென்ற 'கென்டர்' வாகனத்துடன் மோதியதில் மோட்டார் சைக்கிளை ஓட்டிச்சென்றவர் படுகாயமடைந்துள்ளார்.

இதில் சாவகச்சேரி - கெருடாவில் கற்குழி கந்தசாமி கோயில் குருக்கள் சந்திர சர்மா (34 வயது) என்பவர் படுகாயமடைந்தார்.

இதேவேளை, மோட்டார் சைக்கிள் வீதியில் சென்ற சைக்கிளுடன் மோதியதில் மோட்டார் சைக்கிளின் பின்னாலிருந்த கந்தசாமி முத்தம்மா (வயது 60) என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

## மஞ்சி பிஸ்கட் ஆதரவுடன் நடைபெறும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி

அரியாலை,

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் இலங்கை மஞ்சி பிஸ்கட் ஸ்தாபனத்தாரின் அனுசரணையுடன் நடைபெறவுள்ளது.

2011 ஆம் ஆண்டுக்கான போட்டியில் யாழ். மாவட்ட வலயமட்டப் போட்டிகள் யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்க மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் ஆண்கள் பிரிவில் 08 அணிகளும் பெண்கள் பிரிவில் 04 அணிகளும் மோதுகின்றன.

இப் போட்டியானது யாழ். மாவட்டத்தில் 04 வலயங்களாகப் பிரிக்கப்பட்டு நடத்தப்படுகின்றது.அவையாவன வலிகாமம், தீவகம், யாழ்ப்பாணம், வடமராட்சி என்பனவாகும்.

இதில் வெற்றிபெறும் ஒவ்வொரு அணியும் மாகாண மட்டப் போட்டியில் பங்குபற்றி, அதில் முதல் இரண்டு இடங்களைப் பெறும் அணிகள் தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றும் என ஏற்பாட்டாளரும் கரப்பந்தாட்டச் சங்க செயலாளருமான கி. மனோகரன் தெரிவித்துள்ளார்.

## வினைத்திறன் காண் பரீட்சை

தெல்லிப்பழை,

வடமாகாணத்தில் கடமைபுரியும் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் சேவையைச் சேர்ந்த சகல பதவியினருக்கும் அடுத்தமாதம் 2 ஆவது வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை முதலாவது வினைத்திறன் காண் பரீட்சை முடிவுகள் எதிர்பார்த்திருப்போர் உட்பட அனைவரும் இம்மாதம் 31 ஆம் திகதிக்குள் தமது விண்ணப்பப் படிவங்களை அனுப்ப முடியும் என வடமாகாண அரசசேவை பட்டதாரி அலுவலர் சங்கச் செயலாளர் கே.எஸ். மயூரன் அறிவித்துள்ளார்.

## வை.எம்.சி.ஏ. நடத்திய மரதன் ஓட்டப்போட்டி

வடமராட்சி,

பருத்தித்துறை - கிறிஸ்தவ வாலிபர் ஒன்றியம் (வை.எம்.சி.ஏ.) வடமராட்சிப் பிரதேசத்திற்குட்பட்ட கழக வீரர்கள் மத்தியில் வருடந்தோறும் நடத்திவரும் மரதன் ஓட்டப் போட்டியை அண்மையில் நடத்தியது.

இவ்வாண்டுக்கான போட்டியில் சண்முகதாஸ் முதலிடத்தையும், ரி. கஜீபன் இரண்டாம் இடத்தையும், ரி. ரஜில்குமார் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

## கைவிடப்பட்ட காவலரண்களை மீளத்திருத்தியமைக்கும் படையினர்

கைதடி,

யாழ்.குடா நாட்டில் இராணுவத்தினரால் கைவிடப்பட்ட சிறுசிறு முகாம்கள் மீண்டும் முளைத்தெழுவதையும் சில இடங்களில் புதிதாக அமைக்கப்படுவதையும் பரவலாகக் காணமுடிகின்றது.

பகல் - இரவு நேரக் கொள்ளைச் சம்பவங்கள் வேகமாகத் தலைதூக்கிய நிலையில் அதைத் தடுக்கும் நோக்கில் பொதுமக்களுக்கு உதவவெனத் தாம் இவற்றை அமைப்பதாக படையதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளைத் தேடியதை விட கொள்ளையர்களைத் தேடிப்பிடிக்கத் தாம் மிகுந்த சிரமப்படுவதாகவும் அவர் கூறுகின்றார். உள்ளூர், வெளியூர் திருடர்கள் மிகவும் சாமர்த்தியமாக நடந்து, சமயம் பார்த்து தமது கைவரிசையைக் காட்டுகின்றனர். அத்துடன் அவர்கள் சமயோசிதமாக தப்பிச்சென்று விடுவதால் தாம் மிகவும் சிரமப்படுவதாகவும் கூறுகின்றனர்.

நகரம், கிராமம் என்ற வேறுபாடின்றி அனைத்துப் பிரதேச மக்களும் விழிப்புக் குழுக்களை அமைத்து படையினருடன் ஒத்துழைப்பார்களாயின் கொள்ளைச் சம்பவங்களை ஒழிக்கமுடியுமெனவும் அவர் கூறினார்.

விழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு அவை சிறப்பாக செயற்படும் பிரதேசங்களில் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெறாமையும் சுட்டிக் காட்டினார்.

பாதுகாப்புப் படையினர் குடாநாட்டில் இடம்பெறும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த பொலிஸாருடன் இணைந்து செயற்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

## தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய மஹாகும்பாபிஷேகத்திற்கு விஷேட ஏற்பாடு

ஏழாலை,

தெல்லிப்பழை - துர்க்கை அம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகத்தினை முன்னிட்டு பல்வேறு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மேற்படி ஆலயத்தின் மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. இத் தினத்தில் அதிகளவான பக்தர்கள் வருகை தருவார்கள். அவர்களுக்குரிய அடிப்படை வசதிகளை செய்துகொடுப்பதற்குரிய நடவடிக்கையினை மேற்கொள்ள ஆலய நிர்வாகசபை தீர்மானித்து வருகிறது. இது தொடர்பான கூட்டமொன்று அண்மையில் தெல்லிப்பழை பிரதேச செயலர் எஸ். முரளிதரன் தலைமையில் ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் இவ் உற்சவ காலத்தில் பக்தர்களுக்கு வேண்டிய போக்குவரத்து, சுகாதாரம், மின்சாரம், வீதி அபிவிருத்தி, மலசலகூடம் மற்றும் சுற்றுச்சூழல், தொண்டர்சேவை போன்ற விடயங்கள் தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

உற்சவ காலங்களில் இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் சிற்றூர்திகள் சேவையும் இணைந்து அதிகளவிலான போக்குவரத்து சேவையினை ஏற்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து சுன்னாகம் வரையுள்ள வீதியை சீர் செய்தல், வியாபார நிலையங்கள் மற்றும் உணவகங்களின் சுகாதார நிலையினை பொதுச் சுகாதார பிரசோதகர் கண்காணித்தல், ஆலயச் சுற்றாடலையும் ஆலய வீதியையும் சுத்தம் செய்யும் நடவடிக்கையினை பிரதேச சபை பணியாளர் மேற்கொள்ளுதல் மற்றும் தொண்டர் சேவையினை வழங்குவதற்குரிய தொண்டர் அமைப்புக்களை ஈடுபடுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கூட்டதில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாக சபை உப-தலைவர் ச. ஆறுமுகநாதன், போக்குவரத்து சபை அதிகாரி, பிரதேச சபை தெல்லிப்பழை பொறுப்பதிகாரி, பொதுச் சுகாதார பரிசோதகர், மற்றும் தொண்டர் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள்.



அண்மையில் வேலணை பிரதேச சபையினால் நடாத்தப்பட்ட புத்தகக் கண்காட்சியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட புங்குடுதீவு மகாவித்தியாலய அதிபர் எஸ்.கணேஸ் மற்றும் விருந்தினர்கள் வரவேற்று அழைத்துவரப்படுவதையும் நூல்களைப் பார்வையிடுபவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- நெடுந்தீவு நிருபர்)

## கலந்துரையாடல்

(யாழ். மத்தி நிருபர்)

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க அபிவிருத்தி தொடர்பான முக்கிய கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை மாலை 2.00 மணிக்கு இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சங்கத்தின் தலைவர் செ.குமாரசிங்கம் தலைமையில் இடம்பெறும் நிகழ்வுக்கு பாரம்பரிய கைத்தொழில் சிறுகைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம அதிதியாக கலந்துகொள்ளவுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டு. மாவட்டத்தில் பாதிக்கப்பட்டோருக்கு கூரைத் தகடுகளை வழங்க நடவடிக்கை

**பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான கூரைத்தகடுகளை வழங்க உடனடி நடவடிக்கையெடுப்பதாக இ.தொ.கா. தலைவரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான முத்து சிவலிங்கம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெள்ளப் பாதிப்பு குறித்து கண்டறியும் முகமாக அண்மையில் அங்கு சென்ற பிரதி அமைச்சர் மட்டு. மாவட்ட அரச அதிபரை சந்தித்தபோது விடுத்த வேண்டுகோளையேற்று இந்த உறுதிமொழியை வழங்கினார்.

பாதிக்கப்பட்ட சுமார் 350 வீடுகளுக்கு கூரைத் தகடுகளையும் வெள்ளத்தினால் பல ஏக்கர் கணக்கான வயல் நிலங்கள் பாதிப்படைந்துள்ள நிலையில் அவர்களுக்கான நஷ்டஈட்டை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷவுடன் கலந்துரையாடி சம்பந்தப்பட்ட அமைச்சர்களையும் சந்தித்து உரிய நடவடிக்கையெடுப்பதாகவும் அரச அதிபரிடம் பிரதி அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

அத்துடன் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பல பிரதேசங்களுக்கு சென்று மக்களின் குறைகளையும் கேட்டு அறிந்ததாகவும் இது தொடர்பாக மிக விரைவில் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்தார்.




# முதுகல்விமாணி கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரல்

(காரைதீவு நிருபர்)

தேசிய கல்வி நிறுவனம் நடத்திவரும் முதுகல்விமாணி பட்டப்பின் கற்கை நெறிக்கு 2011/12 கல்வியாண்டில் கற்பதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. 18 மாதங்களைக் கொண்ட ஆங்கிலமொழி மூலக் கற்கை நெறியான முதுகல்விமாணி நெறிக்கு புகுமுகப்பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்சை மூலம் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவரென தேசியக் கல்வி நிறுவக பணிப்பாளர் நாயகம் பேராசிரியர். டபிள்யூ.எம். அபேரத்ன பண்டார தெரிவித்தார். இலங்கை ஆசிரியர் சேவை, அதிபர் சேவை, கல்வி நிருவாக சேவை, கல்வியியலாளர் சேவையைச் சேர்ந்தோர் விண்ணப்பிக்க முடியும்.

50வயதுக்கும் குறைந்தவர்கள் முதற்பட்டத்தை சிறப்பாக பூர்த்தி செய்திருக்க வேண்டும். புகுமுக பரீட்சையில் வயது, உளசார்பு, கல்வியில் பொது அறிவு ஆகிய விடயப் பரப்புகளில் 2 மணிநேரம் பரீட்சை நடைபெறும். கற்கை நெறிக்கான கட்டணம் 30 ஆயிரம் ரூபா. விண்ணப்பிக்க வேண்டிய கடைசித்திகதி 14.02.2011 ஆகும்.

# இரவுநேர தனியார் வகுப்புக்களை தடைசெய்யுமாறு பெற்றோர் கோரிக்கை

(அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்)

அட்டாளைச்சேனை மற்றும் அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுகளில் மாலை 6.00 மணிக்குப் பின்னர் நடைபெறும் இரவு நேர தனியார் வகுப்புக்களைத் தடைசெய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இவ்விடயத்தில் அனைத்துத் தரப்பினரும் கூட்டு நடவடிக்கை மேற்கொண்டு மாணவர்களுக்கு உதவ வேண்டுமெனவும் பெற்றோர்கள் சுட்டிகாட்டுகின்றனர்.

அட்டாளைச்சேனை மற்றும் அக்கரைப்பற்று பிரதேசங்களில் மாலை 6.00 மணிக்குப் பின்னர் தனியார் ரியூஷன் வகுப்புக்களை நடத்தும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் மாணவர்கள் மிகுந்த சிரமங்களை எதிர் கொள்ளும் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியுள்ளனர்.

பாடசாலையிலிருந்து பிற்பகல் வீடு திரும்பும் மாணவர்கள் இரவு 09.00 மணி வரை ரியூஷன் வகுப்பு என அலைகின்றனர். பணத்தை மாத்திரம் இலக்காகக் கொண்டு நடத்தப்படும் இவ் வகுப்புக்களினால் மாணவர்களுக்கு மேலதிக சுமை ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் மாணவர்கள் மன அழுத்தங்களுக்கு ஆளாகுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எவரது அனுமதியுமின்றி நடத்தப்படும் இரவு நேர தனியார் வகுப்புக்களினால் மாணவர்களின் பாதுகாப்பு கேள்விக் குறியாகியுள்ளது.

முறையான பாதுகாப்பு மற்றும் இதர வசதிகளின்றி அமைக்கப்பட்டுள்ள கல்வி நிலையங்களில் நுளம்புத் தொல்லையும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

மாணவர்களின் சமயக் கிரியைகள், குர்ஆன் கல்விக்கு பாதகமாக அமைந்துள்ள இவ்வகுப்புக்களை உடனடியாகத் தடை செய்ய வேண்டும் எனவும் கோரப்படுகின்றது.

# ஒன்றரை லட்சம் மாணவர்கள் கண்பார்வை குறைபாட்டு நோயினால் பாதிப்பு

**சுகாதார அமைச்சு அறிக்கை**

காரைதீவு,

நாட்டிலுள்ள ஒரு லட்சத்து 60 ஆயிரம் மாணவர்கள் கண் பார்வைக் குறைபாட்டு நோயினால் பீடிக்கப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சின் ஆய்வொன்று அறிக்கை வெளியிட்டுள்ளது.

மேலும் 4 இலட்சம் மாணவர்கள் கண் நோய்க்கான அறிகுறிகளைக் கொண்டுள்ளதாகவும் அவ் அமைச்சு கூறியுள்ளது.

இவற்றை நிவர்த்தி செய்யும் பொருட்டு சுகாதார அமைச்சு 'விஷன் 2020' என்ற விஷேட வேலைத் திட்டத்தை நாடளாவிய ரீதியில் அமுல்படுத்த ஆரம்பித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் இது வரை 15 ஆயிரம் மூக்குக் கண்ணாடிகளை மாணவர்களுக்கு சுகாதார அமைச்சு வழங்கியுள்ளது.

ஒவ்வொரு 6 மாதங்களுக்கு ஒரு தடவை மாணவரின் பார்வை தொடர்பாக கண் கிளினிக் நடத்தப்படவுள்ளது.

இதற்குத் தேவையான மூக்குக் கண்ணாடிகளை சுகாதார அமைச்சு வழங்கி வருகிறது. அண்மையில் கொழும்பில் மேலும் 500 கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.

# சட்டவிரோத துப்பாக்கிகளை வைத்திருந்த 11 பேர் சரீரப் பிணையில் விடுதலை

வாழைச்சேனை,

வாகரை கிருமிச்சை பிரதேசத்தில் சட்டவிரோதமான உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கிகளை வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 11 சந்தேக நபர்களை கைது செய்து அவர்களிடமிருந்து 11 உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கிகளை வாகரை பொலிஸார் கைப்பற்றினர்.

இவர்கள் செவ்வாய்க்கிழமை வாழைச்சேனை மாவட்ட நீதிமன்ற நீதிபதியும் நீதிவானுமாகிய எம். எம். நியால் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது, விசாரணைகளை மேற்கொண்ட நீதிபதி அவர்களை எச்சரிக்கை செய்ததுடன் சட்டத்திற்கு அமைவாக ஒவ்வொருவரும் தலா 70 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

# நீண்ட காலமாக செப்பனிடப்படாதிருக்கும் சாய்ந்தமருது கல்யாண வீதி

கல்முனை,

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கல்யாண வீதி மிக நீண்டகாலமாக செப்பனிடப்படாமை காரணமாக பிரயாணம் செய்ய முடியாத நிலையில் குண்டும் குழியுமாகக் காணப்படுவதாக இப்பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். மாளிகைக்காடு வீதியில் ஆரம்பமாகி கல்முனை ஸாஹிராக் கல்லூரி வீதி வரை செல்லும் சுமார் ஒரு கிலோ மீற்றர் நீளமான இவ்வீதியில் பிரயாணம் செய்யும் வாகனங்களும் பாதசாரிகளும் வீதி சீரின்மை காரணமாக பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி, கல்முனை ஸாஹிராக்கல்லூரி மற்றும் மதஸ்தலங்கள், சந்தை என்பனவற்றிற்கு இவ்வீதியால் தினசரி ஆயிரக்கணக்கானோர் கால் நடையாகவும், வாகனங்களிலும் பிரயாணம் செய்கின்றனர்.

மழை பெய்யும் காலங்களில் நீர் நிறைந்து குளம்போன்று காட்சியளிக்கும் இவ்வீதியால் செல்லும் பாடசாலை மாணவர்களும் முதியோர்களும் பல இன்னல்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதாகவும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

கல்முனை மாநகர சபையும், சாய்ந்தமருது பிரதேச செயலகமும் ஒன்றிணைந்து அவ்வீதியை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# சார்க் அமைப்பின் நிகழ்ச்சித் திட்ட அதிகாரி

(மருதமுனை மேலதிக நிருபர்)

சார்க் அமைப்பின் இலங்கை பிராந்திய காரியாலயத்தின் நிகழ்ச்சித்திட்ட அதிகாரியாக மருதமுனையைச் சேர்ந்த 'றஸ்மி மூஸா' நியமனம் பெற்றுள்ளார்.

கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகத்தின் கலாசார உத்தியோகத்தராகக் கடமையாற்றிய இவர் முதுமாணிப் பட்டதாரியாவார்.

மருதமுனை அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் செயலாளராகவும் 2 ஆம் பிரிவுக்கான கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

சமூக சேவைகளில் அக்கறையுள்ள இவர் சமாதான நீதிவானாக உள்ளதுடன் கடந்த வருடம் 'தேசகீர்த்தி' பட்டம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டவர். பத்திரிகைத் துறையில் நீண்ட கால அனுபவமுள்ளவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச பணியாளர்கள் தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பிப்பது ஒரு சமூகக் கடமையாகும்

## - மத்திய மாகாண சபை உறுப்பினர்

(நாவலப்பிட்டி மேலதிக நிருபர்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் உத்தியோகஸ்தர்களாக பணியாற்றவுள்ள நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் அரச பணியாளர்கள் தபால் மூலம் வாக்களிப்பதற்காக விண்ணப்பிப்பது ஒரு சமூக கடமையாகும் என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான எம். உதயகுமார் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த கால தேர்தல்களில் நுவரெலியா மாவட்டத்தில் தேர்தல் பணிகளில் ஈடுபட்ட பெரும்பாலான தமிழ் ஆசிரியர்கள் தபால் மூலம் வாக்களிப்பதில் ஆர்வம் செலுத்தாத காரணத்தினால் அவர்களின் வாக்குகள் பயன்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டதாக அறிய முடிகின்றது.

வாக்களிப்பில் கலந்து கொண்டு தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்து கொள்வது ஒவ்வொருவரினதும் ஜனநாயக உரிமையாகும். அந்த வகையில் எதிர்வரும் தேர்தல் கடமைகளுக்கு விண்ணப்பிக்கவுள்ள மலையகப் பகுதி தமிழ் ஆசிரியர்கள் தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களையும் சமர்ப்பிப்பதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

# ம.ம.மு. தனித்தும் இணைந்தும் போட்டி

(பண்டாரவளை மேலதிக நிருபர்)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மலையக மக்கள் முன்னணி, ஊவா மாகாணத்தில் தனித்து மண்வெட்டி சின்னத்திலும், நுவரெலியா மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து வெற்றிலை சின்னத்திலும் போட்டியிட முடிவு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் கொழும்பில் ஐ.ம.சு.மு. பொதுச் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்தவுடன் மலையக மக்கள் முன்னணி மேற்கொண்ட பேச்சுவார்த்தையின் போதே மேற்படி முடிவு எடுக்கப்பட்டதாக மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உப தலைவர்களில் ஒருவரும் ஊவா மாகாண சபை உறுப்பினருமான அ. அரவிந்தகுமார் தெரிவித்தார்.

இந்தப் பேச்சுவார்த்தையில் மலையக மக்கள் முன்னணியின் தலைவி சாந்தினி சந்திரசேகரன், அரசியல் துறை தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வி. இராதாகிருஷ்ணன், பொதுச் செயலாளர் லோரன்ஸ், முன்னாள் பிரதி அமைச்சர் பி. இராதாகிருஷ்ணன், கட்சியின் பிரச்சார செயலாளர் எஸ். விஜேசந்திரன் உள்ளிட்ட உயர்மட்டக் குழுவினர் கலந்து கொண்டனர்.

# உண்மையான ஆசிரியன் தனது திறமைகளை தன்னுள் பூட்டி வைத்திருப்பதில் பயனில்லை

## மத்திய மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர்

நாவலப்பிட்டி,

உண்மையான ஆசிரியன் தனது திறமைகளை தன்னுள்ளேயே பூட்டி வைத்திருப்பதில் பயனில்லை. தமது திறமைகளைத் தமது மாணவர்களுக்கு வழங்கி அந்த மாணவன் பாராட்டப்படும் போது அதன் மூலம் பெற்றுக் கொள்ளும் பெருமையே தனது திறமைக்குக் கிடைத்த சான்று எனக் கருதி மகிழ வேண்டும் என்று மத்திய மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர் பி. எஸ். சதீஸ் தெரிவித்தார்.

நாவலப்பிட்டி இந்துமன்றம் தைத்திருநாள் பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு நடத்திய தமிழிசை நடன விழாவிற்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்து மன்றத் தலைவர் ஆர். ராஜேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழா தமிழ் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

இதுவரை காலமும் ஆசிரியர்கள், மாணவர்களை இசை, நடனம் போன்றவற்றில் பயிற்றுவித்து மேடையேற்றி பரிசு பெறச் செய்வர். ஆனால் முதல் முறையாக இன்று நடனம், கர்நாடக சங்கீதம் பயிற்றுவிக்கும் ஆசிரிய ஆசிரியைகள் மேடையேறி தமது திறமைகளை வெளிக்காட்டியது கம்பளை கல்வி வலயத்திற்கே பெருமை சேர்த்துள்ளது எனலாம்.

இந்நிகழ்ச்சிகளை கம்பளை கல்வி வலயம் மற்றும் மத்திய மாகாண கல்வி பணிப்பாளர்கள் அதிகாரிகளுடன் பத்தனை ஸ்ரீபாத கல்லூரி நடன விரிவுரையாளர் திருமதி காமினி ராஜதுரையும் கண்டு ரசித்து தனது மாணவர்களின் திறமைகளை நேரடியாகக் கண்டு கொண்டார்.

இத்தகைய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்த நாவலப்பிட்டி இந்து மன்றத்தின் முயற்சி பாராட்டத்தக்கது.

நடன இசை விழா என்றால் இன்று சினிமா பாணி இசையே வழங்கப்படும். ஆனால் இங்கு இடம்பெற்ற நிகழ்வுகள் அனைத்தும் கர்நாடக இசையுடன் கூடியதாக அமைந்தது. அந்த இசையை நல்லபடி வழங்கினால் அதற்கும் நல்ல இரசிகர் கூட்டம் இருக்கும் என்பதை பறைசாற்றியுள்ளது.

நடன ஆசிரியர்கள் தமது மூத்த ஆசிரியைகளின் வழிகாட்டலுடன் நடத்திய இந்நிகழ்ச்சி, மார்கழி தோறும் சென்னையில் திருவையாற்றில் இடம்பெறும் சங்கீத விழாவைப் போல் அமைந்திருந்தது.

மலையகத்திலும் இத் திறமை மிக்க இசை நடன ஆசிரியர்கள் உருவாகி வருவது மகிழ்ச்சியும் பெருமையும் அடையச் செய்வதுடன் எதிர்காலத்தில் தமிழ்த் தினப் போட்டிகளில் அகில இலங்கை ரீதியில் கூடுதலான தங்கப் பதக்கங்களை எமது மாணவர் பெற்று வரச் செய்ய வேண்டியதும் உங்கள் கடமை.

# தடைகளைக் கண்டு தயக்கம் கொள்ளாமல் இலக்கியம் படைக்க முன் வர வேண்டும்

## கண்டி மேலதிக கல்விப் பணிப்பாளர் ஏ. இராசையா

மஸ்கெலியா,

இளம் எழுத்தாளர்களின் படைப்புகளைப் பற்றி விமர்சனம் வரும் அதேபோல் படைப்புகளை வெளியிட எத்தனையோ தடைகளும் வரும். அவற்றைக் கண்டு தயக்கம் கொள்ளாமல் தன்னம்பிக்கையுடன் இலக்கியம் படைக்க முன்வர வேண்டும் என கண்டி மேலதிக கல்விப் பணிப்பாளர் ஏ. இராசையா தெரிவித்தார்.

நோர்வூட் சிவகுமாரின் ''என்மேல் விழுந்த மழைத்துளி'' இறுவட்டு வெளியீட்டு விழா நேற்று முன்தினம் புதன்கிழமை நோர்வூட் தமிழ் மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் இடம்பெற்றபோது சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு பேசும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

நோர்வூட் தமிழ் மகா வித்தியாலய அதிபர் டி. நாகராஜின் வழி காட்டலில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் ஓய்வு பெற்ற சிரேஷ்ட அதிபரும் மொழி பெயர்ப்பாளருமன சி. கனகமூர்த்தி, கவிஞர் தமிழ்மணி தங்கம், எழுத்தாளர் பாலா சங்குப்பிள்ளை ஆசிரிய ஆலோசகர் கே. முத்துலிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

நிகழ்வில் மேலதிகக் கல்விப் பணிப்பாளர் ஏ. இராசையா தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

மன எழுச்சியின் வெளிப்பாடே கவிதையாக பரிணமிக்கின்றது. ஒரு எழுத்தாளனின் அனுபவமும் அவனது படைப்புக்களும் எதிர்காலச் சந்ததியினருக்கு பயன்படக் கூடியதாக இருக்க வேண்டும். தான் வாழ்ந்த கால கட்டத்தை அடுத்த தலைமுறைக்கு எடுத்துக் காட்ட வேண்டும்.

இன்று கவிதைகளில் எத்தனையோ வகைகள் தோன்றியுள்ளன. குறிப்பாக இளம் படைப்பாளிகள் கவிதைத் துறையில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்களாகக் காணப்படுகின்றார்கள். அவர்களின் முயற்சிகளுக்கு சமூகம் தகுந்த ஒத்துழைப்பையும் வரவேற்பையும் வழங்க வேண்டும். அப்போதுதான் எழுதுவதற்கான ஆர்வம் ஏற்படும்.

அந்த வகையில், நோர்வூட் சிவகுமார், நவீன தொழில் நுட்பத்தைக் கையாண்டு இறுவட்டு வெளியிட முன்வந்திருப்பது பாராட்டத்தக்க விடயமாகும். இவ்வாறு அந்த முயற்சிகளில் ஈடுபடுவோரைப் பற்றிய விமர்சனங்களும் தடைகளும் இயல்பாகவே தோன்றும். அவற்றைப் பற்றிக் கவலைப்படாமல் எழுத்தாளர்கள் தமது இலட்சியப் பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

நிகழ்வில் ஓய்வுபெற்ற அதிபர் சி. கனகமூர்த்தி பேசுகையில்,

நவீன உத்திகளையும் தொழில் நுட்பத்தையும் பயன்படுத்தி இறுவட்டு வெளியிடுவது வரவேற்கத்தக்க விடயம் என்றாலும் எல்லோருக்கும் கணினியைப் பார்த்து வாசித்து புரிந்து கொள்ளக் கூடிய வசதிகள் இல்லாதுள்ளது. எனவே இறுவெட்டில் வெளியிடப்பட்டுள்ள கவிதைகளைப் புத்தக வடிவில் கொண்டு வந்தால் பலரும் வாசிப்பதற்கு வாய்ப்பாக அமையும். மேலும் பாடசாலைகள் தோறும் இலக்கிய மன்றங்களை அமைத்து மாணவர்களின் பல்வேறு திறமைகளை வெளிக் கொணரவும் நெறிப்படுத்தவும் அதிபர்களும் ஆசிரியர்களும் அக்கறை காட்ட வேண்டும் என்றார்.

# மு.கா.முன்னாள் அமைப்பாளர் ஐ.தே.க.வில் போட்டியிட தீர்மானம்

(பதுளை மேலதிக நிருபர் )

பதுளை மாவட்ட ஸ்ரீ.ல. முஸ்லிம் காங்கிரஸ் முன்னாள் அமைப்பாளர் எம். கே.முஹமட் நியார் நடைபெறுவுள்ள உள்ளூராட்சி சபைத்தேர்தலில் இம்முறை ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிடவுள்ளார்.

தேர்தல் நிலவரம் குறித்துக் கேட்ட போதே நியார் மேற்படித் தகவலைத் தெரிவித்தார்.

கடந்த தேர்தலில் ஸ்ரீ.ல.மு.கா.சார்பில் ஐ.தே.கட்சியில் இணைந்து போட்டியிட நியார் ஹாலி-எல பிரதேச சபைக்குத் தெரிவாகியிருந்தார். மு.கா.மீதான அதிருப்தி முரண்பாடு காரணமாக அதிலிருந்து விலகி நியார் தனித்துச் செயற்பட்டு வந்தார்.

மேலும் ஹாலி-எல பிரதேச சபைக்கு ஐ.மு.சுதந்திர முன்னணி சார்பில் துவான் மீண்டும் போட்டியிடுவார் எனவும் ஐ.ம.சு.மு.வில் புதிய முகமாக பிரமுகர் ரஹீமும் களமிறங்கவுள்ளார் எனவும் தெரிய வருகிறது. பசறை பிரதேச சபைக்கு மு.கா.சார்பில் போட்டியிட்ட உறுப்பினர் ஜரூக் இம்முறை லுணுகலை பிரதேச சபைக்கு ஐ.தே.கட்சியில் போட்டியிடவுள்ளதாகவும் தெரிய வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மறவன்புலோ கிராமம் அன்றும் இன்றும்



தென்மராட்சி பிரதேசத்தின் தெற்குப் பகுதியில் 'ஏ-9' கண்டி வீதியையும் அதனையடுத்து வரும் புகையிரத வீதியையும் கடந்து சென்றால் விரிந்த கடல் ஏரிகளையும் வயல் நிலங்களையும் குளங்களையும் வான் உயர்ந்த பனை, தென்னை மரங்களையும் காணக்கூடிய உள்ளம் கொள்ளை கொள்ளக்கூடிய அழகிய கிராமங்களே தனங்களப்பு, மறவன்புலோ, கைதடி, நாவற்குழி, கோயிலாக்கண்டி, தச்சன்தோப்பு என்பனவாகும்.

இப்பகுதி நாவற்குழி-கேரதீவு வீதியையும் தனங்களப்பு - சாவகச்சேரி வீதியையும் உள்ளடக்கியும் வீதிக் குடியிருப்புக்களையும் விவசாயக் குடியிருப்புக்களையும் கொண்டு காணப்படுகிறது. இந்தக் கிராமத்தில் மறவன்புலோ, தனங்களப்பு தெற்கு கிராமங்களின் முக்கிய அம்சங்களை எடுத்துநோக்கின்ற போது, மறவன்புலோ கிராமசேவையாளர் பிரிவு J/298 ஆகும். இது நான்கு பகுதிகளை உள்ளடகியுள்ளது. மறவன்புலோ வடக்கு, மேற்கு, மத்தி, தெற்கு ஆகும். இது முன்னர் தனங்களப்பு கிராமத்தில் காணப்பட்டது.

1989 ஆம் ஆண்டு மறவன்புலோ கிராமசேவையாளர் பிரிவில் இது இணைக்கப்பட்டது. இப்பகுதி மக்களின் பிரதான தொழில் விவசாயம் ஆகும். இப்பகுதியில் 400 ஏக்கர் வயல் நிலப்பரப்பினை கொண்டுள்ளது. இங்கு உற்பத்தி செய்யப்படும் நெல் யாழ். மாவட்டத்தில் 6 மாத காலத்துக்கு போதுமானதாகும். அத்துடன் தென்னை மரங்கள் இப்பகுதியில் அதிகளவு வருமானத்தை இப்பகுதி மக்களுக்கு பெற்றுக்கொடுத்தது. இவற்றுடன் இங்கு கால்நடை வளர்ப்பும் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறு தமது கிராமத்தில் பெரும் தன்னிறைவோடு வாழ்ந்து வந்த மக்கள் 12.12.1999 ஆம் ஆண்டு ஏற்பட்ட போர்ச்சூழல் காரணமாக இடம் பெயர வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலை காணப்பட்டது. இதன் பின்னர் 2009 ஆம் ஆண்டு இப்பகுதி மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

ஆனால், இப்பகுதியில் காணப்பட்ட 250 இற்கு மேற்பட்ட வீடுகள், பொதுக் கட்டடங்கள், பாடசாலை, இந்து ஆலயங்கள் என்பன அழிந்து காணப்பட்டன. இதனால் மக்கள் கஷ்டங்களை எதிர்நோக்கி இருந்தனர். இந்த மக்களின் நிலையினைக் கண்டு 'சுவிஸ்' அமைப்பு என்ற நிறுவனம் இக் கிராமத்தினை மீளக் கட்டியமைக்க 2009 ஆம் ஆண்டு முன்வந்ததால் இப்பகுதியில் 325 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. ஒவ்வொரு வீட்டுக்கும் 5,70,000 ரூபா நிதி நிறுவனத்தால் ஒதுக்கப்பட்டது. அத்துடன், ஒவ்வொரு வீட்டுக்கும் கிணறு, மலசலகூடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் இங்கு அமைந்திருந்த மறவன்புலோ சகலகலா வல்லி வித்தியாலயம் முழுமையாக அமைத்து கொடுக்கப்பட்டதுடன் சிறுவர் பாடசாலை கிராம அபிவிருத்திச் சங்க கட்டடம் என்பனவும் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

அத்துடன், ஒரு பகுதிக்கு இவ்வருடம் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. எனினும், இன்றுவரை முழுப் பகுதிக்கும் மின்சாரம் வழங்கப்படவில்லை. எனவே, மின்சாரத்தை முழுமையாக வழங்க நடவடிக்கை எடுக்கும்படி இப்பகுதி மக்கள் வேண்டி நிற்கின்றனர்.

அத்துடன், இப்பகுதியில் 5 பிரதான வீதிகள் அமைகின்றன. இதில் ஒரு வீதி மட்டுமே புனரமைக்கப்பட்டுள்ளது. ஏனைய 4 வீதிகளும் புனரமைக்கப்படவில்லை. இதனால், மக்கள் போக்குவரத்துக்கு பெரும் நெருக்கடியினை சந்திக்கின்றனர். எனவே, இவ்வீதிகளையும் புனரமைக்[illegible] நடவடிக்கை எடுக்கு மாறும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றார்கள்.

அத்துடன், இப்பகுதியில் காணப்படும் இந்துக் கோயில்கள் அழிந்து காணப்படுகிறது. இவ் ஆலயங்களை புனரமைக்க தென்மராட்சி பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஆலய நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர். இப்பகுதியில் 5 சனசமூக நிலையங்கள் காணப்படுகிறது இவற்றில் ஒன்று மட்டுமே புனரமைக்கப்பட்டுள்ளது. எனைய 4 நிலையங்களும் அழிந்து காணப்படுகின்றன. இவ்வாறு காணப்படும் வேலைத்திட்டம் முழுமையடையும் பட்சத்தில் இக் கிராமம் யாழ். மாவட்டத்தின் முதன்மை கிராமமாக உயர் நிலையடையும் என்பது மட்டும் நிஜம்.



மேலும் இப்பகுதியில் 400 ஏக்கர் வயல் நிலப்பரப்பு காணப்படுகிறது. இங்கு பெரும்போக நெற் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகிறது. கோடை காலங்களில் பிற தோட்டப்பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடியும். இதற்கு நீர்ப்பாசனம் இல்லை. நீர்ப்பாசனம் மேற்கொள்ள வயல் பகுதியில் விவசாயக் கிணறுகள் அமைத்துக் கொடுத்தால் இப்பகுதி மக்களின் வாழ்வாதாரம் முன்னேற்றமடையும். இவற்றைப் புனரமைக்க முன்வந்த நிறுவனத்துக்கு நன்றி தெரிவிக்கும் மக்கள். ஏனைய வேலைத்திட்டங்களையும் மேற்கொள்ள உதவிகளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

எஸ்.ரி.விமல்

# வடமாகாணத் தேர்தலும் பெண்களின் பங்களிப்பும்

**எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலை யொட்டி மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கை**

யாழ்.குடாநாட்டில் பெண்களின் அரசியல் பங்களிப்பு என்பது காலத்தின் தேவையாகவுள்ளது. அதுவும் தமிழ் பெண்கள் சமூகத்தில் பொதுமக்களுடன் தொடர்புகொள்வது என்பது பெரிய விடயமாகும்.பெண்களுக்கு வாக்குரிமை மட்டுமே என்ற நிலைப்பாட்டிலிருந்து பெண்களும் அரசியல் செயற்பாடுகளில் முன்னேறமுடியும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக 3 ஆம் உலக நாடுகளிலேயே முதன் முதலில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கிய நாடு முதல் பெண் பிரதமரைக் கொண்ட நாடு என்று பெருமைப்படும் அளவிற்கு ஏனைய பெண்கள் முன்னேறவில்லை.

சமூக சிந்தனையை பெண்கள் ஏற்படுத்திக் கொள்வதே பெரும் சிரமமாக இருக்கும் பாரம்பரியத்திலிருந்து வந்த நாம் இன்று பல்வேறு துறைகளின் முன்னோடியாக பெண்களைக் கொண்டிருக்கிறோம். பெண் தலைமைத்துவ குடும்ப மரபை தற்போதைய சூழ்நிலையில் நாம் பெருமளவில் கொண்டிருக்கிறோம். ஆனால், அரசியல் பிரவேசங்களில் பெண்களின் பங்கு மிகக் குறைந்தளவிலேயே காணப்படுகின்றது.

இந்தநிலையில் அரசியல் துறையில் பெண்கள் ஆர்வம் கொண்டு தம்மை இணைத்துக் கொள்வது பல யதார்த்தங்களை வெளிக் கொணர உதவும். அதிலும் பெண் பற்றிய அக்கறை கொண்ட பெண்களால் தான் இத்தகைய ஓர் மாற்றத்தினை ஏற்படுத்த முடியும். இன்றைய சூழலில் அரசியலில் பெண்கள் முழுவீச்சில் ஈடுபடாமைக்கு போதிய ஆளணிப் பற்றாக்குறை, தகுந்த பாதுகாப்பின்மை, முடிவெடுக்கும் தகுதியைப் பெற்ற பெண்களின் வீத அதிகரிப்பின்மை போ[illegible] களாகும். பெண்கள் ச[illegible] காளிகள் என்பது எல்லாவிதத்திலும் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும். சமூக யதார்த்தத்திலிருந்து பல்வேறு கோணங்களில் பெண்களின் பிரச்சினைகள் அணுகப்பட்டு ஆழமான சிந்தனையில் வளமான பெண்கள் சமுதாயத்தை எதிர்பார்ப்பது கட்டமைக்கப்படுவது அல்லது முன்வைக்கப்படுவது பெண்களின் அரசியல் பிரவேசம் காலத்தின் தேவையாகக் கருதப்படுகிறது. தற்போதைய சூழ்நிலைகளில் உள்ளூராட்சி தேர்தலின் போது பெண் வேட்பாளர்களின் பங்களிப்பு விகிதம் அதிகரிக்கப்படவேண்டும். யுத்தத்தின் பின்னரான குடா நாட்டின் பின்னணியில் பெண் தலைமைத்துவம் அதிகரித்துள்ள நிலைகளில் இவர்களின் சுகாதாரம், போஷாக்கு, உரிமைகள், வாழ்வாதார அடிப்படைப் பிரச்சினை போன்றவற்றையும் மாறும் சூழ்நிலைகளில் மனிதாபிமானத் தேவைகளை எதிர்கொள்ள [illegible]கான 29 வேட்பாளர் தெரி[illegible] பிரதேச சபைகளுக்கான 210 வேட்பாளர் தெரிவிற்கும் பெண் வேட்பாளர்களின் பங்களிப்பு விகிதம் அதிகபட்சம் 3:2 விகிதமாக இருந்தால் பெண்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் அமையும். நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலில் பெண் வேட்பாளர்கள் தாம் தெரிவுசெய்யும் அரசியல் கட்சிகளில் போட்டியிடுவதற்கான தகுதியை உறுதிப்படுத்த வேண்டும். பெண்கள் கூடிய எண்ணிக்கையில் போட்டியிடுவார்களானால் புதியதோர் இலக்கை அடைய முடியும்.

கட்சிகள் பெண் வேட்பாளர்களைச் சேர்த்து கொள்ளாதவிடத்து பெண்கள் அக்கட்சிகளுக்கு வாக்களிப்பது அர்த்தமற்றதாகிவிடும்.எமது பிரதேசத்திற்கு இன்றைய சூழலில் பெண்கள் தொடர்பான சகல பிரச்சினைகளையும் திட்டவாக்கல் கொள்கை அடிப்படையில் விரிவாக்கம் செய்வதற்கு பெண்களால் மட்டுமே முடியும். ஆகவே அரசியலில் நுழைவதற்கான சந்தர்ப்பத்தை பெண்கள் தவறாது பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய இளம் சமூகத்தில் மனிதநேயமும் ஒழுக்கக்கட்டுப்பாடுகளும் அருகி வருகின்றன

## கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர்

(அலுவலக நிருபர்)

இன்றைய சமூகத்தில் மனிதநேயம், ஒழுக்கம் , கட்டுப்பாடுகள் எல்லாம் அருகிச் செல்கின்றன. இதனால் எம் சமூகம் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகிறது என கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வே. பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

சுகவாழ்வு நிலையத்தினால் 'தேடும் சிட்டுக்கள்' என்ற சிறுவர் கையேட்டுச் சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் சுகவாழ்வு நிலை இயக்குநர் அருட்தந்தை செபமாலை பெரேரா தலைமையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முன்பு வாழ்ந்த சமூகம் பழி பாவத்திற்கு அஞ்சி மிகுந்த ஒழுக்கம் கட்டுப்பாட்டுடன் கண்ணியமாக இப்படித்தான் வாழவேண்டும் என்ற வரன்முறையின்படி வாழ்ந்தது. ஆனால், இன்று கலை கலாசார ஒழுக்க விழுமியங்களிலிருந்து நெறி பிறழ்ந்து செல்கின்றது.

இன்றைய இளம் சந்ததியிடம் பெரியோரை மதிக்கும் பழக்கம் அருகி வருகிறது. கைத்தொலைபேசி கலாசாரமும் தொலைக்காட்சி நிகழ்வுகளும் தான் இளையோரின் போக்கில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. எனவே இந் நிலை மாற்றப்படவேண்டும். சுகவாழ்வு நிலையம் 'தேடும் சிட்டுக்கள்' என்ற நூல் வெளியீட்டு நிகழ்வில் பல சிறுவர் கழகங்களைச் சேர்ந்த சிறார்கள் கூடியிருக்கின்றனர். இவர்களை நல் வழிப்படுத்தி வளப்படுத்தினால் எதிர்காலத்தில் நற் பிரஜைகளாக்க முடியும். இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்களாக மிளிரவேண்டுமாயின் அவர்களிடம் நல்லொழுக்கங்கள் காணப்படவேண்டும்.

இப்படியான நூல் வெளியீடுகள் மூலம் மாணவர்களிடத்தில் இலைமறை காயாக புதைந்து கிடக்கும் ஆற்றல்களை வெளிக்கொண்டுவரமுடியும். மாணவர்களிடத்தில் அறிவு மட்டும் இருந்தால் போதாது அன்பும் இருக்கவேண்டும். ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கல்வியை மட்டும் ஊட்டுவதுடன் நின்று விடாது ஒழுக்கங்களையும் போதிக்க வேண்டும். இதன் மூலம் சமூகத்தில் சிறுவர்களை நற் பிரஜைகளாக உருவாக்க முடியும் - என்றார்.

இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர் திருமதி வரதீஸ்வரி சத்தியேஸ்வரன் கௌரவ விருந்தினர்களாக யுனிசெப் நிறுவன சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் திருமதி சர்மாலி சதீஸ், கரித்தாஸ் -கியூடெக் நிறுவன நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் அ. அஜந்தன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். பின்னர் தேடும் சிட்டுக்கள் என்ற சிறுவர் கையேட்டுச் சஞ்சிகை வெளியீடு இடம்பெற்றது. இந் நூலுக்கு திருமறைக் கலா மன்றத்தின் செயலாளர் எஸ். சதீஸ்குமார் மதிப்பீட்டுரை வழங்கினார்.




தேசிய கல்வி நிறுவனத்தில் ஆசிரிய கல்வித்துறையின் பணிப்பாளர் திருமதி விலானி அமரசிங்கவின் மணி விழா நிகழ்வில் யாழ். கல்வியல் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் நினைவுக்கேடயம் வழங்குவதை படத்தில் காணலாம். (படம்:- அலுவலக நிருபர்)

# வங்கிப் பெட்டகங்களை நாடும் பொதுமக்கள்

கைதடி,

யாழ்.குடாநாட்டில் அதிகரித்துள்ள கொள்ளைச் சம்பவங்களைத் தொடர்ந்து வங்கிப் பாதுகாப்புப் பெட்டகச் சேவைகளைப் பெறுவதில் நாட்டம் பெறுவதில் பொதுமக்கள் ஆர்வம் காட்டுகின்றார்.

சில வங்கிகள் ஒரு இலட்சம் ரூபாவையும், சில வங்கிகள் 2, 3 இலட்சம் ரூபாவையும் சேமிப்பு அல்லது நிலையான வைப்பில் இடுமாறு கோருகின்றன. தாய், மகள் அல்லது சகோதரிகள் இணைந்து புரிந்துணர்வின் அடிப்படையில் கூட்டாக வங்கிப் பெட்டகம் பெறுவதையும் காண முடிகிறது. சில குடும்பங்கள் சில பவுண் நகைகளை அடைவு வைத்து விட்டுப் பெற்ற தொகையைக் கொண்டு வங்கிகள் கோரும் தொகையைச் செலுத்தி பெட்டக வசதியைப் பெறுகின்றன. இன்னும் சிலர் ஏற்கெனவே வங்கிகளில் உள்ள நிலையான வைப்புக்களை பாதுகாப்புப் பெட்டக நடைமுறைக்கு மாற்றி அவ் வசதியைப் பெறுவதையும் காணமுடிகிறது.

கடன்பட்டு உடைந்த நகைகளை விற்று இத் தொகையைச் செலுத்தி வங்கிப் பெட்டக சேவையைப் பெறுவதையும் காணமுடிகிறது. பொதுமக்களும் கவரிங் நகை அணிவதில் ஆர்வம் காட்டும் தன்மை அதிகரித்து உள்ளதையும் பரவலாகக் காணமுடிகின்றது. யாழ்.குடா நாட்டில் பெண்களிடம் தங்க நகைகளை வீட்டில் வைத்திருப்பதைத் தவிர்க்கும் மனோபாவம் அதிகரித்துச் செல்கிறது.

# படையினர்-மக்கள் இணைந்து கொண்டாடிய பொங்கல் விழா

கொடிகாமம்,

தென்மராட்சிப் பிரதேசத்தில் பொது மக்கள்-படையினர் ஒருங்கிணைப்புக் குழுவின் அனுசரணையுடன் கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி சிவன் ஆலயத்தில் தைப்பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.

அத்துடன் தமிழ், சிங்களக் கலைஞர்கள் இணைந்து கலாசார நிகழ்வுகளையும் நடத்தினர்.

இக் கலாசார நிகழ்வுகள் சிவன் கோயிலுக்கு அருகிலுள்ள கலைமன்றக் கலாசார நிலையத்தில் நடைபெற்றது. 522, 523 படையணிகளின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட கலை விழாவிற்கு முதன்மை விருந்தினராக 52 ஆவது படையணியின் கட்டளைத்தளபதி பிரிகேடியர் டபிள்யு.ஏ.சுதசிங்க கலந்துகொண்டார்.

# கொடிகாமம் சமுர்த்தி வங்கிக்கு புதிய அலுவலகக் கட்டடம்

ஏழாலை,

கொடிகாமம் சமுர்த்தி வங்கிச் சங்கத்திற்கு புதிய அலுவலகக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் மேற்படி சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

இவ் கட்டடம் அமைப்புக்கு இருபது இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் கொடிகாமம் சமுர்த்தி வங்கிச் சங்கத்திற்குரிய கட்டடம் கண்டிவீதி கொடிகாமத்தில் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## விண்ணப்பம் கோரல்

ஏழாலை,

தீவக கல்வி வலயத்தின் முறைசாராக் கல்விப் பிரிவினால் தையல் மற்றும் மின்சார இணைப்பு ஆகிய பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

மேற்படி பயிற்சி நெறிகளில் பாடசாலையை விட்டு விலகிய இளைஞர் யுவதிகள் பங்கு பற்ற முடியும் எனவும் இப்பயிற்சிகள் வேணை மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பயிற்சியில் பயிலுநராகச் சேர விரும்பும் இளைஞர் யுவதிகள் தங்களது விண்ணப்பங்களை வேலணை மத்திய கல்லூரியின் அதிபரிடம் சமர்ப்பிக்குமாறு மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஊரெழு மீனாட்சி அம்பாள் வருடாந்த மகோற்சவம்

ஊரெழு அருள்மிகு மீனாட்சி அம்பாள் தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

பெப்ரவரி முதலாம் திகதி இரதோற்சவமும் 2 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் 3 ஆம் திகதி பங்காவன உற்சவமும் நடைபெறவிருக்கிறது.

வேதஞானசுரபி சிவஸ்ரீ கிருஷ்ணா சோதீஸ்வரக் குருக்கள் மகோற்சவ காலக் குருவாகவிருந்து கிரியைகளை நடத்தி வைப்பார்.

## அன்னதான மண்டப அடிக்கல் நாட்டு விழா

(யாழ்.மத்தி நிருபர்)

சங்கானை நிகரை ஞானவைரவர் ஆலயத்தில் நவீன வடிவிலான அன்னதான மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று (20.01.2011) வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு அன்னதான மட திருப்பணிச் சபை தலைவர் பா.ஜெயபாலன் தலைமையில் இடம்பெற்றது.

பிரதம அதிதியாக வலி.மேற்கு பிரதேச சபை செயலாளர் சு.புத்திசிகாமணி கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக ஒ/179 கிராம அதிகாரி ந.மகிழ்ராஜா கலந்து கொண்டனர்.

## சமுர்த்தி நிதி உதவியில் இரு வீதிகள் புனரமைப்பு

கைதடி,

சமுர்த்தி பிரதேச செயலக சமுர்த்தி பிரிவின் நிதியில் கைதடிப் பிரதேசத்தில் இரு கிராமிய வீதிகள் புனரமைக்கப்பட்டு உள்ளன.

கைதடி மத்தி கிராம அலுவலர் பிரிவில் ஆவரம்பள்ள வீதியும், கைதடி கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் உதயசூரியன் கள்ளி நகர் வீதியும் இவ்வாறு புனரமைக்கப்பட்டுள்ளன.

இவ் இரு வீதிகளிலும் தலா 500 மீற்றர் தூரத்திற்கு மக்கி மண் போடப்பட்டு பரவி மண் போடப்பட்டு பரவி விடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுனாமி ஸ்விம்

**'ஆடுகளம்'** படத்திற்கு வந்திருக்கும் எதிர்ப்பு சற்று வித்தியாசமானது. சுனாமியின் கொடூரத்தையும், அது ஏற்படுத்திய வடுக்களையும் அவ்வளவு எளிதில் யாரும் மறந்துவிட முடியாது. இனியொரு முறை அப்படி ஒரு சோகம் நம் மண்ணை முத்தமிடக் கூடாது என்ற பிரார்த்தனை எல்லோரது மனத்திலும் இருக்கிறது. அதற்காக ஒரு காட்சியில் சுனாமி பற்றி பஞ்ச் டயலாக் பேசுவது கூட தப்பா என்று புலம்ப வைத்திருக்கிறது ஒரு சம்பவம். சமீபத்தில் மதுரையில் கூடிய மீனவ பிரதிநிதிகளின் கூட்டுக்குழு, 'ஆடுகளம்' படத்தில் வரும் ஒரு வசனத்தை நீக்கச் சொல்லி குரல் கொடுத்திருக்கிறது. இல்லையென்றால்... என்ற எச்சரிக்கையும் கூடவே வருகிறது அவர்களிடமிருந்து. அப்படி என்னதான் அந்தப் படத்தில் டயலாக் பேசிவிட்டார் தனுஷ்? நாங்க சுனாமியிலேயே ஸ்விம்மிங் போடக் கூடியவங்க... இதுதான் அவர் பேசிய விவகாரத்திற்குரிய டயலாக்! கடந்த மாதம் வெளிவந்த 'உத்தம புத்திரன்' படத்தில் கவுண்டர்களை இழிவுப் படுத்தினார் என்று தனுஷுக்கு எதிராக குரல் எழுந்தது. அப்புறம் அந்த வசனத்தை அவர் நீக்கிய பின்புதான் கோவைப் பகுதிகளில் படமே திரையிட முடிந்தது. இப்போது இந்தப் பிரச்சினை. அடியாத்தி! இந்த சுனாமில எப்படிங்க ஸ்விம் பண்ணப் போறீங்க....?

நல்ல
கதையை எப்படி
[illegible] எடுக்கிறதுன்னு
எல்லாரும் [illegible] பார்த்து
தெரிஞ்சுக்கலாம்.
[illegible] அதிகபட்ச [illegible] பார்க்கலாம்...

ஆடுகளம்! தனுஷும் வெற்றி மாறனும் நின்று ஆடும் வெற்றிக்களம்!

இந்த ஆண்டு டொரன்டோவில் நடைபெறவுள்ள விழாவுக்கு அமிதாப்பை அழைக்காமல் அவமதித்துள்ளது ஐ ஐ எப் ஏ.

'ஆடுகளம்' படத்தைப் பார்த்த நடிகர் ரஜினிகாந்த் எனது கையைக் குலுக்கி 'குட் ஜாப்' என்று பாராட்டினார் என்று புளகாங்கிதத்துடன் கூறியுள்ளார் பட நாயகி தபசி.



# சினி பிட்ஸ்

- மிஷ்கின் இயக்கத்தில் சேரன் நடித்துள்ள 'யுத்தம் செய்' அடுத்த மாதம் வெளிவருகிறது.
- '127 ஹவர்ஸ்' ஆங்கில படத்துக்காக லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடந்த விழாவில் சினிமா விமர்சகர்கள் விருதை பெற்றிருக்கிறார் ஏ.ஆர்.ரஹ்மான்
- 'காவலன்' படம் ஹிந்தியில் சல்மான் கான் நடிப்பில் உருவாகிறது. தெலுங்கில் வெங்கடேஷ் நடிக்கிறார். இந்தியை முடித்துவிட்டு தெலுங்கிலும் இதை இயக்க சித்திக்கிடம் பேச்சு நடக்கிறது.
- 'அயன் படத்துக்கு பின் சூர்யா, கே.வி.ஆனந்த் மீண்டும் இணைகின்றனர். இப்படத்துக்கு 'மாற்றான்' என தலைப்பிட்டுள்ளனர்.
- 'கருங்காலி', ' சுராங்கனி' படங்களில் நடித்து வருகிறார் சுனிதா வர்மா.
- 'வேங்கை' படத்தின் பாடல் காட்சிகளில் மட்டும் கிளாமராக நடித்துள்ளேன் என்கிறார் தமன்னா.
- 'மழைக்காலம்', 'வெள்ளை மழை' ஆகிய படங்களில் நடித்து வருகிறார் 'பேராண்மை சரண்யா.
- சென்னையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் தனது பாடலுக்கு சிறப்பாக ஆடிய ரசிகர்களுக்கு தான் கையெழுத்திட்ட சான்றிதழை அளித்தார் இசை அமைப்பாளர் யுவன் சங்கர்ராஜா
- 'ஆடு புலி' படத்தில் ஆதி ஜோடியாக நடிக்கிறார் பூர்ணா. முக்காயி வேடத்தில் பிரபு நடிக்கிறார்.
- முதல் முறையாக டிவி நடிகர், நடிகைகளை வைத்து மலையாள படம் ஒன்றை இயக்குகிறார் சுரேஷ் உன்னி இதில் சினிமா நடிகர்களுக்கு வாய்ப்பு கிடையாதாம்.

# ராதா

**மாண்டலின்** ஸ்ரீநிவாஸ் மத்
என்பதிலும்! அழகிய தீயே,
படங்களுக்கு எதற்கு அ
ஆக்ஷன் படம்தான் 'ப
பாடலே இல்லா
இப்படத்தின் ஹ
இடத்தை பி
ட்ரெய்லர்
காந்
இ



வெப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தூங்கா நகர

## 3 இடியட்ஸ்


விஜய் விலகலுக்குப் பிறகு விலக்கப்பட்ட '3 இடியட்ஸ்' படம் எடுக்கப்படுமா நிறுத்தப்படுமா என்பது குறித்து பல் வேறு யூகங்கள் செய்திகளாக வந்தவண்ணம் உள்ளன.

இப்போது, படத்தை ஷங்கர் கைவிட்டுவிட்டார் என்று தெரிவித்து செய்தி வெளியானதில் பலருக்கும் அதிர்ச்சி.

இதுகுறித்து ஷங்கரின் மேலாளர் தெரிவிக்கையில்:

'இதில் கொஞ்சமும் உண்மையில்லை. படத்தின் வேலைகள் படுவேகமாக நடந்து கொண்டுள்ளன. சூர்யா நடிக்கிறார் என்பது உண்மைதான். தமிழ், தெலுங்கில் வெளியாகும் இந்தப் படத்தின் ஆரம்பம் குறித்து முறையாக அறிவிக்கப்படும்,' என்றார்.

தமிழ், தெலுங்கு இரண்டிலுமே சூர்யாதான் ஹீரோவாம். இலியானா நாயகியாக நடிக்கிறார். ஜீவா, ஸ்ரீகாந்த் மேலும் இரு நாயகர்களாக நடிக்கின்றனர். வரும் ஜனவரி 23ஆம் திகதி ஊட்டியில் படப்பிடிப்பு தொடங்குகிறது.



ஆயிரம் விளக்கு

## கோடம்பாக்கம் செய்தி கேட்டீங்களா?

சாமியார் விவகாரத்துல சிக்கிய நடிகைக்கு ஹீரோயின் சான்ஸ் வந்துச்சாம்... வந்துச்சாம்... ஆனா, நடிகை மறுத்துட்டாராம். காரணம் மலையாள படத்துல கிளுகிளுப்பான ரோலாம்... ரோலாம்... ஏற்கனவே இமேஜ் கெட்டுப்போனதால அந்த மாதிரி நடிக்க மாட்டேன்னு சொல்லி நடிகை ஜகா வாங்கிட்டாராம்... வாங்கிட்டாராம்...

இந்தி படம் இயக்குற திட்டத்தை அஞ்சாத இயக்கம் தள்ளிப்போட்டிருக்கிறாராம்... தள்ளிப் போட்டிருக்கிறாராம்... இந்தி ஜான் நடிகரு, கால்ஷீட் தர இழுத்தடிக்கிறாராம். அதனால படத்தை தள்ளிவச்சிடு தமிழ்லேயே கவனம் செலுத்தலாம்னு இயக்கம் முடிவு எடுத்திருக்கிறாராம்... எடுத்திருக்கிறாராம்...

## ...தா மோகனின் 'பயணம்'

...வாஸ் மத்தளம் வாசித்தால் ஒரு பிரமிப்பு வருமே, அதுதான் ராதாமோகன் ஆக்ஷன் படம் பண்ணுகிறார் ...தீயே, மொழி, அபியும் நானும் என்று ராதா மோகன் படங்களில் ஒரு அழகியல் இருக்கும். ஆக்ஷன் ...ற்கு அதெல்லாம்? ஆனால் இங்கேயும் அதை கைவிடவில்லை அவர் என்பதை நிரூபிக்க போகிற ...தான் 'பயணம்'.

...இல்லாத படம் இது என்பதில் துவங்குகிறது 'பயணம்' பற்றிய சுவாரஸ்யம். நாகார்ஜுன் தான் ...த்தின் ஹீரோ. எப்பவுமே ராதாமோகன் படத்தில் கதைதான் ஹீரோ. இப்படத்தில் நாகார்ஜுன் அந்த ...த்தை பிடித்துக் கொண்டாலும், கதைக்கும் வெயிட் அதிகம் என்பதை நிரூபித்தது இவர்கள் காட்டிய ...ட்ரெய்லர் ஒன்று.

காந்தகார் விமானக் கடத்தல் சம்பவத்தைத்தான் படமாக்கியிருக்கிறாராம் ராதாமோகன். இப்படத்தின் பிரஸ்மீட்டுக்கு வந்திருந்தார் நாகார்ஜுனா. சுமார் முப்பது வருடத்திற்கும் மேலாக ஒரு ஹீரோ தன் அழகையும் வாலிபத்தையும் கொஞ்சம் கூட இழக்காமல் இருக்கிறார் என்றால் அது எவ்வளவு பெரிய விஷயம்.

நேரடியாக அவரிடமே இது பற்றி கேட்கப்பட்டது. ஓங்கி பலமாக சிரித்தார். அதுதான் பதிலோ என்று நாம் நினைக்கிற அளவுக்கு இடைவெளி விட்டு 'நான் பிளாஸ்டிக் சர்ஜரி எதுவும் பண்ணலைங்க. அதுதான் என் உடல் வாகுன்னு நினைக்கிறேன். அளவான உணவு, தினசரி யோகா இது கூட ஒரு காரணம்' என்றார்.

தமிழ், தெலுங்கு என்று ரெண்டு மொழிகளில் நடிக்கிறீங்க. ரெண்டுல எந்த சினிமா பெஸ்ட்? இந்த கேள்விக்கு நாகார்ஜுனா முழிக்க போகிறார் என்று எதிர்பார்த்தால் படீரென்று பதில் சொன்னார். 'சந்தேகமேயில்லை. தமிழ்ப் படங்கள்தான்!' நிருபர் கூட்டம் இந்த பதிலை சற்று அதிர்ச்சியோடு உள் வாங்கிக் கொண்டிருக்க, அடுத்த கணமே அவரிடமிருந்து வந்தது இன்னொரு பதில். ஹதராபாத்ல இப்படி கேட்டிருந்தா என்னோட பதில் 'தெலுங்கு படங்கள்தான்!'

இப்பதான் புரியுது. அவரால் எப்படி தொடர்ந்து சூப்பர் ஸ்டாராகவே இருக்க முடியுதுன்ன...





ஆடு புலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முஸ்லிம் மக்களின் யாழ் மீள்குடியேற்றம்

**1990 இல்** யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து புத்தளம், நீர் கொழும்பு பகுதிகளில் குடியமர்ந்த முஸ்லிம் மக்கள் யாழ்ப்பாணத்தில் மீள்குடியமர்வதற்கான பதிவுகளை மேற்கொள்வதற்காக ஆதங்கங்களைத் யாழ்ஓசைக்குத் தெரிவித்திருந்தனர்.

### ஜமீஸ் பரக்காத்

மீள்குடியேற்ற அமைச்சின் உப அலுவலகத்தில் பணியாற்றுகிறேன். நானும் எனது கணவரும் இங்கிருந்து இடம்பெயர்ந்து சென்ற போது அது எமக்குப் புதிய இடமாகவும் புரியாத சூழலுமாக இருந்தது. எனது கணவர் 1987 இல் இங்கு இடம் பெற்ற ஷெல் தாக்குதலுக்கு உள்ளானவர். வன்முறையில் பாதிக்கப்பட்ட நபர்களில் ஒரவராக இருந்த நிலையில் இடம்பெயர்ந்தோம். அவர் புத்தளத்தில இறந்து விட்டார். எனக்கு மூன்று பிள்ளைகளும் அவர்களை வளர்த்துக் கல்வி கற்பித்து ஒரு நல்ல நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற எனது விருப்பம் ஓரளவு நிறைவேறினாலும் அங்கு அவர்களால் முழுமையான கல்வியைப் பெறமுடியவில்லை.



இங்கு எமக்கு ஒரு நல்ல வாழ்க்கை நிலை கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் வந்துள்ளேன். பதிவுகள் என்று அடிக்கடி செய்து கொண்டிருப்பதில் பயனில்லை. இரண்டாவது தடவையாகவும் இப்போது பதிவுகளைச் செய்கின்றோம். இங்கு தங்கி நிற்கக்கூடிய வசதிகளும் இல்லை. வந்ததிலிருந்து வீதியே தஞ்சம் என்று நிற்கின்றேன். நாங்கள் இங்கு மீளக்குடியமர வேண்டுமானால் உடனடியாக வீட்டு வசதி மலசலகூட வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும். காணிகள் இல்லாமல் பலர் இருக்கிறார்கள். கொழும்புத்துறைப் பகுதியில் அரசாங்க காணிகள் உண்டு. அவற்றில் ஒரு நூறு வீடுகளை அமைத்து எங்களைக் குடியமர்த்தலாம். வீட்டு வசதிகள் மற்றும் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றினால்தான் நாங்கள் இங்கு இருக்கமுடியும். சொந்த மண்ணில் இருப்பது நிம்மதி. அரசும் அதிகாரிகளும் எங்களைக் கவனத்தில் எடுக்க வேண்டும் என்றார்.

### மௌலவி நௌவ்சாத்

1990இல் இடம் பெயர்ந்து புத்தளம் 90 ஏக்கர் கிராமத்தில் நாங்கள் நானூறு குடும்பம் முகாம்களில் தங்கியிருந்தோம். ஆரம்பத்தில் சில உதவிகள் வழங்கப்பட்டாலும் பின்னால் எந்த உதவியும் அரசினாலோ பாராளுமன்ற உறுப்பினர்களாலோ அரச சார்பற்ற நிறுவனங்களினாலோ எமக்குக் கிடைக்கவில்லை. எமது உறவுகள் சொந் தங்களின் உதவியும் கஷ்டங்களுக்கு மத்தியில் முடிந்த வரை கூலித் தொழில்களில் ஈடுபட்டும் வருமானத்தைத் தேடியே நாங்கள் சிறிய அளவிலாவது வீடுகளைக் கட்ட முடிந்தது.



வீடுகள் கட்ட உலக வங்கி உதவியது. நிவாரண உதவிகளை வழங்க அமைச்சர் றிசாத் பதியுதீன் கவனம் எடுத்தார். தனிப்பட்ட சவூதி அரேபியாவின் உதவியையும் பெற்றுத் தந்து 600 வீடுகள் அமைக்க உதவினார். மற்றப்படி எந்த முஸ்லிம் உறுப்பினர்களும் எமக்காக எதுவும் செய்ததில்லை. பலர் தொடர்ந்தும் அகதி முகாமிலேயே உள்ளனர். ஓலைக்குடிசைகளில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இங்கு காணி இருப்பவர்கள், இல்லாதவர்கள் என்றில்லாமல் எல்லோருக்கும் வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் கல்வி, மின்சார வசதிகளையும் செய்து தர வேண்டும். அடிப்படை வசதிகள் கிடைக்கும் பட்சத்தில் எல்லோருமே மீளக்குடியமர்வார்கள். யாழ்ப்பாணத்தில் பொம்மை வெளியில் மழை வெள்ளத்தால் 80 குடும்பங்கள் சமைத்துச் சாப்பிடக்கூட முடியாதுள்ளனர். மக்கள் இங்கு மீளக்குடியமர்வதற்கான நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். வசதிகள் இல்லாத நிலையில் எப்படி மீள நாம் குடியமர முடியும்?

### அருசியா மாஹிர்

இங்கிருந்து சென்று இருபது வருடங்களாக அகதியாக வாழ்ந்து விட்டோம். இனியாவது அகதி நிலை இல்லாமல் சொந்த மண்ணில் வாழக் கிடைத்தால் நல்லது தானே. எத்தனை நாட்களுக்குத் தான் அகதி வாழ்க்கை. ஒரு குறைந்த பட்ச வசதிகளுடன் கூடியதான வீடுகூட இல்லாமல் அடிப்படை வசதிகள் பிள்ளைகளின் கல்வி தொழில்களை இழந்து [illegible] இருக்கமுடியும். இடம்பெயர்ந்த அனைத்து முஸ்லிம் மக்களும் கஷ்டங்களை அனுபவித்து விட்டார்கள். இனியாவது சந்தோசமாக இருக்க அரசும் அதிகாரிகளும் உதவ வேண்டும். அரச அதிபர் அம்மா ஜனாதிபதியுடன் கதைத்து உதவுவதாகச் சொல்லியிருக்கிறார். எல்லா மக்களும் ஒற்றுமையாகவும் சந்தோசமாகவும் இருக்க வேண்டும் என்றும் சொல்லியுள்ளார். எல்லாமே நல்ல படியாக நடக்க வேண்டும்.



### எம்.எல்.எம். நபாய்ஸ்

8 வயதில் இங்கிருந்து சென்றேன். இப்போது 23 வயதாகிறது. புத்தளம் நீர்கொழும்பு ஆகிய பகுதிகளில் எம்மவர்கள் முகாம் வாழ்க்கையுள் முடங்கிக் கிடக்க வேண்டியதாயிற்று. என்னால் புலமைப் பரிசில் கல்வியைக் கற்கக் கூட முடியாமல் போய்விட்டது. பத்தாம் ஆண்டு வரை கஷ்டப்பட்டுப் படித்தேன். கல்விக்கான வசதிகள் இங்குபோல் அங்கு இல்லை. பாதிக்கப்பட்ட எம்மவர்கள் தமது சொந்த முயற்சியாலேயே சிறிதாவது முன்னேற முடிந்தது. எங்களை எந்த ஒரு அமைச்சர் சரி அதிகாரிகள் சரி ஏன் முஸ்லிம் பிரதிநிதிகள் கூட திரும்பிப் பார்க்கவில்லை. நாங்கள் வேற்று மாகாணத்தவராகவே பார்க்கப்பட்டோம். இங்கு மீள்குடியமர விருப்பம் அதற்கான அனைத்து உதவிகளும் வழங்கப்படவேண்டும்.



காணியற்றோருக்கு காணிகளை வழங்கி அதில் வீடுகளைக் கட்டிக் கொடுக்கவேண்டும். புத்தளத்தில் 2010 ஆம் ஆண்டு ஆறாம் மாதம் தொடக்கம் 12 ஆம் மாதம் வரைக்குமான உணவு முத்திரை தந்தார்கள் ஆனால், பொருட்கள் வழங்கப்படவில்லை. அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் குடியேறாதவரையில் இங்கு இருப்பதைவிட புத்தளத்திலேயே இருந்து விடலாம்.

### சியானாஸ் தாஹிர்
**தலைவர்**

*(யாழ்.-கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம் சம்மேளனம்)*

முதற்கட்டமாக இடிந்த வீடுகளை திருத்தியமைக்கவும் காணிகள் இல்லாதவர்களுக்குத் தற்காலிக வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் காணியுள்ளவர்களுக்கு வீடு கட்டவும் வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். இவற்றை முதலில் நிறைவேற்றுவதுடன் படிப்படியாக அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும். யாழ். அரச அதிபரிடம் இது பற்றிக் கூறியுள்ளோம். வசதிகளை ஏற்படுத்தாமல் குடியேறக் கேட்டால் ஒருவரும் சம்மதிக்கமாட்டார்கள். நாங்கள் பெரும்பாலும் வியாபாரிகள் பழைய இரும்பு வியாபாரிகள். இருநூறு பேருக்கு மேல் உள்ளனர். அவர்கள் தாங்கள் கொள்வனவு செய்த இரும்புகளை தென் பகுதிக்குக் கொண்டு செல்லப் பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்குவதில்லை.



வேறு பகுதிகளிலிருந்து பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு இங்கிருந்து இரும்புகளை எடுத்துச் செல்ல அனுமதிக்கும் பாதுகாப்பு அமைச்சு அகதியாகி அனைத்தையும் இழந்து நிற்கும் எம்மவர்களுக்கு மட்டும் அனுமதி தர மறுக்கிறது. வியாபாரம் தடைப்படுவதால் மீள்குடியமர்வும் தாமதமாகிறது. சிவில் நிர்வாகம் என்று சொல்கிறார்கள். இது விடயமாக ஜனாதிபதி பாதுகாப்புச் செயலாளர் ஜனாப் ரவூப் ஹக்கீம் ஆகியோருக்கு வியாபாரிகள் சங்கம் அறிவித்தது. இன்றுவரை ஒரு நடவடிக்கையும் இல்லை.

அமைச்சர் றிசாத் பதியுதீன் கஞ்சிக்குள் கிடக்கும் பயறு மாதிரி ஏதோ ஒரு இரண்டு உதவிகள் செய்துள்ளார். மன்னாரில் உள்ள முஸ்லிம் மக்களுக்குப் போக யாழ். முஸ்லிம்களுக்கு உதவிசெய்திருந்தால் மூன்று மாதத்துள் மீள் குடியமர்ந்திருக்க முடியும். முஸ்லிம் தலைவர்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு முஸ்லிம் படும் துயரத்தைக் கண்டும் காணாதவர்களாக இருக்கிறார்கள். நாங்கள் யாழ்ப்பாணத்து முஸ்லிம்கள் என்பதால் வேறு படுத்தப்பட்டுள்ளோம். தமிழ் ஆயுதக் குழுக்களால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் தமிழ் எம்.பி.க்களின் முயற்சியினால் மீள இங்கு வரவேண்டும். எங்கள் பிரச்சினைகளைக் கவனிக்க வேண்டியது அவர்களது பொறுப்பும் கூட.

'கஷ்டங்கள் விளங்குகிறது. முஸ்லிம்கள் எமது சகோதர இனத்தவர்கள். மீண்டும் நீங்கள் அடிப்படை வசதிகளுடன் இருக்க வேண்டும்.

அதற்காக எனது முழு ஒத்துழைப்பையும் வழங்குவேன்' என யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கூறியுள்ளதாகவும் எமக்கு நம்பிக்கை இருப்பதாகவும் முஸ்லிம் மக்கள் பலர் தெரிவித்தனர்.

துருந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் விவாகரத்துப் பெறலாம்?

(சென்ற வாரத் தொடர்ச்சி)

**வன்ம உறவறுப்பு என்றால் என்ன?**

கணவன் தனது சட்டபூர்வமான மனைவியை கைவிட்டுச் செல்வது அல்லது மனைவி தனது சட்டபூர்வமான கணவனை விட்டுச் சென்று சோர வாழ்வில் ஈடுபடுதல் என்று பொருள்படும். இவ்வாறாக விட்டுச் சென்ற கணவன் அல்லது மனைவி ஏழு வருடங்கள் தொடர்ச்சியாக உணவும் படுக்கையும் வெவ்வேறாக இருந்தால் (Bed and Food) அங்கு வழக்கெடு காரணம் (Cause of Action) எழுகின்றது. ஏழு வருடங்கள் எவ்வித தொடர்பும் இல்லாமல் வாழ்க்கைத் துணை (Spouse) வாழ்வதால் மட்டும் தன்னியல்பாக திருமண பந்தம் (Automatic Divorce) அற்றுப்போய்விடாது. ஏழு வருடங்கள் தம்பதிகள் பிரிந்து வாழ்ந்தார்கள் என்பதைக் காரணம் காட்டி ஒரு வழக்கைத் தாக்கல் செய்யலாம். ஏழு வருடங்கள் எதுவித தொடர்பும் இல்லாமல் தனது வாழ்க்கைத் துணை வாழ்ந்தார் என்பதே இங்கு வழக்கெழு காரணமாக சுட்டப்படல் வேண்டும்.

**அமை நிலையான வன்ம உறவறுப்பு என்றால் என்ன?**

ஒரு கணவன் அல்லது மனைவி தனது வாழ்க்கைத் துணையை வேண்டுமென்றே அடித்துத் துன்புறுத்தல் செய்தல் (Torture) திருமண பந்தங்களை மறுத்தல், நிகர் மாற்றான கடமைகளை ஒறுத்தல் (Reciprogal Duties) எனப் பல காரணங்கள் படிப்படியாக இரு பகுதியினருக்குமிடையில் மனக் கசப்புணர்வை வளர்த்தமை அமை நிலையான வன்ம உறவறுப்பு எனப்படும்.

**யார் யார் விவாகரத்துப் பெறலாம்?**

**ஒரு சட்டபூர்வமான திருமண பந்தத்தின் உள்ளார்ந்த நோக்கம் என்ன?**

ஒரு சட்டபூர்வமான திருமண பந்தம் என்ன நோக்குடையது என்பதை பின்வருமாறு சட்டம் வரைவிலக்கணப்படுத்துகின்றது.

# சட்டமும் சமூகமும் 12




முதலாவது, தம்பதிகளிடையே பரஸ்பர சந்தோஷம் என்பது (Mutual Happiness) இரண்டாவது சந்தான விருத்தி அதாவது குழந்தைகளைப் பெற்று பரம்பரையை விருத்தி செய்தல். (Prolong to Next Generation) இந்த நோக்கங்களை அடைவதில் இடையூறுகள் காணப்படுமாயின் அதனை நிவர்த்தி செய்ய என்ன செய்யலாம் என்பது முக்கியமான விடயமாகும்.

தம்பதிகளிடையே பரஸ்பர சந்தோஷத்திற்கு இடையூறாக இருக்கக் கூடிய ஒரு விடயம் யாராவது ஒருவருக்கு ஏற்படும் மாற்றமுடியாத மனநோய். திருமணத்திற்கு முந்திய மனநோய் என்றால் அதற்குரிய சான்றுகளை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து விவாகரத்து பெறலாம். திருமணத்திற்குப் பின்னரான மனநோய் விவாகரத்திற்கு ஒரு காரணியாக நீதிமன்றங்களில் ஏற்கப்படுவதில்லை.

திருமணத்திற்கு முந்திய மனநோய் என்பது நிரூபிக்கப்பட்டால் அந்தத் திருமண ஒப்பந்தம் செய்யப்பட்ட வேளையிலிருந்தே செல்லுபடியற்றதாக்கப்படும். திருமண பந்தம் வெற்று வெறிது (Nullity of Marriage) எனத் தீர்ப்பு வழங்கப்படும். மனநோய் வாய்ப்பட்ட ஒருவர் திருமண பந்தத்தில் இனிமேலும் ஈடுபட முடியாது. மனநோயாளிகள், சிறக்கவையர் (Minors) அதாவது பதினெட்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட ஆண், பெண் இருவரும் திருமண பந்தத்தில் ஈடுபடமுடியாது.

இவர்களது திருமணத்தை திருமணப் பதிவாளர்கள் பதிவுசெய்ய முடியாது. சட்டத்தை மீறி திருமணப் பதிவு செய்யப்படின் அதனைப் பதிவுசெய்யும் திருமணப் பதிவாளரும் தண்டனைக் குட்படுத்தப்படுவார் என்பது தற்போதுள்ள மிக இறுக்கமான சட்டம்.திருமணத்தைப் பதிவு செய்யு முன் மணமக்களது பிறப்புச் சான்றிதழை திருமணப்பதிவாளர் கட்டாயமாகப் பரிசீலனை செய்தல் வேண்டும்.

**மணவிலக்குப் பெறுதல்**

திருமணம் செய்து கொண்ட தம்பதிகளிடையே ஏதோ ஒரு காரணமாக பரஸ்பரம் மனஸ்தாபம் ஏற்பட்டு பிரிந்து வாழ நேரிடின் அதனை மணவிலகல் (Separation of Marriage) என்பார்கள்.

இது விவாகரத்து (Divorce) அல்ல. பரஸ்பர சம்மதத்தோடு ஒருவரோடு ஒருவர் எவ்வித பௌதீக தொடர்புகளும் இல்லாமல் தனித்தனியாக வாழுதல் எனப் பொருள்படும். இதற்காக இருவரும் ஒரு சட்டத்தரணி அல்லது பிரசித்த நொத்தாரிசு முகதாவில் 'தொடராமுறி' (Deed of Separation) ஒன்றை எழுதிக் கொண்டு பிரிந்து வாழலாம். இடைக்காலத்தில் மனஸ்தாபம் அருகிப்போனால் தொடராமுறியை இரத்துச் செய்து விட்டு மீண்டும் ஒன்றுசேர சட்டத்தில் இடம் இருக்கிறது. அதனை மீள் இணைவு (Reconcillation) என்பார்கள். மீள் இணைவுக்கு தம்பதிகளில் யாராவது ஒருவர் சம்மதம் இல்லையென்றால் விவாகரத்து வழக்கை தகுதிவாய்ந்த மாவட்ட நீதிமன்றம் (Competent Court) ஒன்றில் தாக்கல் செய்ய சட்டத்தில் இடம் இருக்கிறது.

## கேள்வி பதில்

கந்த ஞானமுத்து,
*அருள்மிகு ஞானவைரவர்,*
தேவஸ்தானம், கைதடி மேற்கு.

**கேள்வி :** தேசவழமைச் சட்டம் என்றால் என்ன? அது யாழ்ப்பாணத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதன் காரணம் என்ன?

**பதில் :** தேசவழமைச்சட்டம் என்பது தமிழ் மக்களின் பாரம்பரியமான வழக்காறுகள் (Customs) மரபுகள் (Conven tion) நியமங்கள் (Norms) சம்பிரதாய சடங்குகள் (Traditional Rites) என்பவற்றின் உள்ளடக்கமே தேசவழமையாகும்.

அது யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கிய வடமாகாணம் முழுவதும் நடைமுறையில் உள்ளது.

**கேள்வி :** தீண்டாமை என்றால் என்ன? அது குறிப்பாக தென்னிந்தியாவிலும் யாழ்ப்பாணத்திலும் பெரும்பான்மையினர் (தமிழர்கள்) களாலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. ஏன்?

**பதில் :** தீண்டாமை என்பது ஒரு உளம் சார்ந்த விடயப் பொருள் (Psychological Factor) ஆகும். இதில் தீண்டாமை வேறு (Untouchability) சாதிக்கட்டமைப்பு வேறு (Caste Stytem) பெரும்பாலும் தீண்டாமை ஒழிந்துவிட்டது. ஆலயப் பிரவேசம், தேநீர்க்கடை நுழைவு மறுப்பு, பேருந்து போக்குவரத்தில் சம ஆசன அமர்வு மறுப்பு என்றெல்லாம் ஒரு காலத்தில் பரந்த பரிமாணத்தில் தீண்டாமை விசாலிப்புப் பெற்றிருந்தது.

பொருளாதார மேம்பாடு, கல்வி விருத்தி என்பன காரணமாக தீண்டாமை ஒழிந்து விட்டது. ஆனால் சாதிக்கட்டமைப்பு இப்போதும் உள்ளது. தென்னிந்தியா, வடகிழக்கு மாகாண மக்கள் மத்தியில் மட்டுமன்றி தென்னிலங்கைச் சிங்கள மக்கள் மத்தியிலும் இந்தச் சாதிக்கட்டமைப்பு இன்னும் இருக்கிறது. இதைவிட பிரதேச மட்டத்திலும் கண்டிச் சிங்களவர், கரையோர சிங்களவர் என்ற கட்டமைப்பு இருக்கிறது. இந்தச் சாதிக்கட்டமைப்பு இன்னும் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் இருக்கிறது.

அன்று கீழை நாடுகளில் திருநீலகண்டரின் மனைவியிடம் இருந்தது. இது போலவே மேலை நாடுகளில் யூலியஸ் சீசரின் மனைவியிடம் இருந்தது. கீழை நாட்டு நந்தனார் சரித்திரம் சாதிக்கட்டமைப்பையே பிரதிபலிக்கின்றது. இந்தியாவின் அரசியலமைப்பை வரைந்த டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கு பாடசாலை அனுமதி சாதியின் பெயரால் மறுக்கப்பட்டது. அவர் அவற்றையெல்லாம் முறியடித்து மிகப் பெரிய கல்விமானாக வளர்ச்சி பெற்றார். இன்றும் போற்றப்படுகிறார்.

**கேள்வி :** ஆலயங்கள், பாடசாலைகள், உணவகங்கள் போன்றவற்றிலும் தற்போதும் சிறுபான்மைத் தமிழ் மக்களைப் பாதிக்கப்படக்கூடிய முறையில் மனித சுதந்திரம் மீறப்படுகின்றனவே. அதற்கான அடிப்படைக் காரணங்கள் யாது?

**பதில் :** வெளியூரில் ஒரு யாழ்ப்பாணத்தவர் முன்னர் அறிமுகமில்லாத யாழ்ப்பாணத்துத் தமிழரைக் கண்டால் நீங்கள் யாழ்ப்பாணமா? என்று கேள்வி கேட்பார். ஆம் என்றால் அடுத்து அவரிடமிருந்து வரும் கேள்வி யாழ்ப்பாணத்தில் எந்த ஊர்? ஊரைச் சொன்னால் அடுத்து அவரிடமிருந்து வரும் கேள்வி எந்தக் குறிச்சி என்பது. குறிச்சியைச் சொன்னால் அங்கு தனக்குத் தெரிந்த ஒருவரது பெயரைக் குறிப்பிட்டு அவரைத் தெரியுமா? என்று கேட்பார். ஆம் என்று பதில் சொன்னால் நீங்கள் அவருடைய ஆட்களோ என்று கேட்பார். இத்தனை கேள்விகளும் கேட்கிறாரே ஏன் என்றால் அந்த யாழ்ப்பாணத்து தமிழர் மீது கொண்ட அன்பு, பற்று, பாசம் எதுமேயல்ல. அவருக்கு அவரது அகராதியின் படி தேவைப்பட்டது இவர் என்ன 'சாதி' என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதேயாகும்.

கல்யாணம் பேசும் போது கல்யாணப் புரோக்கரிடம் மாப்பிளையின் தாயார் சொல்லி வைப்பது 'புரோக்கர் பசையுள்ள இடமாய்ப் (காசு) பார்த்துப் பேசு' என்பதே. பெண்பிள்ளையாயின் அவளது தகப்பனார் கல்யாண புரோக்கரிடம் சொல்லி வைப்பது 'சொம்பு தண்ணி எடுக்கக்கூடிய இடமாய்ப் பார்த்து பேசு' என்பதேயாகும். இந்த சொம்பு தண்ணி என்பது சாதி மரபைக் குறிப்பதாகக் கூறப்படுகின்றது. உண்மையும் அதுவே.


இப்போது உள்நாட்டு யுத்தம் இடப்பெயர்வு வாழ்வியல் மாற்றம் யாவும் ஊர்க்கட்டுக்கோப்பைக் குலைத்து விட்டது. ஆகவே ஊரைக் கொண்டு சாதி வியாபாரம் செய்வது சுலபமல்ல. ஆகவே மனித சுதந்திரத்தைப் பறிக்கும் பாதகச் செயல்கள் சாதியின் பெயரால் கால கெதியில் அருகிப் போய்விடும் என எதிர்பார்ப்போமாக!

சட்டம் தொடர்பான உங்கள் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்

**அனுப்பவேண்டிய முகவரி**
**யாழ் ஓசை**
விரஜேசுரி கிளைக் காரியாலயம்,
117, [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி 11



**இடமிருந்து வலம்**

1. மிக ஆடம்பரம்
6. சுக்கிரீவன் அண்ணா (ஒரு கவிஞர்)
8. விலங்குகள் கால் பதித்த இடம்
11. புதிய
14. பொருட்கள் (குழம்பியுள்ளது)
18. அடைக்கலம் (வலம் இடமாக)
22. பாடலின் கட்டுப்பாட்டு அங்கம்
25. தாங்கள் (பன்மை) (வலம் இடமாக)
27. வருடத்துள் 12 தரம் வரும் (திரும்பியுள்ளது)
30. தகாத வழிக்கு போடும் திட்டம்
33. நித்திரை
37. நவக்கிரகங்களுள் ஒன்று
39. இறைவனின் வரலாறு சொல்லும் நூல் வகைகளில் ஒன்று (இறுதி எழுத்து இல்லை)
42. திருமால்
46. உங்கள் (மாறியுள்ளது)
48. முழுமுதற்கடவுள்

**மேலிருந்து கீழ்**

1. இராமனின் வில்லு
2. குதிரையின் கட்டுப்பாட்டு கருவி
3. இதிகாசங்களில் ஒன்று
5. எம் / எங்கள் (தலைகீழ்)
6. குரங்கினம்
12. தேவையற்றதை இவ்வாறு சொல்வார்கள்
17. தாண்டு (தலைகீழ்)
20. ஒரு காலத்தில் இரும்பு மனிதன் என அழைக்கப்பட்டவர்
24. பரிபூரணமான லட்சணத்தை இவ்வாறு சொல்வார்கள். (தலைகீழ்)
28. விஜயதசமி மறு பெயர்
39. காட்டு விலங்கு
43. புன்னகை செய் (தலைகிழ்)

**குறுக்கெழுத்து போட்டி 09க்கான விடைகள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| அ | தி | கா | ர | ம் | | | கா |
| பி | | சி | னை | | க | ள | வு |
| சே | து | | ச | து | ர | ம் | |
| க | ம் | பி | | ய | டி | சே | ம் |
| ம் | ம | ர | | ர் | | | ர |
| | ல் | தி | ம | | சோ | ம் | ப |
| சா | | | சூ | ர் | யா | | ம் |
| தி | ரு | வா | தி | ரை | | னை | ப |

## பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகள்

1. **கே.அரசேஸ்வரன்**
கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

2. **பிரம்பஸ்ரீ ச.க.சுதர்சனக்குரு**
சிவன்கோவிலடி, ஆவரங்கால், புத்தூர்

3. **அ.ஸ்ரீஸ்கந்தராஜா**
15/11, புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர் கிழக்கு, யாழ்.

**குறுக்கெழுத்துப் போட்டி 11 க்கான விடைகளை எழுதி ஒரு வாரத்திற்குள் எமக்குக் கிடைக்கக்கூடியதாக தபால் அட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கவும்.**

**அனுப்பவேண்டிய முகவரி**

**குறுக்கெழுத்துப் போட்டி**
**'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக்காரியாலயம்,**
**117, புகையிரத நிலைய வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**பாராட்டுப்பெறும் முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் பிரசுரிக்கப்படும்.**




"ஏன் கவலையாக இருக்கிறாய்?"
"நான் சமைத்த உணவை என்னையே சாப்பிடச் சொல்கிறார் என் கணவர்!"




டாக்டர் - நீங்க கம்பியூட்டர் எஞ்சீனியரா?
நோயாளி - ஆம், எப்படிக் கண்டு பிடிச்சீங்க?
டாக்டர் - உங்க இதயம் 'லப்டப்' என்று அடிப்பதற்குப் பதில் 'லெப் டொப்' என்று அடிக்குதே!




திரையரங்கில்:
காதலன்அன்பே: படம் நன்றாக தெரிகிறதா?
காதலி: ஆம், கண்ணா!
காதலன்: யாரும் மறைக்கலியே!
காதலி: இல்லை கண்ணா!
காதலன்: சீட் வசதியா இருக்குதா?
காதலி: ஆம், கண்ணா!
காதலன்: அப்படியானால் சீட்டை மாற்றிக் கொள்ளலாமா?




"ஆவி மேல் உனக்கு நம்பிக்கை உண்டா"
"இல்லை சேர்!"
"உன் தாத்தா இறந்துவிட்டதாகச் சொல்லி போன வாரம் லீவு எடுத்தாயே அவர் நேற்று இங்கே வந்திருந்தார்!"




இரவில் சுடுகாட்டுப் பக்கமா இருந்த பாதையில் தனியே பயணம் செய்து கொண்டிருந்தவர் தற்செயலாக ஒருவரை சந்தித்தார்.
"இந்தப் பக்கமாக பிசாசு ஏதும் உலவுகிறதா?"
"என்னிடமே கேட்டால் எப்படி?"




"அவருக்கு மிகப்பெரிய கவலை போலிருக்கு!"
"எப்படிச்சொல்லுறாய்?"
"அவர் அணிந்திருக்கும் "விக்' 'கில் இருந்து கூட முடிகொட்டுதே"




நடிகையின் கணவர் ஆஸ்பத்திரியில் ஒக்ஷிஜன் ஏற்றப்பட்ட கட்டிலில் கிடந்தார்.
**நடிகை:** அன்பே நான் உங்களுக்காக எதையும் செய்ய காத்திருக்கிறேன். என்ன செய்ய வேண்டும்.
**கணவன்:** ஒன்றும் செய்ய வேண்டாம்.
ஒக்ஷிஜன் ஏற்றப்படும் குழாயை மிதித்துக் கொண்டிருக்கிறாய் காலை எடுத்தால் போதும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம் மாறும் யாழ்ப்பாணக் கலாசாரம்

யாழ்ப்பாணத்தின் கல்வித் தரவீழ்ச்சி குறித்து கல்வியியலாளர்களால் அதிகம் கவனம் செலுத்தப்பட்டு வரும் பின்னணியில் யாழ்.குடாநாட்டின் கல்வித் தரம் வீழ்ச்சிப் பாதையில் பயணித்துக் கொண்டிருப்பதற்கு ஆசிரியர்களுக்கும் பங்குண்டென்பதை மறுக்கமுடியாது.

இன்றைய கல்விப்புலத்தில் தனியார் கல்வி நிலையங்கள் காத்திரமான பங்களிப்பைச் செலுத்துகின்றன. பாடசாலைகளுடன் ஒப்பிடும் போது தனியார் கல்வி நிலையங்களின் செல்வாக்கு மேலோங்கி உள்ளது.

மாணவர்கள் பாடசாலைகளை விடவும் தனியார் கல்வி நிலையங்களிலேயே பெரிதும் நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கின்றனர். குறிப்பாக, உயர்தர வகுப்பு மாணவர்கள் பாடசாலைகளில் தமது கல்விச் செயற்பாடுகளுக்காக செலவிடும் காலங்களை விடவும் தனியார் கல்வி நிலையங்களில் தமது கல்வி நடவடிக்கைகளுக்காக செலவிடும் காலங்கள் அதிகம் என்றே கூறலாம். அந்தளவிற்கு கல்விச் சேவை வழங்குதல் தொடர்பில் தனியார் கல்வி நிலையங்களுக்கு பெரும் பங்கு உண்டெனில் மறுப்பதற்கில்லை. எனினும் அத்தகைய தனியார் கல்வி நிலையங்கள் தரமான கல்வியை மாணவர்களுக்கு வழங்குகின்றனவா? என்ற வினா பலரது மனங்களையும் குடைகின்றது.

இன்றைய வாழ்வியற் சூழலில் பணத்தின் செல்வாக்கு உயர்வடைந்துள்ளது. பணத்தினால் எதுவும் செய்யலாம் என்ற நிலை தோன்றியுள்ளது. தனியார் கல்வி நிலையங்களில் கற்பிக்கும் ஆசிரியர்கள் பலர் பணம் தின்னும் கழுகுகளாக அலைகின்றனர். பணம் சம்பாதிக்கும் செயற்பாடுகளில் மட்டுமே குறியாக இருக்கும் இவர்கள் தரமான கல்வியை தம்மை நம்பிவரும் மாணவர்களுக்கு வழங்க முற்படுவதில்லை என்ற ஆதங்கம் மாணவர் தரப்பிலிருந்து எழுகின்றது.

யாழ்.நகரப்பகுதியில் இயங்கிவரும் பிரபலம் மிகுந்த ஒரு சில தனியார் கல்வி நிறுவனங்கள் கல்வி வழங்குதல் தொடர்பில் ஏகபோக உரிமையைக் கொண்டுவிளங்குவதாகத் தெரியவருகிறது.

உயர்தர மாணவர்கள் கல்வி கற்கும் அந்த கல்வி நிறுவனத்தில் ஒரு சில பாடங்களுக்கு புகழ் பூத்த ஆசிரியர்கள்(?) கல்வி கற்பிக்கின்றனராம். ஏனைய பாடங்களுக்கு நிபுணத்துவம் இல்லாத ஆசியர்களையே தனியார் கல்வி நிலைய நிர்வாகம் தமது வருமானத்தைக் கருத்திற் கொண்டு நியமித்திருக்கிறதாம். ஆனால் அந்நிறுவனத்தில் தனிப்பாட அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதனால் நிபுணத்துவம் பெற்ற ஆசிரியர்களிடம் பாடங்களை தெரிவுசெய்து கற்கும் சுதந்திரம் மாணவர்களுக்கு மறுக்கப்படுகிறது. இறாலைப் போட்டு சுறாபிடிக்கும் வேலையில் இத்தகைய கல்வி நிறுவனங்கள் ஈடுபட்டிருப்பது பற்றி ஏராளமான முறைப்பாடுகள் மாணவர்களால் தெரிவிக்கப்படுகின்றன.

குறித்த சில தனியார் கல்வி நிலைய நிர்வாகங்கள் தமது வருமானமீட்டும் நலனை மட்டும் கருத்தில் எடுத்துச் செயற்படுகிறதே தவிர, மாணவர்களின் நலன்களில் எதுவித அக்கறைகளையும் செலுத்துவதில்லை என கூறப்படுகின்றது.

எந்த ஆசிரியரிடம் எந்தப் பாடத்தைக் கற்பதால் இலகுவில் புரிந்துகொள்ள முடியும் என்ற தெரிவு மாணவர்களிடத்தில் இருக்கிறது. ஏனெனில், மாணவர்கள் இலவச கல்வியைத் தனியார் கல்வி நிலையங்களிலிருந்து பெற்றுக்கொள்வதில்லை. பணம் செலுத்தியே கற்கிறார்கள். அதுவும் உயர்தர வகுப்பிற்குரிய கட்டணமாக சில தனியார் கல்வி நிறுவனங்கள் ஒரு பாடத்திற்கு 500 ரூபா வீதம் மூன்று பாடங்களுக்கும் மொத்தமாக 1,500 ரூபா வசூலிப்பு நடக்கிறது. இதில் பதிவுக்கட்டணம் வேறு.

அத்துடன், மேலதிக வகுப்புக்களை எடுத்தால் தான் பாடத்திட்டத்தை விரைந்து முடிக்கலாம் எனக் கூறும் சில ஆசிரியப்பெருந்தகைகள் (?) மேலதிகமாக எடுக்கும் ஒவ்வொரு வகுப்புக்கும் பிரத்தியேகமான முறையில் பணம் அறவிட்டு வருவதாக மாணவர் தரப்பினால் குற்றம் சாட்டப்படுகின்றது.

இதனால் வருமானம் குறைந்த நாளாந்த கூலித் தொழிலையே நம்பியிருக்கும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் தமது கல்வியைத் தொடரமுடியாமல் திண்டாடுகின்றனர்.

பிரபல பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் சிலர் தனியார் கல்வி நிலையங்களிலும் தமது கல்விப் பணிகளைத் தொடர்கின்றனர். இந்நிலையில் அவர்கள் பாடசாலைகளில் தமது பணிகளைச் செவ்வனே ஆற்றுவதில்லை. இதனால், பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் பாதிப்படைய வழிகோலுகின்றது.

அரசாங்கப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் அரச ஊதியத்தைப் பெறுகின்றனர். இவர்கள் கற்பித்தல் செயற்பாடுகளை பாடசாலைகளில் வினைத்திறனான முறையில் மேற்கொள்வதில்லை. காரணம் அவர்களது சம்பளத்தில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தப்படமாட்டாது. மாறாக, தனியார் கல்வி நிலையங்களில் வினைத்திறனான முறையில் தமது சேவையை சிறப்பாக வழங்காவிட்டால் அவர்களது வருமானத்தில் வீழ்ச்சிநிலை ஏற்படும். இதனால்தான் தனியார் கல்வி நிலையங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துச் செயற்பட்டு வருகின்றனர். இதன் பின்னணியில் மாணவர்கள் பாடசாலைகளை விடவும் தனியார் கல்வி நிலையங்களுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர். இதனால் கல்வி நிறுவனங்கள் போட்டி போட்டுக் கொண்டு மாணவர்களைத் தம்பால் ஈர்ப்பதற்காக கைக்கொள்ளும் வழிமுறைகளோ தனி. இது பற்றி நாம் அலச முற்படவில்லை.

யாழ். நகரை அண்டிய சில இடங்களில் இயங்கும் தனியார் கல்வி நிலையங்கள் சில இரவுவேளைகளிலும் பிரத்தியேக வகுப்புக்களை நடத்துகின்றன. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு ஒரு சில பாடங்களுக்கு இரவு வேளையில் வகுப்புக்களை நடத்திவருதாகவும் மாணவர்களால் சுட்டிக்காட்டப்படுகிறது.

இப்பிரத்தியேக வகுப்புக்களுக்கு மாணவர்கள் மட்டுமன்றி மாணவிகளும் சென்று கற்பதாகவும் தெரியவருகிறது.

யாழ். குடாநாட்டின் இயல்புச் சூழல் தளம்பல் நிலையை எட்டியிருக்கும் இக் காலப்பகுதியில் இரவு நேர வகுப்புக்களை நடத்துவதென்பது ஆபத்துக்குரிய தொன்றாக அமைகின்றது. அத்துடன் மாணவிகளும் கற்பதால் பல்வேறு விபரீத விளைவுகளுக்கும் வழியேற்படுத்தப்படும்.



யாழ். நகரை அண்டிய சில இடங்களில் இயங்கும் தனியார் கல்வி நிலையங்கள் சில இரவுவேளைகளிலும் பிரத்தியேக வகுப்புக்களை நடத்துகின்றன. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு ஒரு சில பாடங்களுக்கு இரவு வேளையில் வகுப்புக்களை நடத்திவருவதாகவும் மாணவர்களால் சுட்டிக் காட்டப்படுகிறது.

இரவு நேரத்தில் மனிதர்கள் நடமாடுவதற்கே அஞ்சும் சூழ்நிலையில் இரவு நேர வகுப்புக்களை நடத்துவதற்கும் அவ் வகுப்புக்களிற்கு பெண்களையும் கலந்து கொள்ள வற்புறுத்துவதும் ஏற்றுக்கொள்ள முடியாதது. பெற்றோர்களும் தமது பிள்ளைகள் விடயதில், குறிப்பாகப் பெண் பிள்ளைகள் விடயத்தில் அசண்டையீனமாக இருக்கின்றனர்.

ஆசிரியர்கள் கவனிக்கட்டும் என பெற்றோர்களும், பெற்றோர்கள் பார்த்துக் கொள்வார்கள் என ஆசிரியர்களும் கருதும் நிலை மாற்றப்பட வேண்டும். இரு தரப்பினரும் மாணவர்கள் விடயத்தில், அதிக அக்கறை காட்டப்படல் வேண்டும். குடா நாட்டின் கல்வித்தரம் வீழ்ச்சிப் பாதையை நோக்கி நகர்வதற்கு இருதரப்பினரது பங்கும் முக்கிய காரணமாக அமைகின்றது.

தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்வதாகப் பெற்றோருக்குக் கூறிவிட்டு செல்லும் பல மாணவ, மாணவிகள் எதிர்ப்பாலினத்தவர்களுடன் கண்ட கண்ட இடங்களிலும் கலாசாரச் சீர்கேடான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். தமது கலாசாரத் தந்தைகளுக்கு கோயில் முதலிய புனித இடங்களையும் விட்டுவைப்பதில்லை என்பதே பலரது ஆதங்கமாகும்.

ஒரு காலத்தில் யாழ்ப்பாணம் கல்வித் துறையில் உச்சநிலையில் திகழ்ந்தது. பல்வேறு அறிஞர் பெருமக்களையும், கல்விமான்களையும் பிரசவித்த புண்ணிய பூமி. அத்தகைய மகத்துவம் நிறைந்த இடமானது இன்று கலாசாரச் சீரழிவுகள், சமூக விரோதச் செயல்கள் மலிந்த இடமாக மாறி விட்டது.

ஆக, இவ்விடத்தில் நாம் என்னதான் கூறினாலும் கண்டித்து எழுதினாலும் எம்மினத்தின் தலைவிதியை மாற்ற முடியாதென்பதே மறுக்கமுடியாத உண்மை. என்றாலும், ஒப்புக்காகவேனும் எமக்குள்ளிருக்கும் ஆதங்கத்தையும் சமூகப் பொறுப்பையும் உணர்ந்து எமது சக்திக்குட்பட்டுக் கண்டிப்பதுடன் மட்டும் எமது பணி முற்றுப்பெற்று விடுகின்றது. இன்றைய நவீன உலகில் உலகமயமாக்கல் என்ற எண்ணக்கரு மனித வாழ்வியலைத் தீர்மானிக்கும் காரணியாக மாறிப்போய் விட்டதன் பின்னணியில் மாற்றம் என்பதே நிரந்தரமாகிவிட்டதால் மூக்கில் விரலை வைக்கும் அளவிற்கு உலகிலே பல ஆச்சரியமான மாறுதல்கள், சம்பவங்கள் ஏற்பட்டுவருகின்றன. அதன் ஒரு பகுதியாகவே எம்மினத்தின் பண்பாட்டு வாழ்வியலில் ஏற்பட்டிருக்கும் மாற்றமும் உலக நியதிகளுக்கு உட்பட்டே இடம் பெறுவதாகக் கருதிக்கொள்வோம்.

உதிஷ்டிரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் பிரபலமானவர்கள் வரிசையில்...

**ஈழத்து தமிழ் இலக்கிய வட்டத்தில் முதுபெரும் கவிஞராக விளங்கியவர் அல்வாயூர் கவிஞர் முருகேசு செல்லையா. இயல்பாகவே பாடக்கூடிய இவர் எழுத்து வடிவில் பல பாடல்களைப் படைத்துள்ளார். சாதிக் கொடுமைக்கு எதிராகப் போராடியவர்களில் இவர் முக்கியமானவர். சைவ சமயத்தின் மீது மிகுந்த பற்றுக்கொண்ட இவர் ஒரு காந்தியவாதி. இறுதிவரை காந்தியவாதியாகவே வாழ்ந்து மடிந்தவர். தமிழ் இலக்கிய வரலாற்றில் பதிந்துள்ள இவரைப் பற்றி சில வரிகள் இங்கே......**

# அல்வாயூர் கவிஞர் செல்லையா இவரைப் பற்றி 25



- 1906 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 07 ஆம் திகதி முருகர்-குஞ்சரம் தம்பதிகளுக்கு மகனாக அல்வாயில் பிறந்தவர்தான் கவிஞர் செல்லையா.
- இவர் தனது ஆரம்பக் கல்வியை தேவரையாளி சைவ வித்தியாலயத்தில் கற்றுக்கொண்டார்.
- இளம் வயதில் நன்றாகப் பாடக்கூடிய ஆற்றலும் நகைச்சுவையாகப் பேசும் திறனும் உடையவராகத் திகழ்ந்தார்.
- 12 வயதிலேயே சிறந்த மாணவராக இனங்காணப்பட்ட செல்லையா, கரவெட்டி பண்டிதர் த.மயில்வாகனத்தினரால் சைவ சமயத்தையும் தமிழ் இலக்கியத்தையும் கற்றுக்கொள்ளும் பாக்கியத்தையும் பெற்றுக் கொண்டார்.
- கல்வியே சமுதாய வளர்ச்சிக்கு ஏணிப்படி என்று தெரிந்து கொண்ட இவர் தன் சமூக முன்னேற்றத்துக்காக உழைக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு ஆசிரியர் பயிற்சி பெற பலாலி ஆசிரியர் கலாசாலைக்குச் சென்றார்.
- 18 ஆவது வயதிலேயே பலாலி ஆசிரியர் கலாசாலையின் ஆசிரியர் பரீட்சையில் முதல் தர மாணவராக சித்திபெற்று சிறந்த ஆசிரியராக வெளியேறினார்.
- எதற்கும் தற்பெருமை காட்டிக்கொள்ளாத கவிஞர் செல்லையா, 'நான் தான் சிறுபான்மைத் தமிழ்ச் சைவர்களுள் முதல் ஆசிரியர் பட்டம் பெற்றவன்' என்பதை பெருமையாக் கூறிக்கொள்வார்.
- அக்காலத்தில் கீழ்நிலைச் சாதியுடையோர் உயர் கல்வி பெறுவதாக இருந்தால் மதம் மாறியே கல்வியைப் பெறவேண்டும். இந் நிலைப்பாட்டை தகர்த்து இவர் வெற்றிகண்டமையாலேயே அதனைப் பெருமையாகக் கூறிக்கொண்டார்.
- சைவ சமயத்திலும் தமிழிலும் மிகுந்த பற்றுக் கொண்ட கவிஞர் 27 ஆவது வயதில் பாலபண்டிதர் பயிற்சி பெற்றுத் தேறினார்.
- தேவரையாளி இந்துக் கல்லூரியில் 1927 ஆம் ஆண்டு அதிபராக பொறுப்பேற்றுக் கொண்ட இவர், 40 வருடங்கள் பாடசாலை அதிபராக இருந்து அக்கால ஆசிரியர்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தார்.
- ஆர்ப்பாட்டமில்லாமல் மிக அமைதியாகவும் தெளிவாகவும் மாணவர்களின் மனங்களில் பாடங்களைப் பதியவைப்பதில் செல்லையா ஆசிரியர் திறமைபெற்றவர்.
- இவரின் கற்பித்தல் பாங்கு இலக்கிய நயமும் கவிநயமும் கலந்து எதுகை மோனையுடன் கற்பிப்பதாகவே இருக்கும். இவர் மாணவர்களுக்காக எழுதிய 'அம்மா வெளியே வாம்மா......' என்ற பாடல் தமிழ்ப் பாடப்புத்தகத்தில் இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.
- கவிதை இலக்கியத்தில் கவிதையின் பால் மிகுந்த ஈடுபாடுடைய செல்லையா சிறுவர், பெரியோர் என அனைவரும் விரும்பிப் படிக்கும் பல கவிதைகளை எழுதியுள்ளார்.
- அனுசுயா, அமுதன், முருகபூபதி என்ற புனைப்பெயர்களில் பல இலக்கியக் கட்டுரைகளையும் கவிதைகளையும் எழுதியுள்ளார்.
- தூய சைவனாகவும் சமூக சீர்திருத்தவாதியாகவும் வாழ்ந்து வந்த கவிஞர் செல்லையா, நாகமுத்து என்பவரை திருமணம் செய்துகொண்டார். இவர் வழியே இவருக்கு மூன்று பிள்ளைகள் பிறந்தன.
- இவரின் மூத்தமகன் விவேகானந்தன் நாடறியப்பட்ட நாடகக் கலைஞராகவும் கவிஞராகவும் வானொலி நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும் விளங்கியுள்ளார்.
- காந்தீயக் கொள்கையோடு வாழ்ந்த கவிஞர் செல்லையா இறுதிக்காலம் வரை கதர் வேட்டி சட்டையை அணிந்து வந்துள்ளார்.
- இவர் வாழ்ந்த காலத்தில் பத்திரிகைத்துறை வெகுவாக வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. இதன் காரணத்தால் இவரின் பல கவிதைகள் துண்டுப் பிரசுரங்களாகவே வெளிவந்தன.
- 1958 ஆம் அண்டு இலங்கை வானொலி நடத்திய கவிதைப் போட்டியில் இவரது 'வண்டுவிடு தூது' எனும் கவிதை முதலாமிடம் பெற்றுக் கொண்டது. இக்கவிதை சமூக சீர்திருத்திக் கருத்துக்களைக் கொண்டதாகவும் அக்காலத்தில் கவிதை வளர்ச்சிக்கு ஒரு திருப்புமுனையாகவும் அமைந்தது எனலாம்.
- தாம் பிறந்த மண்ணான அல்வாயில் ஸ்ரீலங்கா பாடசாலையையும் மனோகரா என்னும் சனசமூக நிலையத்தையும் ஸ்தாபித்து அவ்வூர் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றினார்.
- தேசிய கீதம் (1932), சுகாதார சுலோகங்களும் கும்மியும் (1958), வளர்பிறை (1952), வண்டு விடு தூது (1961), தங்கத் தமிழ் கண் (1962) என்னும் கவிதைத் தொகுதிகளை நண்பர்களின் உதவியோடு வெளியிட்டார்.
- இவரின் 'தங்கத் தமிழ் கண் ' எனும் கவிதைத் தொகுப்பு தமிழரின் உரிமைப் போராட்ட உணர்வுகளை வெளிப்படுத்துவதாக இருந்தது. சிங்கள மொழி தனிச்சட்டம் அமுலுக்கு வந்த வேளை அதனை விரும்பாத தமிழர்களின் உணர்வுகளைப் பிரதிபலிப்பனவாக இதில் கவிதைகள் வெளிவந்தன.
- கவிஞர் செல்லையாவைக் கௌரவிக்கும் முகமாக 1966 ஆம் ஆண்டிலிருந்து கலா பஞ்சாங்க சித்திரை நாட்காட்டி இவர் மறைந்த தினத்தை இவரின் படத்துடன் வெளியிட்டு நினைவுகூர்ந்து வருகின்றது. நவநீத கிருஷ்ணபாரதி கவிஞர் பட்டம் வழங்கிக் கௌரவித்தார்.
- இவர் பிறந்து வளர்ந்த ஊரான அல்வாய் மக்கள் கவிஞர் வாழ்ந்த வீட்டின் வீதிக்கு இவரின் பெயரைச் சூட்டியும் சாமந்தரை ஆலடிப்பிள்ளையார் ஆலய முன்றலில் இவர் பெயரில் அரங்கு ஒன்றையும் அமைத்தும் இப் பெரியோனைக் கௌரவித்து வருகின்றனர்.
- யாழ்ப்பாணத்தில் சாதிப்பாகுபாட்டால் ஆலயங்களில் மக்கள் வழிபடுவது ஓர் சமூகப் பிரச்சினையாகவே இருந்துவந்தது. இதனை இறுதிவரை எதிர்த்து வந்த கவிஞர், நல்லூர் கந்தசாமி ஆலயப் பிரவேசப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டு அது வெற்றிபெற்று மக்கள் அனைவரும் ஆலயத்தில் உள்நுழையும் தறுவாயில் திடீரென மாரடைப்பு ஏற்பட்டு 60 வயதில் மரணமானார்.

**தொகுப்பு - அஸ்வின்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனம் கலைப்போமா?



### ஏன் இவ்வாறு நிகழ வேண்டும்?

பிள்ளைகள் வளரும்பொழுது, வளர்ச்சியின் ஒரு அம்சமாக துணைப்பாலியல்புகளின் விருத்தியும், பாலியல் ஓமோன்களின் செயற்பாடுகளும் செவ்வனவே நடைபெறும். ஓர் உயிரியின் தொடர்ச்சியைப் பேணுவதற்குத் தேவையான இனப்பெருக்க உந்துதல், பாலியல் வேட்கை என்ற வடிவில் ஏற்படும். இந்தப் பருவத்தில் இயல்பாகவே எதிர்ப்பாலார்மீது கவர்ச்சி கூடும். அவர்களைக் காணும்பொழுதும் கதைக்கும்பொழுதும் மனம் பரபரப்படையும். அவர்களுடைய தொடுகைகள் சிலவேளைகளில் கிளர்ச்சியைத் தூண்டும். காதல் என்று அழைக்கப்படும் மிகவும் சிக்கலான, குழப்பமான ஒரு விடயம் பற்றி மனம் அக்கறை செலுத்தத் தொடங்கும்.

ஆக, இவ்வாறான உணர்வுகளும், அனுபவங்களும் விருத்தியின் ஒரு படிநிலையாக நிகழ்கின்றன. பல பிள்ளைகள் இந்தப் படிநிலையில் அதிகம் பிரச்சினைகளை எதிர்கொள்ளாது தமது வளர்ச்சியை முன்னெடுத்துச் சென்றாலும், சில பிள்ளைகள் இந்த வகையான 'சுழல்'களுக்குள் அகப்பட்டுப் போகின்றார்கள். உண்மையில் அகப்பட்டுத்தான் போகின்றார்கள் - ஏன் என்றால் அவர்கள் இவ்வாறான உணர்வுகளினதும், உந்துதல்களினதும் தற்காலிகத்தன்மை பற்றி, அவை தாங்கள் வளர்கின்றபொழுது ஏற்பட்டு பின்பு மாற்றமடையக்கூடிய இயல்புகள்தான் என்பது பற்றி உணர்ந்துகொள்வதில்லை.

பிள்ளைகள் தாங்கள் வளர்கின்றபொழுது தங்களுக்கு ஏற்படுகின்ற இவ்வாறான எண்ணங்கள், உந்துதல்கள் பற்றி அறிந்துகொள்வதற்கும், பகிர்ந்துகொள்வதற்குமான வாய்ப்புகளைப் பெரியவர்கள் எவ்வளவு தூரம் கொடுக்கின்றார்கள் என்பது வெளிப்படையாக விடை தெரிந்த ஒரு கேள்வியே. வீட்டிலும் சரி, கல்விச்சாலைகளிலும் சரி இவ்வாறான வாய்ப்புகள் கிடைக்கப் பெறாதவிடத்து அவர்கள் ஒன்றில் அதுபற்றி யாரிடமும் பகிர்ந்துகொள்ளாமல் விடுகின்றார்கள். அல்லது அவர்கள் அதுபற்றித் தமது ஒத்தவயது நண்பர்களிடம் (அவர்களும் அறிவிலும், அனுபவத்திலும் முதிர்ச்சி பெறாதவர்கள் என்று உணராது) கதைத்து, பகிர்ந்து, ஆலோசனை பெறுகிறார்கள். பல சந்தர்ப்பங்களில் இவ்வாறான ஆலோசனை வழங்கும் ஒத்தவயது நண்பர்களும், தமது வயது காரணமாக ஏற்படும் 'த்ரில்', 'புதியது புனைதல்', 'பரீட்சித்துப் பார்த்தல்' போன்ற இயல்புகளால் ஆட்கொள்ளப்பட்டு, நடைமுறையில் பிரயோசனப்படாத தவறான ஆலோசனைகளை வழங்கி விடுகிறார்கள்.

என்ரை 'பிரெண்ட்' என்ரை 'நம்பரை' தன்ரை 'பிரெண்டுக்கால' அவருக்குக் கொடுத்தவ... அவரோ... அவர் மேசன் வேலை செய்கிறவர்......... இருபத்தியொரு வயது..... பிறகு அவர் என்னோட கதைக்கத் தொடங்கினவர்.... 'போன்' அண்ணா வெளிநாட்டில் இருந்து அனுப்பி வைச்சவர்.... பிறகு நாங்கள் சந்திச்சனாங்கள்..... வீட்டை விட்டுட்டுப் போனது ஏனெண்டால் அம்மாவை அவரைச் செய்து வைக்க மாட்டினம்..... அவை படிக்கிற நேரத்தில் உதுகள் தேவையில்லை எண்டவை..... நான் முதல்ல சொன்ன /பிரண்ட் சொன்னா... நீங்கள் எங்கேயாவது போய் இருந்திட்டு வந்தால் வீட்டை சேர்ப்பினம் எண்டு..... வீட்டை சேர்க்கேல்லை..... அம்மா 'பொலிசில என்ரி' போட்டுட்டா..... அவரை உள்ளுக்கு வைச்சிருக்கினம்...... நானோ? என்னை அம்மா வீட்டை கூட்டிக்கொண்டு போகமாட்டாவாம்...... ஓ! எனக்குப் படிக்க நல்ல விருப்பம்'.

இந்தப் பதில்கள் பாடசாலைக்குச் செல்லுகின்ற ஒரு பிள்ளையினால் கூறப்பட்டவை. இடையில் கேட்கப்பட்ட கேள்விகளை ஊகிப்பது கஷ்டமாக இருக்காது என எண்ணுகிறேன். இங்கே குறிப்பிடப்பட்ட பதில்களைக் கூர்ந்து அவதானித்தால் அந்தப் பிள்ளை தனது நிலைமையின் தாற்பரியத்தைக்கூடப் புரிந்துகொள்ளாமல் பதிலளித்திருப்பது புரியும். அதுதான் முக்கியம்.

(தொடரும்)

வைத்திய கலாநிதி
**சா.சிவயோகன்**
(உள மருத்துவ நிபுணர்)

# வீட்டு வைத்தியம்

- காது வலிக்கு துளசி இலைச்சாறு இளசான வெங்காயச் சாறு இவற்றை லேசாகச் சூடாக்கிக் காதில் விட வேண்டும். விரைவில் வலி குணமாகும்.
- பொடுகைப் போக்க 20 வேப்பிலைகளைக் கழுவி அதனுடன் 1டீஸ்பூன் வெந்தயம் போட்டு முதல் நாள் ஊறவைக்கவும். காலையில் அரைத்துத் தலையில் தேய்க்கவும்.1 மணி நேரத்திற்குப் பிறகு தலையைத் தூய்மை செய்யவும்.
- சூரியனின் கடும் உஷ்ணத்தைத் தவிர்க்க வெளியில் செல்லும் போது வெங்காயத்தை மென்று தின்றால் வெங்காயச்சாறு பலன் தரும்.
- பச்சைப் பசலைக் கீரையைச் சாப்பிட்டால் மலச்சிக்கல் நீங்கும்.
- சிறிதளவு பிளாக் சால்ட்டை புதினா இலைகளோடு சாப்பிட்டால் வயிற்றவலி குறையும்.
- மரச்சிராம்பு தோலில் குத்தி இருந்தால் குத்திய இடத்தில் சில துளிகள் அயோடின் ஊற்றவும். குத்தியது கறுப்பாக மாற வெளியே எடுக்கலாம்.
- வாய் துர்நாற்றத்தைப் போக்க காலையில் எழுந்து பல் துலக்கியவுடன் 5டம்ளர் தண்ணீர் குடித்து வருவதுடன் இரவு தூங்கப் போவதற்கு முன்னர் சிறிதளவு கறி உப்பு சேர்ந்த நீரினால் வாயினை சுத்தம் செய்து வாருங்கள். துர்நாற்றம் போவதோடு ஜீரண உறுப்புக்களையும் சுத்தம் செய்யும்.

* * * * * * * * * * * * * * * * * * * *



- உங்களுடைய செல்லப்பிராணி டாபர் மேனை (நாய்) உண்ணிகள் துன்புறுத்துகின்றனவா? கீழே அதைப் போக்க சில பயனுள்ள குறிப்புக்கள் தரப்பட்டுள்ளன.
- புதிதாகப் பறித்த வேப்பிலைகளை விழுதாக அரைத்து நாயின் உடலில் தேய்க்கவும். இரண்டு மணி நேரம் ஊறட்டும். பிறகு வழக்கம் போல் அதைக் குளிப்பாட்டலாம்.ஒரு மாதம் தொடர்ந்தாற் போல் இம்முறையைக் கையாளலாம். கார்பெட்டிலும் மற்ற மூலைகளிலும் உண்ணிகள் வராமல் பார்த்துக் கொள்ளவும்.
- மருந்து கலந்த நாய் ஷாம்பு பவுடரைத் தூவலாம். சொர சொரப்பான பிரஷ்ஷால் உடலைத் தேய்க்கவும். இதைக் கட்டாயம் தவறாமல் செய்து வந்தால் உண்ணிகளால் எந்தப் பிரச்சினையும் இருக்காது.
- சோப்பு கலந்த தண்ணீரில் சில துளி டெட்டால் கலந்து நாயைக் குளிப்பாட்டவும்.
- தேங்காய் எண்ணெய் வேப்பெண்ணெய் சம அளவு கலந்து நாயின் உடலில் தேய்த்துப் பின்னர் சோப்பு கலந்த தண்ணீரில் குளிக்க வைக்கலாம்.
- பஞ்சில் சில துளி ஆல்கஹால் ஊற்றி உண்ணிகள் மீதும் சருமத்தின் மீதும் தடவலாம். பிறகு உண்ணிகளைப் புருவங்கள் நீக்கும் ட்வீசர் அல்லது போர்செப் கொண்டு நீக்கலாம்.
- கந்தகப் பவுடரைக் கடுகெண்ணெயில் கலந்து நாயின் சருமத்தின் மீது லேசாகத் தடவவும். சிறிது நேரத்திற்குப் பிறகு குளிப்பாட்டுவதால் நல்ல பலன் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆவது தேசிய இளைஞர் நாடக விழா 2010





## தேசிய விருது பெற்ற கண்டல் அபத்த நாடகம்



## ஆற்றுகையில் இருந்து உள்நோக்கு

தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் இளைஞர் விவகார அமைச்சும் ஒன்றிணைந்து ஒழுங்கு செய்த 2010 ஆம் ஆண்டிற்கான இளைஞர் நாடகவிழா ஐப்பசி மாதம் 05 ஆம் திகதி கொழும்பு லயன்ல் வென்ட் கலையரங்கில் நடைபெற்றது. வருடாந்தம் இளைஞர்களுக்காக நடாத்தப்படும் உயர் தேசிய நாடகவிழாவாக இது அமைகின்றது. தேசிய நாடகவிழாவில் நீண்ட காலத்தின் பின் முதல் தடவையாக எமது கண்டல் அபத்த நாடகமானது யாழ்ப்பாணத்திலிருந்து பங்கு கொண்டது. இவ்விழாவில் சிங்கள மொழி மூல நாடகங்களும் தமிழ் மொழி மூல நாடகங்களும் ஆற்றுகை செய்யப்பட்டன.

கண்டல் அபத்த ஆற்றுகையானது ஐந்து தேசிய விருதுகளைப் பெற்று முதலாம் இடத்தை பெற்றுக் கொண்டது. விருதுகளானவை தயாரிப்பு, நெறியாள்கை, வேடவுடை, ஒப்பனை, சிறந்த ஆற்றுகை என்பவற்றிக்கு கிடைக்கப் பெற்றன. அத்தோடு அபத்த நாடகம் ஒன்று தேசிய மட்டத்தில் முதல் இடம்பிடித்தது இதுவே முதல் தடவையாகும்.

இதற்கான விருது வழங்கும் நிகழ்வானது இளைஞர் அலுவல்கள் திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெருமா தலைமையில் மார்கழி மாதம் 29 ஆம் திகதி மகரம இளைஞர் நிலைய பிரதான அரங்கில் நடைபெற்றது. இந் நாடக விழாவில் பங்கு கொண்டு விருது பெற்றமையானது புதிய அனுபவத்தினையும் புதிய தரிசனத்தையும் இட்டுச் சென்றது.

### கண்டல் அபத்த நாடகம்

'மனித மனங்களுக்குள் மறைக்கப்பட்ட உணர்வினூடாக வெளிக்கிளம்புகின்ற மனித மோதுகையினை இந் நாடகம் பேச எத்தனிக்கிறது.....' என்ற நெறியாள்கைக் குறிப்பைக் கொண்டு எஸ்.ரி. குமரன், எஸ்.ரி.அருள்குமரன் ஆகியோரின் எழுத்துருவாக்கம், நெறியாள்கை மற்றும் தயாரிப்பில் உருவாக்கப்பட்டு ஆற்றுகைப் படுத்தப்பட்டுள்ளது.

கண்டல் ஆற்றுகையானது அபத்த பண்பினை முழுமைத்துவமாக கொண்டு உருவாக்கப்பட்டது. இலங்கைத் தமிழ் அரங்கிலே அபத்த நாடகங்களின் வருகை மிகக் குறைவாகவே காணப்படுகின்ற நிலையில் காலத்தின் தேவையை உணர்ந்து கண்டல் அபத்த நாடகமானது பரிணமித்தது.

அபத்த நாடக வடிவமானது மேற்குலகில் வெளிக் கிளம்பிய நாடகவடிவமாக விளங்குகின்றது. யுத்தம் மனிதனுக்கு வலியினையும் இழப்பினையும் பரிசளித்து விட்டு தான் மௌனியாகி விடுவதுடன் மக்களது மனங்களினையும் மௌனியாக்கி வாழ்வியலினைச் சூனியத்திற்குள் புதைத்து விட்டுச் செல்கின்றது என்பது கடந்த வரலாற்று உண்மை.

இவ் வலிகளின் பின்னணியில் உடைந்து போன மனிதனது வாழ்வியலினையும் மனித மனங்களில் அமிழ்ந்து போன உணர்வுகளினையும் மேற்குலக அரங்கவியலாளர்கள் பேச முனைந்தார். அதன் வெளிப்பாடகவே அபத்த நாடகம் தோன்றின. யுத்தம் மனிதனது கனவுகளையும் அவன் பேணிய கற்பனைகள் எதிர்கால சிந்தனைகள் என்பவற்றினை நிர்முலமாக்கியதுடன் அவனை நிர்க்கதியாக்கியதுடன் அவனை தனிமைப்படவும் செய்தது. வாழ்வு துயரமானதாகவும் அர்த்தமற்றதாகவும் உணர்ந்தான். இத்தகைய கதையியல்புகளினை அபத்த நாடகங்கள் 1 ஆம் 2 ஆம் உலக யுதத்தங்கள் விட்டுச் சென்ற வலியினை பாடங்களை பேச முனைந்தன.

இந் நாடகங்களானது அடிப்படையாக வாழ்வியலை அர்த்தமுள்ளதாகக் கொள்ளப்படுகின்ற விடயங்களை அர்த்த மற்றதாகக் காட்டுவதாகும். அபத்த நாடகப் பண்புகளாக காரண காரியத்தன்மைம காணப்படுவதில்லை. நாடக பாத்திரங்கள் தனிக் குணாதிசயமுடைய பாத்திரங்களாக இல்லாது வகை மாதிரி பாத்திரங்களாக காணப்படுதல் பாத்திரங்கள் ஒத்த குண இயல்பினைக் கொண்டிருக்காது வெவ்வேறு இயல்புகள் வெவ்வேறு மனவியல்புகளினைக் கொண்டிருப்பதுடன் ஒருவரே வேறு வேறு பாத்திரங்களாக மாறிச் மாறிச் செயற்படுவார். பிதற்றல் மொழிகளை சம்பந்தமற்ற மொழிகளை பயன்படுத்தல். இந்நாடகங்கள் சமூகத்தினை சுட்ட முயலுமே தவிர தனி மனிதனை சுட்ட முயலாது. காட்சிகளுக்கிடையில் தொடர்பற்ற இணைப்பைக் கொண்டிருத்தல் முன்னைய நாடங்ககளின் கட்டமைப்புக்களுக்கு முரணாக காணப்படுதல் போன்ற பண்புகளைக் கொண்டது.

இத்தகு பண்புகளை உள்வாங்கி மனித மனங்களுக்கிடையில் நிகழும் போராட்டங்களை நாடக சித்திரிப்பாகக் கொண்டு காட்சிகள் கட்டமைக்கப்பட்டு கண்டல் அபத்த நாடகமானது ஆற்றுகை வெளியில் தன்னை முகிழ்த்திக் கொண்டது.

இதற்கான ஆரம்பக்கட்ட தயாரிப்பாக ... கொண்டு ஒரு மாத கால திற்கு மேற்பட்ட தயாரிப்பு பயிற்சியூடாக முழுமைப்படுத்தப்பட்டு உடுவில் மகளிர் கல்லூரி உள்ளகை அரங்கில் ஆற்றுகப்படுத்தாப்பட்டது. கிடைத்த வரவேற்பைக் கொண்டு தேசிய நாடக விழாவினை நாடக எழுத்துருவும் ஆற்றுகையும் புதிய வகையில் மெருகூட்டப் பட்டு புதியதோர் நாடகப்படைப்பாக அரங்கேறியது.

நாடக உருவாக்கமானது அரங்கப் பயிற்சிப் பட்டறைக்கு ஊடாக நாடகத்தினுடைய கரு கலைஞர்களிடம் விதைக்கப்பட்டது. நெறியாளர் அரங்கு எனும் உத்தியினூடாக இப்படைப்பு உருவாக்கப்பட்டது. உண்மையில் இது ஓர் சவால் மிக்க அரங்க முயற்சியாகும். இதில் கலைஞர்களுக்கு சிந்தனையை வெளிப்படுத்தும் சுதந்திரம் கொடுக்கப்பட்டாலும் சுதந்திரம் எல்லை மீறாத வகையில் கட்டுப்பாட்டுக்குள் வைத்து செயல் இயக்கத்தை முழுமைப்படுத்தம் உத்தியடிப்படையில் இந் நாடகம் படைக்கப்பட்டது.

இவ் ஆற்றுகையானது சாதாரண ஆற்றுகைகளில் இருந்து வேறுபட்டு அமைகின்றது. இங்கு வசனத்தின் பயன்பாடு மிகக் குறைவு காட்சிப் பொருளுக்கேற்ப பயன்படுத்தப்பட்டுள்ளது. கூடிய பங்கு மொழியல்லாத மொழியானது தன் செல்வாக்கை செலுத்தியுள்ளது. உடல் மொழியினது வெளிப்பாட்டையே இப்படைப்பானது பெரிதும் வேண்டி நின்றதுடன் காட்சி மாற்றதிற்கும் காட்சி அசைவிற்கும் ஆடலையும் இசையையும் தனது மூலமாக பயன்படுத்தியது. இந் நாடக பண்பிற்கு ஈடு கொடுத்து நடிப்பது என்பது சவாலானது.


(தொடரும்)

எஸ்.ரி.குமரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குச்சந்தை நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வின்றி யாழ். மக்கள்



## கொழும்பு பங்குபரிவர்த்தனை சபையின் யாழ் கிளையின் முகாமையாளர் மு.திலீபனுடனான நேர்காணல்

செல்வி எஸ். நதிபரன்

"இலங்கைப் பங்குச் சந்தையானது உலகப் பங்குச்சந்தைகளின் தரப்படுத்தல்களில் முதன்மையானதாகத் திகழ்கின்றது. இதற்கு உயர்ந்த செயற்றிறனே காரணமாகும். ஆனால் யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது பங்குச் சந்தையின் சராசரி நாளாந்த புரள்வு மிகக் குறைவானதாகவே இருக்கின்றது.

"இதற்கு மக்களிடம் பங்குச் சந்தை தொடர்பான போதிய விழிப்புணர்வின்மையும் ஈடுபாடும் குறைவாக இருப்பதே காரணங்களாகும்".

இவ்வாறு தெரிவித்தார் இலங்கைப் பங்குப் பரிவர்த்தனையின் யாழ்ப்பாண கிளையின் முகாமையாளர் மு.திலீபன்.

யாழ். குடாநாட்டின் பங்குச் சந்தை நிலைவரம் பற்றி அறிந்து கொள்ளும் முகமாக அவரை நேர்கண்டபோது அரிய பல கருத்துக்களை யாழ். ஓசையுடன் பகிர்ந்து கொண்டார். அவர் கூறிய கருத்துக்களை வாசகர்களுக்காகத் தொகுத்துத் தருகிறோம்.

கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையானது பங்குச் சந்தை தொடர்பான முதலீட்டு வசதி வாய்ப்புக்களை கொழும்பை மையமாகக் கொண்ட மக்களுக்கு மட்டுமன்றி நாடு முழுவதும் விஸ்தரிக்கும் நோக்கில் அதன் கிளை நிறுவனங்களை பிரதேச வாரியாகத் திறந்து அக்கிளைகளுக்குள் ஒன்றுக்கு மேற்பட்ட பங்குதரகர் நிறுவனங்களை ஒரே கூரையின் கீழ் ஒன்றிணைத்து பல்வேறுபட்ட முதலீட்டு சேவைகளை வழங்கி வருகிறது. அதன் ஒரு கட்டமாக யாழ். குடா நாட்டு மக்களின் முதலீடுகளைப் பெருக்கும் பொருட்டு கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் திறந்து வைக்கப்பட்டது. இதுவரை 750 புதிய மத்திய வைப்புத்திட்ட கணக்குகள் திறக்கப்பட்டுள்ளன. எமது கிளையைப் பொறுத்தவரையில் சராசரி நாளாந்த புரள்வாக 3 மில்லியன் ரூபா காணப்படுகிறது. இது நாட்டிலுள்ள ஏனைய மாவட்டக் கிளைகளுடன் ஒப்பிடுகையில் குறைவானதாகும். காரணம் தற்போது தான் குடாநாட்டு மக்களிடையே பங்குச் சந்தை வர்த்தகம் தொடர்பான எண்ணக் கரு முளைவிட்டு வருகிறது. அதேநேரம் மக்கள் பங்குச் சந்தையில் முதலிடத் தயங்குகின்றனர்.

பங்குச்சந்தை தொடர்பான போதிய விழிப்புணர்வின்மையே இதற்குக் காரணமாகும். எமது கிளையைத் திறந்து ஒரு வருடம் கூடப் பூர்த்தியாகவில்லை. தற்போது கருத்தரங்குகள் வாயிலாக மக்களுக்கு விழிப்புணர்வூட்டல் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறோம். யாழ்ப்பாணத்திலுள்ள பல பிரதேசங்களில் பல விழிப்பூட்டல் செயன்முறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்கு கொழும்பு பங்குச் சந்தையில் கடமையாற்றும் பங்குச் சந்தை வர்த்தகம் தொடர்பாக துறை போன நிபுணர்களைக் கொண்டு விழிப்பூட்டல் நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தி நடத்தி வருகிறோம்.

இங்கு பொது மக்களுக்கு அடிப்படையில் ஏற்படும் சந்தேகங்களுக்கு எமது வளவாளர்களினால் விளக்கங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன. எமது நிறுவனத்தில் கூட எதுவித தயக்கமும் இன்றி மூலதனச் சந்தை தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் நாளாந்த வணிகம், உள்நாட்டு வெளிநாட்டு பொருளாதாரத்துடன் தொடர்புடைய நடப்புத் தகவல்களை எம்மிடமிருந்து பெற்றுக் கொள்ளமுடியும். இந்த வகையில் கொழும்பு பங்குச் சந்தையில் யாழ். கிளையூடாக யாழ். குடா நாட்டு மக்களுக்கு மூலதனச் சந்தை முதலீடுகள் தொடர்பான விழிப்புணர்வினை தொடர்ச்சியாக ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனால் சேமிப்பு மற்றும் முதலீடு என்பவற்றுக்கிடையிலான அடிப்படைத் தன்மை வெளிப்படும். இதனால் பங்குச் சந்தையில் [illegible] கொள்வதன் ஊடாக சுயதொழில் முயற்சிக்கான வாய்ப்புக்களையும் பெற்றுக் கொள்ள முடியும்.

நாம் வங்கிகளுடன் நெருங்கிய உறவைக் கொண்டிருக்கிறோம். உண்மையில் நாம் வங்கிகளை எமது சேமிப்புக்களின் பாதுகாப்பகமாகவே பயன்படுத்துகின்றோம். நம்பிக்கையுடனான பணப் பரிமாற்றத்திற்கு வங்கிகள் வழி வகுக்கின்றன. இருந்தும் வங்கிச் சேமிப்புக் கணக்குகளில் பேணப்படும் பணமானது ஒரு முதலீட்டுச் செயன்முறைமை அல்ல. உண்மையில் முதலீடு என்பது பணத்தினை வருமானம் உழைக்கக் கூடிய வழிகளில் ஈடுபடுத்தி அதன் மூலம் காத்திரமான வருவாய்களைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கையே முதலீடு எனப்படும்.

முயற்சி மற்றும் ஆபத்து இன்றிய முதலீட்டு முயற்சி இந்த உலகில் எங்கும் இருப்பதில்லை என்ற யதார்த்தத்தை உணர வேண்டும். இருந்தும் வட்டி வருமானத்தினை எதிர்பார்த்து நாம் பணத்தை வங்கிச் சேமிப்புகளில் வைப்பிலிடுகிறோம். ஆனால், வட்டியானது ஒரு வருமானம் அன்று. அதேபோல அங்கு முதலீடுகள் பெருகுவதற்கான வாய்ப்புக்களும் இல்லை. பண வீக்கத்தால் பணப் பெறுமதியில் ஏற்படுகின்ற பெறுமதி இழப்பையே நாம் வட்டி என்ற பெயரில் பெறுகிறோம்.

எனவே இது ஒரு முதலீட்டு முயற்சியல்ல என்பதையும் பணத்தைப் பாதுகாப்பதற்கான வழி வகைகள் ஒன்றே என்பதையும் புரிந்துகொள்ளவேண்டும். கடந்த வருடம் நாட்டின் பணவீக்கம் அண்ணளவாக 7 சதவீதமாகக் காணப்பட்டது.

பொதுவாக இலங்கையின் பண வீக்கம் 2009 ஆண்டைக் காட்டிலும் ஒப்பீட்டளவில் குறைவாக அமைந்துள்ள போதும் வங்கிகளின் வட்டி வீதமானது மிக குறைவாகவே அமைந்துள்ளது. பண வீக்கமானது வங்கிகளின் வட்டி வீதத்தினை விட உயர்வாக அமையுமிடத்து பணத்தின் மெய்ப் பெறுமதியானது தொடர்ச்சியாகக் குறைந்து செல்லும்.

இந்த நிலையில் முறைமைப்படுத்தப்படாத முதலீட்டுச் செயன்முறைகள் யாழ்ப்பாண மக்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

அதாவது சீட்டுப் பிடித்து தமது வருமானத்தைப் பெருக்கும் நிகழ்வுகள் தற்போதைய சூழலில் அதிகரித்து வருகின்றன. இது நீண்டகாலத்திற்கு ஆரோக்கியமான முயற்சியாக அமைவதில்லை. இவை சட்ட அங்கீகாரமற்ற முயற்சியாக அமைவதுடன் எதிர்காலம் பற்றிய நிச்சயமற்ற தன்மையையும் கொண்டுள்ளது.

எந்த ஒரு முதலீட்டு முயற்சிக்கும் உயர் ஆபத்து மற்றும் உயர் வருமானம் உண்டு. இது பங்குச் சந்தை முதலீடுகளுக்கும் நன்கு பொருந்தும்.

எனவேதான் பங்குச் சந்தை தொடர்பில் மக்கள் முதலிடும் போது முதலீட்டு மூலங்கள் தொடர்பாக பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

1. முதலீட்டுக்கான போதிய வருமானம்
2. முதலீட்டுக்கான பாதுகாப்பு
3. முதலீடானது காலத்துடன் இணைந்த வகையில் பெருக்கமடையக் கூடியதாக இருக்க வேண்டும்.
4. முதலீடானது காலதாமதமின்றி விரைவாக பணமாக மாற்றக்கூடியதாக இருத்தல்.
5. வசதித்தன்மை
6. வரிச்சுமை போன்றவை பற்றி கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

எமது பிரதேசங்களைப் பொறுத்தவரையில் உழைப்பானது பொதுவாக கல்வி, விவசாய உற்பத்திகள், தனியுடைமை முயற்சிகள் மற்றும் சுயதொழில் முயற்சிகள் போன்றவற்றால் மக்கள் முதலீடுகளை மேற்கொள்கிறார்கள்.

மேற்குறித்த முதலீட்டு முயற்சிகளுக்கு பல வகையான காரணங்கள் இருந்தாலும் வருமான மட்டத்தை உயர்த்தி வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தலே பிரதானமாகும். இந்த வகையில் தனியார் முயற்சிகள் மூலம் உழைக்கப்பட்ட வருமானத்தின் ஒரு பகுதியை ஒப்பீட்டளவில் சிறந்த வருமானத்தை ஈட்டித்தரக்கூடிய மூலங்களில் முதலீடு செய்யும்போது உச்ச பயனைப் பெறமுடியும்.

பாரம்பரிய வங்கிச் சேமிப்பு முறைகளுடன் ஒப்பிடுகையில் பணத்தை பங்குச் சந்தை முதலீடுகளில் அதாவது பட்டியல்படுத்தப்பட்ட கம்பனிகளின் பங்குகள் தொகுதிக் கடன்கள், நம்பிக்கை அலகுகளில் முதலீடு செய்வதனூடாக பணத்திற்கான உச்ச வருமானத்தை ஈட்ட முடியும்.

எமது கிளையில் 6 பட்டியல் படுத்தப்பட்ட கம்பனிகள் தரகர்களாக இருக்கின்றன.

1. பார்ட்லீட் மலோரி பங்குத் தரகர் நிறுவனம்.
2. ஆஷா பிலிப் செக்குரிட்டிஸ் பங்கு தரகர் நிறுவனம்
3. கப்பிற்றல் ரஸ்ட் பங்குத் தரகர் நிறுவனம்
4. லங்கா செக்குரிட்டிஸ் பங்குத் தரகர் நிறுவனம்
5. எஸ்.எம்.பி. பங்குத் தரகர் நிறுவனம்
6. எஸ்.கே. எம். லங்கா கோல்டிங் பங்குத் தரகர் நிறுவனம்

போன்ற நிறுவனங்கள் தரகு நிறுவனங்களாகச் செயற்பட்டு வருகின்றன. இவற்றினூடாக நீங்கள் பயன்களைப் பெறமுடியும். மேலதிக விபரங்களை இல.398/1 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள எமது கிளையுடன் தொடர்பு கொண்டால் விளக்கமாகப் பெறமுடியும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய இன்பம்

**யாழ்**ப்பாணம் எனும் பெயர் வரக் காரணமானவர் யாழ் வாசிக்கும் பாணராகிய அந்தகக் கவி வீரராகவமுதலியார் என்ற புலவர். இவரைப்பற்றிய விபரங்கள் பலருக்குத் தெரியாமலிருக்கலாம். யாழ்ப்பாணம் எனும் பெயருக்கு நிலைக்களனாக விளங்கிய புலவர் பற்றிச் சற்று நோக்குவோம்.

அந்தகக் கவிவீரராகவ முதலியார் என்பவர் ஒரு சிறந்த புலவர். அவர் பிறவியிலேயே கண் பார்வையிழந்தவர். ஆனால் அறிவுக் கண் உடையவர். அழகிய கருத்தாழம் பொருந்திய பாடல்களை விரைந்து பாடக்கூடியவர்.

ஒரு நாள் அவருடைய மனைவி அவரை அவமதித்துப் பேசினாள். இதனால் மனம் வெதும்பிய அப்புலவர் மனைவியுடன் கோபித்துக் கொண்டு வீட்டை விட்டுப்புறப்பட்டார். வழியில் ஒரு குளக்கரையில் தன்னுடன் கொண்டு வந்த உணவுப் பொதியை வைத்து விட்டு நீராடச் சென்றார். நீராடி விட்டு திரும்பிவந்து பார்க்கையில் உணவுப் பொட்டலத்தை நாய் தின்று கொண்டிருந்தது. புலவருக்கோ கடும்பசி. நாயுடன் கோபித்து எவ்வித பலனும் இல்லை என்றுணர்ந்த புலவர் உடனே தனது ஆயுதமான பாட லால் அந்த நாயை நிந்திக்கிறார். கட்டளைக் கலித்துறையில் அமைந்த அந்தப் பாடல்,

*'சீராடையற்ற வயிரவன்*
*வாகனஞ் சேரவந்து*
*பாராளும் நான்முகன்*
*வாகனந் தன்னை முன் பற்றிக்*
*கவ்வி*
*நாராயணனுயர்*
*வாகனமாயிற்று நம்மை முகம்*
*பாரான்மை வாகனன் வந்தே*
*வயிற்றில் பற்றினனே'*

இதன் கருத்து யாதெனில் ஆடையில்லாத வையிரவருடைய சிறந்த வாகனமாகிய அன்னத்தைப் பற்றிக் கொண்ட நாராயணனுடைய வாகனமாகிய கருடனைப்போல் பறந்துவிட்டது. ஆட்டு வாகனத்தை உடைய அக்கினி தேவன் வந்து இப்போது என் வயிற்றைப் பற்றிக் கொண்டான். என்று விளக்குகிறார்.

பின்னர் புலவர் பசியுடன் கடல் கடந்து இலங்கை ஏகினார். அப்போது இலங்கையின் வடபால் பரராஜசிங்கன் என்ற மன்னன் ஆட்சி செய்து கொண்டிருந்தான். நேராக அம்மன்னவனை வேண்டிப் பாடி பொன் பொருளைப் பெறுவதற்குப் புலவர் எண்ணினார். அரசனது அரண்மனைக்குச் சென்றதும், அரசனது அரண்மனைக் காவலர்கள் உள்ளே சென்று மன்னனைச் சந்திப்பதற்கு அனுமதிக்கவில்லை.

இதனால் மனமுடைந்த புலவர் தான் மன்னனைச் சந்திக்காமல் இங்கிருந்து அகலப் போவதில்லை என்று சபதமெடுத்து அரண்மனை வாயிலிலே இருந்துவிட்டார். இச் செய்தி அரசனுக்கு எட்டவே புலவரை உள்ளே அனுமதிக்குமாறு அரசன் கட்டளையிட்டான். குருடனை அரசன் பார்ப்பது அவனது ஆட்சிக்கு இழுக்கு எனக் கருதிய அமைச்சர்கள் அரசனிடம் விடயத்தைக் கூறியதுடன் அரசன் குருடனான புலவரை நேரே பாராத வண்ணம் ஒரு திரையிட்டு மறைத்து விட்டனர். திரைக்கு அப்பால் மன்னன் இருந்தான். கண்ணில்லாத புலவன் திரையிட்டதை அறிந்திருக்க வாய்ப்பில்லை. என்றாலும் அங்கு நடக்கும் சம்பவங்களை வைத்துக் குறிப்பால் அறிந்த புலவர் அண்ணாமலையானே! என்றுகூறி இறைவனைத் தியானித்தார். உடனே திரை தீப்பிடித்து எரிந்தது. திருவண்ணாமலை நெருப்புத்தலம் இதனால் திருவண்ணாமலையில் எழுந்தருளியிருக்கும் இறைவனை நோக்கித் தியானித்தார். திரை தீப்பிடித்து எரிவதைப் பார்த்து அதிர்ச்சியடைந்த அரசன் இவர் ஒரு பெரிய அறிஞர் போலும் எனக் கருதி புலவரை மன்னிக்குமாறு வேண்டினான். அதற்கு அப்புலவர் மன்னா! நான் அறிவைக் கண்ணாகப் படைத்தவன். இந்த ஊனக் கண்கள் இரண்டும் இல்லை என்று கருதி உன்னை, நான் காணக் கூடாது என்று திரையிட்டு மறைத்தாய். இது நியாயமா என்றார்.

உடனே அரசன், புலவரே! தாங்கள் அறிவைக் கண்ணாக உடையவர் என்பது உண்மையானால் நான் எந்த நிலையில் இப்போது இருக்கிறேன் என்பதை விளக்கமாகக் கூறுவீரா என்றான்.

அறிவைக் கண்ணாகக் கொண்ட புலவர் மன்னனின் சிறப்பை தனது பாடலின் மூலம் உணர்த்துகிறார்.

*'வாழும் இலங்கைக்*
*கோமானில்லை; மானில்லை*
*ஏழு மராமரங்கள் இங்கில்லை*
*- ஆழி*
*அலையடைத்த செங்கை*
*அபிராமா - இன்று*
*சிலையெடுத்த வாறெமக்குச்*
*செப்பு'*


இப்பாடலின் பொருளைப் பற்றிப் பார்த்தால், கடலின் அலைகளே அணையிட்டு அடைத்த சிவந்த கரங்களையுடைய அபிராமனே! இலங்கையில் முன்னர் வாழ்ந்து அரசாண்ட இராவணன் இல்லை. மாரீசனாகிய மானும் இல்லை. ஏழு மரங்களும் தற்போது இங்கு இல்லை. கலை நிறைந்த என் முன்னே சிலையெடுத்து நிற்கின்றாய். (இங்கு சிலை என்பது வில்லைக் குறித்து நிற்கிறது) என்ன காரணம்? என்ற பொருளில் அழகிய வெண்பாவில் அரசனின் திருக்கோலத்தை அப்படியே வர்ணித்துப் பாடினார்.

புலவரின் அரிய செந்தமிழ்ப் பாடலைக் கேட்ட அரசனின் மனம் மட்டற்ற மகிழ்சியில் திளைத்தது. புலவரைக் கட்டித் தழுவி ஆதரவு செய்து சில தினங்கள் தன்னுடன் தங்கியிருக்குமாறு கூறி அவருக்கு வேண்டிய பொன் பொருள் என்பவற்றைக் கொடுத்து உபசரித்ததுடன் மட்டும் அவனது கடமை முடிந்து விடவில்லை. யாழ் வாசிக்கும் பாணராகிய அப்புலவரின் பெயரால் அரசன் அரசாண்ட பகுதிக்கு யாழ்ப்பாணம் என்ற பெயரை சூட்டினான். அந்தப்பகுதியே தற்போது நாம் வாழ்ந்து வருகின்ற யாழ்ப்பாணம் என்னும் இடமாகும்.

அறிவில் செழுமை பெற்று விளங்கிய புலவர்களுக்கு அக்கால மன்னர்கள் தமது ஆதரவை வழங்கியதுடன் அவர்களைக் கௌரவித்து பொன் பொருட்களை வழங்கி உதவினர் என்பதற்கு இப்படியான பல சான்றுகளைக் குறிப்பிடலாம். இருநாடுகளுக்கு இடையில் நடக்கும் சண்டைகளைக் கூட புலவர்கள் தடுத்து நிறுத்தி அழிவுகளைத்தடுத்தி நிறுத்தியிருக்கின்றார்கள் என்றால் அக்காலத்தில் புலவர்களுக்கிருந்த மதிப்பினாலன்றோ! அந்தளவிற்குப் புலவர்களின் பெருமை அக்காலத்தில் பிரகாசித்திருந்தது.

**எஸ். நதிபரன் B.A. (Hons)**

# ஊர்ப் புதினம்



இயற்கை பூமிப்பந்தில் வாழும் மனிதர்கள் நலமாக வாழ எத்தனையோ வளங்களை அளித்துள்ளது.

அதைத் தேடிக் கண்டுபிடித்துப் பயன்படுத்திப் பயன் பெறுவது எம் பொறுப்பு. இன்றைய அவசர யுகத்தில் தலை வேர்த்து, குளிரூட்டிய அறைகளில் இருந்து சளித்தொல்லையால் அவதிப்படும் பலர் எம்மில் உள்ளனர். சளி முற்றி மூச்சடைத்து இறந்து போனவர்களும் உண்டு. பாட்டி வைத்தியம் ஒன்றால் கண்ட நல்ல பயனை வாசகர்கள் முன் இவ்வாரம் வைக்கின்றேன்.

மொச மொசுக்கை இலை 10, தூதுவளை இலை 10, 2 சிறிய தேக்கரண்டி அளவு மல்லி அதேயளவு நற்சீரகம் எடுத்து 1 டம்ளரில் போட வேண்டும். நன்றாகக் கொதித்த நிலையில் உள்ள வெந்நீரை [illegible] ஊற்றி விட்டு இன்னுமொரு டம்ளரால் மூட வேண்டும். 20 நிமிடங்களின் பின்பு இவற்றை தேயிலை வடியால் வடித்து சிறிதளவு சீனி சேர்த்த பின்பு பருக வேண்டும். சற்று சூடான நிலையில் தேநீரை விடச் சுவையானதாக இப்பானம் இருந்தது. தொடர்ச்சியாக 10 தினங்கள் பருகிப் பார்த்தேன். என்னை வருத்திய சளி பெருமளவு காணாமல் போய் தலைப்பாரம் இறங்கி சுகம் ஏற்பட்டது.

மொசு மொசுக்கை, தூதுவளை என்பன எமது கிராமியச் சூழலில் நகரச் சூழலில் இன்றும் மிகத் தாராளமாகக் கிடைக்கின்றன. அரியாலை செம்மணி வீதியில் பனை வடலிகளை சுற்றி தாரளமாக வளர்ந்துள்ளன. இலையில் சிறிதளவு சொர சொரப்பு காணப்படும். நாம் வாழும் சூழல் எமது உடல் நலத்திற்கு ஏற்ற வகையில் உருவாகியுள்ளது. அராபியர்கள் சாப்பிடும் பேரீச்சம்பழம் என்றால் என்ன? எஸ்கிமோக்கள் உண்ணும் மீன் என்றால் என்ன? ஆபிரிக்காவில் அரிய மூலிகை வகைகள், விலங்கினங்கள் என்றால் என்ன? எமது நல்வாழ்விற்காக இயற்கை தந்தவை தான் அவை.

இயற்கையை நீ அழித்தால் இயற்கையால் நீ அழிவாயென சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் இடித்துரைக்கின்றனர்.

எதற்கெடுத்தாலும் மேலை நாட்டு மருந்தையே தேடி ஓடுகின்றோம். எமது உடலில் ஏற்படும் சிறிய சிறிய நோய்களுக்கு எமது மூத்தோரிடமிருந்து பாடங்களைக் கற்றுக் கொள்வதில் நாட்டம் குறைந்து விட்டது.

நாம் இன்னமும் மெகா சிற்றி (மெகா நகரம்) சூழலிற்குள் சிறைப்படவில்லை. எமது பிரதேசச் சூழலில் வளரும் மருத்துவக் குணம் மிக்க தாவரங்களைப் பேணுவதிலும் கவனம் செலுத்த வேண்டும். மூத்தோரிடம் இவற்றைக் கற்று எமது அடுத்த சந்ததிக்கும் அவற்றைக் கொடுக்க முன்வர வேண்டும்.

மனித உடலிற்கு பக்க விளைவுகள் எவற்றையும் தராத இயற்கை உணவு வகைகளில் எமது கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

இயற்கையுடன் இணைந்து வாழக் கற்றுக் கொள்ளுவது குறித்த கவனத்தை செலுத்த மூத்தோர் அறிவுரைகளைப் பெற்றுக் கொள்வோம்.

**- சிவகாமி -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# நிஜமான காதல்



மேகக்கூட்டம் எல்லாவற்றையும் பக்கம் மாறிச் செல்ல விட்டதை பறைசாற்றுவதற்காக காற்று வீசுகின்ற இனிமையான நேரம், இருள் தொடங்கிவிட்டதைக் கண்டுகூடு செல்லும் பறவையினங்கள் ஒருபுறம், ஆதவன் கூட தனது கடமை முடிந்து விட்டது என்று எண்ணியோ தெரியவில்லை தனது இருப்பிடத்தை நோக்கி குனிந்து செல்கின்ற நேரம் அந்த மாலைப் பொழுது.

அன்று ஏனோ அந்த தருணத்தில் இவர்கள் மட்டும் அதாவது திவாஸ் கூட்டம் மட்டும் யாரையோ எதிர்பார்த்தவாறு தனது சக நண்பர்களுடன் காத்திருக்கின்றார்கள். அந்த கறுப்பழகி (சோனா) தனக்கே உரித்தான அந்த அழகிய நடையுடன் மாலை வகுப்பினை முடித்துக்கொண்டு நடந்து வந்துகொண்டிருந்தாள். அவளைப் பார்த்த ஷாம் ''டேய் மச்சான் திவா உன்ர கறுப்பழகி வாறாளடா'' என்று கூறிய அவ்வேளை ' உனக்கு எத்தனை தடவை சொல்லுறது அவள் எனக்கு மச்சாள் என்றாலும் நான் அவளை கல்யாணம் செய்ய மாட்டேன். இனிமேல் இப்படிச் சொன்னால் உன்னை உதைப்பேன்' என்று திவாஸ் கூறி முடிக்கும் போது சோனா அவர்களைக் கடந்து சென்றாள். அப்போது அவர்களில் ஒருத்தன் 'கறுப்புத்தான் எனக்கு பிடிச் கலரு ' என்ற பாடலை முணுமுணுத்தபடி நண்பர்களுடன் சேர்ந்து தானும் சேர்ந்து சோனாவிற்கு கேட்கும் அளவிற்கு பெரிதாக சிரித்தார்கள்.

அவர்கள் பாடிய பாடலைக் கேட்ட சோனாவுக்கு கோபத்தோடு அழுகையும் வந்தது. வீட்டிற்குச் சென்றவள் தனது தங்கை சனாவையும் கூட்டிக் கொண்டு நேராக திவாஸ் வீட்டுக்குச் சென்றவள் தனது மாமா கந்தசாமிக்கு திவாவும் அவனது நண்பர்களும் இணைந்து விட்ட கேலிகளை உரைத்துக்கொண்டிருந்தாள். அவளது அழுகையைப் பார்த்த கந்தசாமிக்கோ கோபம் ஏறியது.

அந்நேரத்தில் தங்களது கூட்டத்தினை கலைத்துவிட்டு திவாவும் வீடு வந்து கொண்டிருந்தான். அவன் மீது விசாரணையை மேற்கொண்டார்.

இதனை மறுத்த திவாஸ் 'நான் ஒன்றும் சொல்லவில்லையப்பா அவங்கள்தான்' என்று இழுக்கும் போது, அதற்குள் அவசரப்பட்டு இல்லை மாமா நான் பார்த்தனான் இவரும் சேர்ந்து தான் என்னைக் கேலி பண்ணி சிரித்தவர் என்று கூறி மேலும் கந்தசாமிக்கு கோபத்தை ஊட்டினாள். தனக்கும் கந்தசாமிக்கும் முன்னால் தலைகுனிந்து நின்ற திவாவைப் பார்த்த சோனாவிற்கு சிரிப்பாகவே வந்தது. தனக்கு இது போதும் என்று எண்ணிக்கொண்டு கிளம்புகையில் அவளது அத்தை மங்களம் கூப்பிட்டதையும் காதில் வாங்கிக் கொள்ளாது வீடு வந்து சேர்ந்து விட்டாள். இவ்வாறாக இவர்களுக்கிடையில் சண்டை அதிகரிப்பதும் விசாரணை மேற்கொள்ளுவதுமாக கந்தசாமியின் பொழுது போய்விடும். சில நேரங்களில் கந்தசாமி களைத்தும் விடுவார்.

இவர்களின் சண்டையை நிறுத்துவதற்காகவும் திவாவை பொறுப்புள்ளவனாக்குவதற்கும் வெளிநாடு ஒன்றுக்கு அனுப்பி வைத்தார்.

இப்படியாக இவர்களது வாழ்க்கை சந்தோசமாக போய்க்கொண்டிருக்கையில் தனியாக விவசாயத்தினை கவனித்த கந்தசாமிக்கு மகனின் பிரிவு, கடின உழைப்பின் பயன் எல்லாம் ஒன்று சேர்ந்து மூன்றாவது தடவையாகவும் நெஞ்சுவலி வந்துவிடவே உலகுக்கு விடை கொடுத்தார்.

மகனின் பிரிவு, கணவனின் இழப்பு எல்லாம் இணைந்து மங்களம் அழைக்காமலே நோய் வந்து சேர்ந்து விட்டது. இவளுக்கு உதவியாக தனது படிப்புடனும் சோனா தான் உதவி செய்து வந்தாள். இவ்வேளையில் அவளது முயற்சியின் பலனாகவும் தனது தந்தையின் முயற்சியும் கைகூட ஒரு அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றில் வேலை கிடைத்துவிட்டது.

வழமையாக அந்த நாளும் வேலை முடித்து வீடு வந்தவளுக்கு அன்று மட்டும் தனது வீடு வித்தியாசமாக இருப்பதையும் வீட்டில் பரிசுப் பொருட்கள் குவிந்திருப்பதையும் பார்த்து யோசித்தவாறு தனது அறையை நோக்கி நடந்து சென்றவளை பின்தொடர்ந்த சனா அக்கா, இன்றைக்கு என்ன விஷேசம் தெரயுமா? திவா அத்தான் வந்து விட்டார் என்று கூறிச் சென்றாள். ஆனால் தனது மனமும் கால்களும் ஆகாயத்தைநோக்கிப் பறப்பதை உணர்ந்தாள். அவனைப் பார்க வேணும் என்ற ஆவலுடன் அத்தை கால்வலி என்று சொல்லி வரச்சொன்னவ என்று கூறிவிட்டு அவனைப் பார்க்கும் சந்தோசத்துடன் தன்னை அலங்கரித்துக் கொண்டு மங்களா வீட்டை நோக்கி நடந்தாள்.

அங்கு மங்களா சோனாவின் வரவை எதிர்பார்த்த படி வீட்டு வாசலில் முனகியவாறு காத்திருந்தாள். இவளைக் கண்ட சந்தோசத்துடன் 'பிள்ளைக்கு இரவுச் சாப்பாடு செய்ய வேண்டும் என்னாலையோ எழுந்து நடக்கக் கூட முடியவில்லை. பிள்ளை வந்த நேரம் பார்த்து எனக்கும் ஏலாமல் இருக்கு' என்று மங்களா சொன்ன எதுவும் சோனா காதில் ஏறவில்லை. திவாவைப் பார்க்கும் ஆவலுடன் வீட்டினை நோட்டம் விட்டாவாறு சமையலறை நோக்கிச் சென்றாள். தற்செயலாக திவாவின் அறையை நோக்கும் போது அங்கு திவா புறமுதுகு காட்டி படுத்திருந்தான். அவனது முகத்தை பார்க்காத ஏமாற்றத்தோடு வேலைகள் எல்லாவற்றையும் முடித்துக் கொண்டும் அவனது அறையை நோக்கியவள் அப்போதும் அவன் எழும்பாததைப் பார்த்து மனதில் கோபம் கொண்டவளாய் அத்தை உங்களுக்கு ஏலாது எண்டால் சொல்லுங்க நாளைக்கு நான் லீவு எடுத்து வந்து உங்களுக் உதவி செய்கிறேன் என்று கூறியவாறு வீடு வந்து சேர்ந்தவளுக்கு அன்று இரவு முழுவதும் அவனைச் சுற்றியே அவளின் நினைவுகள் சுழன்று சுழன்று சென்றமையினால் இரவு தூங்குவதற்கு நேரம் கூடிவிட்டது.

காலை வெயிலின் வெப்பத்துடனும் சோடிக் கிளிகளின் கொஞ்சல்களின் வரவேற்புடனும் எழுந்த சோனா தனது காலைக் கடமைகளை முடித்துக் கொண்டு திவா வீட்டுக்கு சென்றாள். அப்போதுதான் திவா தூக்கம் கலைந்து எழும்பி வருவதை அவனைப் பார்த்த மாத்திரத்திலே அறிந்து கொண்ட சோனா, திவா இனித்தான் குளிக்கப்போகிறான் என்பதை பறைசாற்றியது. அவனைக் கண்ட சந்தோசத்துடன் அவனை முதன்முதலாக பார்ப்பது போல ஆவலுடன் பார்த்தாள். ஆனால் அவனோ தன்னைப் பார்க்காது போனதை எண்ணி மனம் தவிடு பொடியாகிவிட்டது.

சோனா மனதுக்குள் வெம்பியவாறு தனது வேலைகளைக் கவனிக்கச் சென்றவளை சமையல் அறையில் காய் கறிகளை வெட்டிக் கொண்டு நின்ற மங்களம் இவளைப் பார்த்து ''வா பிள்ளை நீ வரமாட்டாயோ என்று நினைத்தேன். நான் இதுகளை இருந்து கொண்டு செய்கிறேன். நீ மற்றதுகளைப் பார்'' என்று கூறியவாறு உந்த வாளிக்குள் தண்ணீ எடுத்துக் கொண்டு தா பிள்ளை. இதுகளை கழுவித் தாறேன்''.

வாளியை எடுத்துக்கொண்டு நேராக கிணற்றடிக்குச் சென்றவள் அப்படியே திரும்பி வந்து அத்தை ''அங்கை திவா குளித்துக்கொண்டு நிற்கிறார்'' என்று கூறிய சோனாவிற்கு உனக்கு அவனை முதலே தெரியாதா? போய் அள்ளிக் கொண்டு வா பிள்ளை என்ற மங்களத்தின் பணிப்பின் பேரில் வாளியை எடுத்துக் கொண்டு கிணற்றடிக்கு சென்றாள். சோனா வருவதைப் பார்த்த திவா வாளியை வைத்துவிட்டு மறுபக்கம் திரும்பி நின்றான். வாளிக்குள் தண்ணியை நிரப்பிக்கொண்டு 'தங்களுக்கு உதவி செய்ய வந்தவளுடன் ஒரு வார்த்தை கூட பேசவில்லை என்ன திமிர்' என்று மனதிற்குள் முணுமுணுத்தவாறு தண்ணி வாளியை தூக்க முடியாமல் ஒருவாறு தூக்கிக் கொண்டு நடந்தவள் தண்ணி போவதற்காக வெட்டி விட்ட பாத்தி மேல் தடக்கி விழுந்து விட்டாள்.

இதனை சற்றும் எதிர்பாராத சோனா தனக்கு உதவி செய்ய வருவான் என்று பார்த்தாள். ஆனால் அவனோ ஒன்றும் நடவாதது போல் நின்றான். திரும்பவும் வாளி எடுத்துக் கொண்டு தண்ணி அள்ளச் சென்றவளை மறித்து ''மறுமடியும் விழப்போகிறாயா நீ போ நான் கொண்டு வாறேன்'' என்று முதன் முலாக அவனின் வாய்க்குள் இருந்து முத்துக்கள் கொட்டியதை எதிர்பாராத சோனா அவனையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

மங்களத்தின் குரல் கேட்டு சுயநினைவிற்கு வந்தவள் அவன் தன்னுடன் பேசி விட்டதை நினைத்து குதூகலத்துடன் மளமள வென்று வேலைகளை முடித்துக் கொண்டு வீடு செல்ல ஆயத்தமானவள் அவனின் அறையை எட்டிப்பார்த்தாறு அவனுக்கு கேட்கும் விதத்தில் சத்தமாக போட்டு வாறேன் எனக் கூறியவாறு வீட்டை போவதற்கு அவர்களின் வீட்டுப் படலையில் திவாஸ் நிற்பதைக் கண்ட சோனா திகைத்தவாறு படலையினை கடக்க முற்பட்ட போது சோனாவின் கைகள் திவாவின் கைக்குள் சிறைப்பட்டுக் கொண்டது. இதனை சற்றும் எதிர்பாராத சோனா திகைத்து நிற்கையில் அவள் இழுத்த வேகத்தில் திவாவின் மார்பில் சாய்ந்து விட்டாள். தனது மார்பில் சாய்ந்தவளை நோக்கி 'என் கறுப்பழகியே நான் உனக்கு என்ன பரிசு கொண்டு வந்தேன் தெரியுமா? என்று கேட்டுக் கொண்டு சோனாவின் நெற்றியில் முத்திமிட்டான். இதனை சற்றும் எதிர்பாராத சோனாவிற்கு தன் மீது நட்சத்திரப்பூக்களை தூதுவதைப் போல் எல்லையற்ற சந்தோசத்துடன் அவனது மார்பில் தனது முகத்தை புதைத்துக் கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட் செய்திகள்

## உதைபந்தாட்ட லீக் போட்டியில் வெற்றி பெற்ற பருத்தித்துறை அணிக்கு நெல்லியடியில் அமோக வரவேற்பு

### சிறந்த வீரர் பிறேம்குமாருக்கு 'கோல்நாயகன்' பட்டம்

வடமராட்சி,

அகில இலங்கை ரீதியில் கொழும்பில் நடத்தப்பட்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்த பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணியினருக்கு நெல்லியடியில் பெரு வரவேற்பு அளிக்கப்பட்டது.

தேசிய மட்டத்தில் அகில இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்திய உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 43 உதைப்பந்தாட்ட லீக் அணிகள் கலந்துகொண்டன. இதன் இறுதிப் போட்டியில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி, சிவில் பாதுகாப்புப் படை அணியுடன் மோதி 3:1 கோல் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுச் சாதனை படைத்தது.

சாதனை படைத்த பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணியினர் கொழும்பிலிருந்து வந்த போது கொட்டும் மழைக்கு மத்தியில் நெல்லியடிச் சந்தியிலிருந்து வதிரி-தேவரையாளி இந்துக் கல்லூரி வரை பட்டாசுகள் வெடிக்க, மேளதாள வாத்தியங்களுடன் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். கல்லூரியில் அணிவீரர்களுக்கு பாராட்டு விழா நடத்தப்பட்டது.

விழா டாக்டர் எஸ். கமலநாதன் தலைமையில் நடைபெற்றது. நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திஸ்ஸ கங்காரு, வைத்தியக் கலாநிதி கே. மயிலேறும் பெருமாள், ஈ.பி.டி.பி.யின் வடமராட்சிப் பிரதேச அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் மற்றும் கல்வித்திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட பெருந்திரளானோர் இதில் கலந்துகொண்டனர்.

விழாவில் பருத்தித்துறை உதைப்பந்தாட்ட லீக் அணியின் வீரர் பிறேம்குமார் (பீமா) இச்சுற்றுப் போட்டித் தொடரில் 7 போட்டிகளில் 16 கோல்களைப் போட்டமைக்காக 'கோல் நாயகன்' என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

## யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் வலைப்பந்தாட்டப் போட்டிகள்

அச்சுவேலி,

வெளிமாவட்ட அணிகள் கலந்து கொள்ளும் வலைப்பந்தாட்டப் போட்டிகள் நாளையும் நாளை மறுதினமும் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.

போட்டியில் பொழும்பிலிருந்து இரண்டு அணிகளும் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் இருந்து தலா இரண்டு அணிகளும் யாழ். மாவட்டத்தில் இருந்து ஐந்து அணிகளுமாக 17 அணிகள் மோதவுள்ளன.

அகில இலங்கை வலைப்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் 'டயட்ட கிரிஸ்' வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிக்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கம் மேற்கொண்டுள்ளது.

## கரப்பந்தாட்ட பயிற்றுனர்களுக்கான பயிற்சிநெறிக்கு விண்ணப்பம் கோரல்

அரியாலை,

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தினரின் நீண்ட கால கோரிக்கைக்கு அமைவாக தமிழ்மொழி மூலமான கரப்பந்தாட்டப் பயிற்றுநர்களுக்கான பயிற்சி நெறியினையும் பரீட்சையினையும் யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு இலங்கை கரப்பந்தாட்டச் சம்மேளனத்தினர் சம்மதம் தெரிவித்துள்ளனர். எதிர்வரும் பெப்ரவரி 16 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள பயிற்சி நெறிக்கு கரப்பந்தாட்ட வீரர்கள், பயிற்றுநர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுகின்றன.

பயிற்சிநெறிக்கு மட்டுப்படுத்தப்பட்டளவில் பயிற்றுனர்கள் தெரிவுசெய்யப்பட உள்ளமையினால் அனுபவம், திறமைகள் அடிப்படையில் தெரிவுகள் இடம்பெறும் என சங்க செயலாளர் கி. மனோகரன் அறிவித்துள்ளார். பயிற்சி நிறைவில் பரீட்சை நடத்தப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பயிற்றுநர் என்ற சான்றிதழ் வழங்கப்படும் எனவும் கூறினார்.

விண்ணப்பங்களை செயலாளரின் இல்லமான இல, 186/26 பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்று பெப்ரவரி முதலாம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறும் அறிவித்துள்ளார்.

## கரப்பந்தாட்ட சங்கப் பொதுக்கூட்டம்

அரியாலை,

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டமானது எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை யாழ். மத்திய கல்லூரியில் காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் 2011 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு இடம்பெறும் எனவும் இதில் சகல அங்கத்துவ கழகங்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்க செயலாளர் தி.கி.மனோகரன் தெரிவித்துள்ளார்.

## கலந்துரையாடல்

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான கலந்துரையாடல் எதிர்வரும் 27 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு தெல்லிப்பழை பிரதேச செயலர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் 2011 ஆம் ஆண்டுக்கான பெரு விளையாட்டுக்களின் போட்டி நிரல் தயாரிப்பு இடம்பெறவுள்ளதனால் பதிவுசெய்யப்பட்ட அனைத்து விளையாட்டு கழகத் தலைவர், செயலாளர்களை தவறாது சமுகமளிக்குமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

## தேசிய கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்ட அணி வெற்றிவாகை சூடியது

அரியாலை,

கண்டி மைதானத்தில் கடந்த 14 ஆம் திகதி ஆரம்பமான இலங்கை கூடைப்பந்தாட்ட சம்மேளனத்தால் நடாத்தப்பட்ட சிரேஷ்ட ஆண் வீரர்களுக்கான 'B' பிரிவு போட்டியில் யாழ். மாவட்ட ஆண்கள் அணி 3 ஆம் இடத்தைப் பெற்றுள்ளது.

நீண்டகால இடைவெளியின் பின்னர் தேசிய ரீதியிலான போட்டியில் யாழ். மாவட்ட வீரர்கள் சாதனை படைத்துள்ளனர். 14 ஆம் திகதி ஆரம்பமான முதலாவது போட்டியில் மாத்தறை மாவட்ட அணியினை இலகுவாக 86:48 புள்ளிகள் அடிப்படையில் வெற்றி கொண்டது.

15 ஆம் திகதி நடைபெற்ற காலி மாவட்ட அணியுடன் மிகத் திறமையாக விளையாடி 78:74 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி கொண்டது.

அடுத்து அனைத்து பல்கலைக்கழக அணியுடன் மோதியது. இதன்போது 53:47 என்ற புள்ளிகளின் அடிப்படையில் போராடித் தோல்வி கண்டது.

பின்னர் 16 ஆம் திகதி பதுளை அணியுடன் 92:29 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இலகுவாக வென்று முனன்னேறியது.

மாலை நடைபெற்ற 3 ஆம் இடத்திற்கான போட்டியில் குருணாகல் மாவட்ட அணியினை எதிர்கொண்டு விறுவிறுப்பாக ஆடி 64: 27 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிவாகை சூடியது.

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட வீரர்களின் அண்மைக் காலமாக சிறப்பான ஆட்டங்களின் மூலம் ஏனைய மாவட்ட அணிகள் ஆட்டம் காணத் தொடங்கியுள்ளமை மேற்படி வெற்றியினை எடுத்துரைக்கின்றது எனத் தெரிவித்த பயிற்றுநர் செ.ரமணன், யாழ். மாவட்ட அணியின் வீரர் வாகீசன் இலங்கை விமானப்படை அணியில் விளையாடி வருவது மாவட்ட அணியின் வளர்ச்சியின் வெளிப்பாடு எனக் கூறினார்.




ஐ.சி.சி. உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் பங்கேற்கும் இலங்கை அணி வீரர்களுக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் வகையில் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்பட்ட மிகப்பெரிய பந்தினை பாடசாலை மாணவர்கள் தொட்டு வாழ்த்துவதை படத்தில் காணலாம். (படம்:- வண்ணார்பண்ணை நிருபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு எண் மூலம் பலனை அறிதல்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

**04**

வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை இந்த ஆண்டில் அடைய நேரிடும். குடும்பத்தி லும் செய் தொழிலும் எதிர் காலத்தில் நன் மைக்கான சம்பவங்கள் நிகழலாம். வரும் நல்ல சந்தர்ப்பத்தை கைநழுவ விடக்கூ டாது.

சில சமயங்களில் பணத்தட்டுப்பாடும் கவலை தரும் சம்பவங்களும் நிகழலாம். அச்சமயங்களில் கடமையில் இருந்து பிற ழாமல் முன்னேற்றத்தில் அக்கறையுடன் நடந்து கொண்டால் எல்லாம் நன்மையா கவே முடியும்.

உணர்ச்சி வசமாகக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டாலும் வழக்கு போடுவதை தவிர்க்கவும். வழக்கு, பந்தயம், லாட்டரி முதலியவை இந்த ஆண்டில் வெற்றியை அளிக்காது.

வெளியூர் பிரயாணங்களைத் தவிர்ப் பது மிகவும் நல்லது. பிரயாணங்கள் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டா லும் மிகவும் எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும். சிறிது கண்ணயர்ந்தாலும் உயிருக்கே கூட ஆபத்தை வரவழைத்துக் கொண்டவராவார்.

ஆண்டு முழுவதுமே மகிழ்ச்சியுடன் இருப்பர். கணவன், மனைவி உறவு இன் பம் பயப்பதாக இருக்கும்.

**05**

இந்த எண்ணுள்ளவர்களுக்கு இந்த ஆண்டு பல அதிசயமான அனுபவம் ஏற் படும். அதிஷ்ட தேவதையின் அருள் பூர ணமாக இருக்கும். தொட்டதெல்லாம் பொன்னாகத் திகழும்.

உடல் ஆரோக்கியத்துக்கு ஒரு குறை யும் இருக்காது. வெளிநாடுகளுக்குச் செல்லும் பாக்கியம் கிடைக்கும். சொந்த மாக தொழில் செய்து வருபவர்களுக்கு அதில் அபிவிருத்தியும் எதிர்பாராத வித மாக இலாபமும் கிடைக்கும். ஒருவரிடம் பணிபுரிபவராக இருந்தால் அவருக்கு பதவி உயர்வும் வெளியூர் மாற்றமும் ஏற்ப டும். பணத்தட்டுப்பாடோ குடும்பத் தொல்லைகளோ தலைகாட்டாது. கண வன், மனைவி உறவு மகிழ்ச்சிகரமானதாக இருக்கும். புத்திரபாக்கியம் இல்லாதவர்க ளுக்கு அது கிட்டும். எதிர்பாராத வகை யில் சொத்து சேரும். பந்தயம், லாட்டரி முதலியவற்றில் வெற்றி கிடைக்கும். வழக்கு விவகாரங்களில் நல்ல முடிவுகள் காணப்படும். ஆண்டு முடிவில் துக்ககர மான சம்பவம் நடைபெறும். மிகவும் நெருங்கிய ஒருவரை பிரிய நேரலாம்.

**06**

இந்த எண் மிகவும் மந்தமான நிலையி லேயே இருந்து வரும். எடுத்த எந்தக் காரி யடும் முற்றுப் பெறாது. சில விவகாரங்க ளும் ரப்பர் போல் இழுத்துக் கொண்டே போகும்.

வருவாய்க்கு மேல் செலவு ஏற்படும். கடன் தொல்லைகள் அதிகரிக்கும். சில ருக்குத் துன்பத்தின் கடைசி எல்லைக்கே போய் சேர வேண்டியும் இருக்கலாம். சொந்தமாகத் தொழில் செய்பவர்களுக்கு அமோகமான ஆதரவும் செல்வ பெருக்க மும் ஏற்படும். ஆனால் ஊழியர்களால் தொல்லைகள் இருந்து கொண்டே இருக் கும்.

வழக்கு விவகாரங்கள் ஏற்படும். அப்படி யும் தொழிலில் முன்னேற்றம் குறையாது. வழக்கு விவகாரங்கள் சாதகமான முடி வைத்தரும். ஆண்டின் இறுதியில் எல் லாத் தொல்லைகளும் அகன்று சுமூகமா கத் தொழில் நடைபெறும்.

அரசாங்கத்தில் ஊழியம் செய்பவருக்கு பதவி உயர்வு. பொருள் சேர்க்கையும் ஏற்ப டும். மனைவி, மக்கள் மகிழ்ச்சியே அளிப் பார்கள்.

ஆண்டு தொடக்கத்தில் கஷ்ட திசையை அநுபவித்தவர்கள் இறுதியில் அவை அகன்று நல்ல நிலைக்கு வருவார் கள். தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெ றும். (தொடர்ச்சி அடுத்த வாரம்)

## 'யாழ் ஓசையின்' வார ஜோதிட பலன் [21.01.11 முதல் 27.01.11 வரை]

### கலாநிதி துன்னையூர் ராம் தேவலோகேஸ்வர குருக்கள் (சாரதாபீட ஜோதிடம்)

**மேஷம்**

மேடராசி அன்பர்களுக்கு ஓரள விற்கு அனுகூலமான பலன்கள் அமையும். தொழில் நிலைகளில் அலைச் சல், வேலைப்பளு என்பன அதிகமிருக்கும். குடும்ப நிலையில் ஓரளவிற்கு நன்மையான பலாபலன்கள் ஏற்படும். பண வரவு தேவை களுக்கு ஏற்ப அமையும் பலா பலன் உண்டு. எதிர்பாராத வகையில் திடீர் பிரயா ணங்கள் அமையும் நிலையுண்டு. கடன் நிலைகளில் சற்று இழுபறி நிலைகள் அமைந்திருக்கும். பெண்களுக்கு அனுகூல பலன் உண்டு. மாணவர்கள் முயற்சி தேவை.

**இடபம்**

இடபராசி அன்பர்களுக்கு சிறப் பான நற்பலன்கள் அமையும் நிலையுண்டு. தொழில் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும் நிலை உண்டு. குடும்பத்தில் மகிழ்வும் சுப காரிய நிகழ்வுக ளும் ஏற்படும் பலனுண்டு. பணவு வரவு மிகவும் திருப்திகரமானதாக அமையும் பலன் உண்டு. தந்தை மூலம் அல்லது தந்தை வழி உறவினர் மூலம் நன்மைகள் ஏற்படும். கடன் நிலைகளில் சுமுகமான பலா பலன்கள் அமையும் நிலையுண்டு. பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர் களுக்கு வெற்றி அமையும்.

**மிதுனம்**

மிதுனராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான பலன்களே அமை யும். தொழில் நிலையில் சிறு சிறு மந்த நிலைகள் ஏற்படும். குடும்பத்தில் மனச் சஞ்சலம், செலவீனங்கள் என்பன அமை யும். பண வரவு சற்று சுமாரான மத்திம மான நிலையிலேயே அமையும். தேவை யற்ற சிறு சிறு பிரச்சினைகள் ஏற்படும் நிலையிருக்கும். கடன் நிலைகளில் மத்தி மமான பலன்களே ஏற்படும். பெண்க ளுக்கு மனச் சஞ்சலம் இருக்கும். மாண வர்களுக்கு மத்திம பலன் இருக்கும்.

**கடகம்**

கடகராசி அன்பர்களுக்கு ஓரள விற்கு அனுகூலமான பலன்கள் அமையும். தொழில் நிலைகளில் நன்மை கள் ஏற்படும். எடுக்கும் முயற்சிகளில் ஓரளவிற்கு வெற்றிகள் ஏற்படும். குடும்ப நிலையில் அனுகூலமான பலா பலன்கள் அமையும். பண வரவு தேவைகளுக்கு ஏற் ப அமையும் நிலையுண்டு. கடன் நிலை யில் ஓரளவிற்கு நன்மைகள் அமையும். பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர் களுக்கு வெற்றியுண்டு.

**சிம்மம்**

சிம்மராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான பலன்களே அமையும். தொழில் நிலைகளில் வேலைப்பளு இருக்கும். எடுக்கும் முயற்சிகளில் நிதானம் கொள்ள வேண் டும். குடும்ப நிலையில் மத்திமமான சுமாரான நிலையே இருக்கும். பண வரவு மந்தமான நிலையிலேயே அமையும் பலனுண்டு. கடன் நிலைகளில் இழுப றி நிலைகள் தொடரும். பெண்களுக்கு மனச் சஞ்சலம் இருக்கும். மாணவர் முயற்சி தேவை.

**கன்னி**

கன்னிராசி அன்பர்களுக்கு மிக வும் சிறப்பான அனுகூலமான பலன்கள் அமையும். தொழில் நிலையில் நல்ல முன்னேற்றம் உண்டு. பண வரவு மிகவும் திருப்திகரமாக அமையும் நிலை யுண்டு. குடும்பத்தில் மகிழ்வும் குதூகல நிகழ்வுகளும் ஏற்படும். எதிர்பாராத வகை யில் காரிய சித்திகள் ஏற்படும் நிலை யுண்டு. கடன் நிலைகளில் சுமுகமான பலா பலன்கள் ஏற்படும். பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்களுக்கு வெற்றி யுண்டு.

**துலாம்**

துலாராசி அன்பர்களுக்கு ஓரள விற்கு அனுகூலமான பலன்கள் அமை யும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானம் வேண்டும். குடும்ப நிலையில் ஓரள விற்கு அனுகூலமான பலனுண்டு. உடல் நிலையில் சிறு சிறு சுகயீனங்கள் ஏற்படும் நிலையிருக்கும். பண வரவு தேவைக ளுக்கு ஏற்ப அமைகின்ற பலனுண்டு. கடன் நிலைகளில் மத்திமமான பலன் களே அமையும். பெண்களுக்கு அனுகூல பலனுண்டு. மாணவர்களுக்கு வெற்றி யுண்டு.

**விருச்சிகம்**

விருட்சிக ராசி அன்பர்களுக்கு சற்று மத்திமமான பலன்களே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் பொறுமை வேண்டும். தொழில் நிலைக ளில் இழுபறி நிலைகள் அமைந்திருக் கும். பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. சகோதரர் வழி யில் சற்று மந்தமான பலன் அமையும். கடன் நிலைகளில் இழுபறி நிலை தொட ரும். பெண்களுக்கு மத்திம பலனுண்டு. மாணவர்கள் முயற்சி வேண்டும்.

**தனுசு**

தனுசு ராசி அன்பர்களுக்கு மிக வும் சிறப்பான அனுகூலமான பலன் கள் அமையும். தொழில் நிலையில் முன்னேற்றகரமான நிலையுண்டு. பண வரவு மிகவும் திருப்திகரமாக அமையும். குடும்பத்தில் நல்ல மகிழ்வும் சுப நிகழ்வும் ஏற்படும். குடும்ப உறவி னர்கள் மூலம் நற்பலன்கள் அமையும். கடன் நிலைகளில் சுமுகமான பலா பலன் ஏற்படும். பெண்களுக்கு நன் மையுண்டு. மாணவர்களுக்கு வெற்றி யுண்டு.

**மகரம்**

மகராசி அன்பர்களுக்கு சற்று மத்திமமான பலன்களே ஏற்படும். எடுக்கின்ற முயற்சிகளில் பொறுமையுடன் செயற்படவும். தொழில் நிலையில் அலைச் சல் இழுபறி நிலை இருக்கும். பணவரவு மத்திமமான நிலையிலேயே அமைந்திருக் கும். குடும்ப நிலையில் மனச் சஞ்சலம், செலவீனம் இருக்கும். கடன் நிலையில் இழுபறி, தாமத நிலை தொடரும். பெண்க ளுக்கு மனச் சஞ்சலமுண்டு. மாணவர்கள் முயற்சி வேண்டும்.

**கும்பம்**

கும்பராசி அன்பர்களுக்கு ஓரள விற்கு அனுகூல பலன் உண்டு. தொழில் நிலைகளில் வேலைப்பளு அதிகம் இருக் கும். எடுக்கும் முயற்சிகளில் தாமத நிலைகள் ஏற்படும். குடும்ப நிலையில் அனுகூலமான பலன்கள் அமையும். பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. எதிர்பாராத வகை செலவீ னங்கள் அதிகம் ஏற்படும். பெண்களுக்கு சஞ்சலம் இருக்கும். மாணவர்கள் நிதா னம் தேவை.

**மீனம்**

மீனராசி அன்பர்களுக்கு மிகச் சிறப்பான பலன்கள் அமையும். தொழில் நிலையில் நல்ல முன்னேற்றம் அமைய பலனுண்டு. எடுக்கின்ற முயற்சிகள் சிறப் பான வெற்றியை கொடுக்கும். குடும்பத் தில் மகிழ்வும் சுப காரிய பலனும் ஏற்ப டும். பண வரவு மிகவும் திருப்திகரமான தாக அமையும். கடன் நிலைகளில் சுமுக மான பலன்கள் ஏற்படும். பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்களுக்கு வெற்றி யுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட இலங்கையில் 'நாக மரபில்' இனம், நாடு, அரசு

(சென்ற வாரத் தொடர்ச்சி)

ஆறாம் நூற்றாண்டுக்கு முன்னர் நாக தீபத்திற்கும் அநுராதபுர அரசிற்கும் இடையிலான பண்பாட்டு உறவுகள் பற்றிய சில செய்திகள் பாளி இலக்கியங்களில் காணப்படுகின்றன (Mahavamsam : i.54, xx.25, xxxv.125, xxxvi. 9,36, Culavamsa:xlii.62). இதற்கு நாக தீபத்தின் முக்கிய மதங்களில் ஒன்றாக பௌத்தமதம் இருந்தமை காரணமாகும். ஆயினும் இந்த உறவுகள் கி.பி. 6ஆம் நூற்றாண்டின் பின்னர் படிப்படியாக மறைந்து போகின்றன. இதற்கு பத்தி இயக்கத்தின் செல்வாக்கால் இங்கு இந்து மதம் எழுச்சி பெற்றமை முக்கிய காரணமாகும் (இந்திரபாலா 2006: 233).

இந்த இடத்தில் சிறப்பாக நோக்கப்பட வேண்டிய முக்கிய அம்சம் இதுவரை பௌத்த மத உறவை மட்டும் கூறி வந்த பாளி இலக்கியங்கள் இக்காலத்தில் இருந்தே நாகதீபத்திற்கும் அநுராதபுர அரசிற்கும் இடையிலான அரசியல் உறவைக் கூறுகின்றன. இதற்குப் பின்வரும் வரலாற்றுச் சம்பவங்களைக் குறிப்பிடலாம்.

ஏழாம் நூற்றாண்டில் ஸிலாமேக வண்ண மன்னன் அநுராதபுரத்தில் ஆட்சி செய்த காலத்தில் (கி.பி.614-623) ஸ்ரீநாக என்னும் தலைவன் உத்தரதேசத்திலிருந்து தமிழர் படையின் உதவியுடன் அநுராதபுரத்து மன்னனைத் தாக்கி அரசைக் கைப்பற்ற முயன்றதாகச் சூளவம்சம் கூறுகிறது (Culavamsa 44:70-73).

இங்கே ஆட்சியைக் கைப்பற்ற விரும்பிய ஸ்ரீநாக தனது படையெடுப்பை வட இலங்கையில் இருந்து மேற்கொண்டமை முக்கியமாக நோக்கப்படவேண்டிய அம்சமாகும். சுவாமி ஞானப்பிரகாசர் படையெடுப்பை மேற்கொண்ட ஸ்ரீநாகன் ஒரு தமிழ் மன்னனாக இருக்கவேண்டும் எனக் கூறுகிறார் (ஞானப்பிரகாசர் சுவாமி 1928: 47-50).

இப்படையெடுப்பை அநுராதபுர மன்னன் தோற்கடித்த போதும் அநுராதபுர அரசிற்கெதிரான கிளர்ச்சிகள் தொடர்ந்தும் உத்தரதேசத்தில் நடந்ததாகச் சூளவம்சம் கூறுகிறது (Culavamsa 48:83-84).

ஏறத்தாழ இதேகாலப்பகுதியில் 'மானா' என்ற சிங்கள இளவரசன் அநுராதபுரத்தில் ஆட்சியாளனாக இருந்த ஹட்டதாத்த மன்னனுக்குப் பயந்து உத்தரதேசத்தில் அடைக்கலம் பெற்று பின்னர் அங்கிருந்து தமிழ்நாடு சென்றதாகச் சூளவம்சம் கூறுகிறது (Culavamsa :47. 2-7.).

இலங்கை வரலாற்றில் தென்னிலங்கையில் சிற்றரசனாக இருந்தவர்கள் அநுராதபுர மன்னனர்களாக வருவதும், ஆட்சிப்பூசலில் பதவி இழக்க சிங்கள மன்னர்களும், இளவரசர்களும் தென்னிலங்கையில் அடைக்கலம் பெறுவது அல்லது தமிழ் நாடு சென்று தமிழர் படையுதவி பெற்று அநுராதபுர மன்னர்களாக மாறுவது ஒரு பொதுவான நிகழ்வாக இருந்தது. ஆனால் எந்தச் சந்தர்ப்பத்திலும் சிங்கள மன்னர்கள் வடஇலங்கையில் பாதுகாப்பு கருதி அடைக்கலம் பெற்றதற்கோ அல்லது இங்கு சிறிற்ரசர்களாக இருந்த சிங்கள இளவரசன் அநுராதபுர மன்னனாக வந்ததற்கோ ஆதாரம் காணப்படவில்லை. இந்நிலையில் முதன் முறையாக 'மானா' என்ற சிங்கள இளவரசன் தென்னிலங்கையை விட வடஇலங்கை பாதுகாப்பெனக் கருதி இங்கு அடைக்கலம் பெற்றமை அநுராதபுர அரசின் மேலாதிக்கத்திற்கு வட இலங்கை சாதகமாக இருக்கவில்லை என்பதைக் காட்டுகிறது. ஒன்பதாம் நூற்றாண்டில் பாண்டிய மன்னன் ஸ்ரீமாற ஸ்ரீபல்லவ என்பவன் இலங்கை மீது படையெடுத்த போது மாதோட்டத்தில்

**மீள்வாசிப்பிற்கு உட்படுத்தப்படும் தொல்லியல், இலக்கியச் சான்றுகள்**

வாழ்ந்த தமிழர்கள் பாண்டியப் படைகளுடன் இணைந்து அநுராதபுரத்தில் ஆட்சி செய்துகொண்டிருந்த ஸேன மன்னனை தோற்கடித்ததாகச் சூளவம்ஸம் கூறுகிறது (Culavamsa 49 : 84-85).

11

இந்நிகழ்ச்சி வடஇலங்கையில் வாழ்ந்த தமிழர்கள் தமிழகப் படையெடுப்பாளருக்கு ஆதரவாக இருந்ததுடன் அநுராதபுர அரசை அவர்கள் ஒரு பகைமை அர

பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்
வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

சாகக் கருதிக்கொண்டிருந்தமையும் தெரிகிறது. ஏழாம் நூற்றாண்டிலிருந்து ரோகண (இலங்கையின் தென்பகுதி), மலைய (இலங்கையின் நடுவே உள்ள மலைப்பிரதேசம்) மற்றும் உத்தரதேசம் (வட இலங்கை) என்பன இலங்கையின் வேறுபட்ட மூன்று முக்கிய நிர்வாகப் பிராந்தியங்களாக இருந்ததைப் பாளி இலக்கியங்கள் கூறுகின்றன. அவற்றுள் ரோஹணை மற்றும் மலைய பிரதேசத்தை நிர்வகிக்க அநுராதபுர ஆட்சியாளர்கள் தமது குடும்ப வாரிசுகளை நியமித்த போது உத்தரதேசத்தை நிர்வகிப்பதற்கு ஒருவரை நியமித்தற்கு ஆதாரங்கள் காணப்படவில்லை (Indrapala 2005 : 204 - 5).

இந்த வேறுபாடு வடஇலங்கை அநுராதபுர நிர்வாகத்திற்குள் அடங்கவில்லை என்பதையே எடுத்துக்காட்டுகிறது.

இதுதொடர்பாக பேரசிரியர் இந்திரபாலா முன்வைத்துள்ள கருத்துக்களை இவ்விடத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்தமாகும் (இந்திரபாலா 2006:230-31)

'உத்தரதேசத்தைப் பற்றிய குறிப்புக்களை ஆய்வு செய்தால் அப்பிரதேசம் ஏனைய பிரதேசங்களைவிட வேறுபட்டதாக இருந்தது என்பதை அறியலாம். அநுராதபுரத்து மன்னர்கள் கட்டுப்பாட்டுக்குள் அடங்காத ஒரு பிரதேசமாகப் பலமுறை அதனைக் காணலாம். அநுராதபர ஆட்சியை எதிர்த்தோர் அங்கு ஆதரவு பெற்றதையும் காணலாம்.

முற்பட்ட நூற்றாண்டுகளைப் போல் அல்லாது, ஆறாம் நூற்றாண்டின் பின் தென்னிந்தியாவிலிருந்து வந்த படைகள் வடபகுதியில் வந்து இறங்குவதையும் அவதானிக்க முடிகிறது. அப்படிவந்த படைகள் வடக்கில் தங்கள் அதிகாரத்தை உறுதிப்படத்திய பின் அநுராதபுரத்தை நோக்கி முன்னேறின. இவற்றை நோக்குமிடத்து அநுராதபுரத்து ஆட்சியாளருக்குச் சாதகமான சூழ்நிலை வடபகுதியில் நிகழவில்லை என்பது தெளிவு'

இக்கருத்துக்களின் பின்னணியில் கி.பி.10 ஆம் நூற்றாண்டில் தென்னிந்திய வல்லபன் நாகதீபத்தின் மீது படையெடுத்ததாக சூளவம்சத்தில் வரும் குறிப்பின் முக்கியத்துவத்தையும் நோக்குவது பொருத்தமாகும்.

(தொடரும்)

## ஏழை(மண) மகள்

முப்பதும் ஆகிவிட்டது
மூன்று முடிச்சு விழவில்லை
ஏழை என் கழுத்தில்
நாடக வரலாற்றில்
வெள்ளி விழாக் கடந்தும்
மணமகள் பாத்திரம் கூட
கிடைக்கவில்லை எனக்கு ...

## உனைப்போல்

காதல் என்ற கண்களுக்குள்
கருவண்டாக நீ நுழைந்ததால்
கண்களை கசக்கி விட்டேன்
காதலைக் கசக்கிய
உன்னைப் போல்

## அவள் வாழ்வில்

ஏழை அவள் வாழ்வில்
வெப்பம் இல்லை
அவளின் கந்தல் கொண்ட
ஆடை இருக்கும் வரை

## நனைந்த காதல்

நீ நனையாமல்
நானும்
நான்
நனையாமல் நீயும்
குடை
பிடித்தபோது
நனைந்தது
என்னமோ
நம் காதல்தான்

## ஆண்சீதனம்

ஏழையின் தாய் வயிற்றில்
உதிர்க்கப் போகிறாயா?
வெண்மையாகவே பிறந்து விடு
முப்பதில் என்ன
பதின்மூன்றிலும்
உனக்கு
சீதனம் கொடுப்பான்
வெளிநாட்டு மாப்பிள்ளை

மைனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். சூரியப் பொங்கல் விழா 2011













யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் கடந்த திங்கட் கிழமை இடம் பெற்ற தேசிய பொங்கல் விழாவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டார். இந் நிகழ்வில் இடம்பெற்ற நடன நிகழ்ச்சிகளையும் கலந்துகொண்ட மக்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர சபை, யாழ்ப்பாணம்

# மதுவுக்கு அடிமையான அவுஸ்ரேலிய கிரிக்கெட் வீரர்கள்





கிரிக்கெட் வீரர்கள் குடிப்பது என்பது சகஜமான ஒரு விஷயம்தான். அதிலும் அவுஸ்ரேலிய, இங்கிலாந்து கிரிக்கெட் வீரர்கள் மது அருந்துவதை ஒரு தினசரிப் பண்பாடாகவே வைத்திருப்பவர்கள். இந்நிலையில் மெல்போர்ன் டெஸ்ட் போட்டியில் வரலாறு காணாத ஆஷஸ் இழப்பு தினத்துக்கு முதல் நாள் மைக்கேல் கிளார்க், துவக்க வீரர் பிலிப் ஹியூஸ் இருவரும் நள்ளிரவு வரை மதுபான விடுதியில் குடித்ததாக நேரடி சாட்சியங்கள் தெரிவிக்க கிரிக்கெட் அவுஸ்ரேலியா தர்ம சங்கடத்தில் நெளிந்து கொண்டிருக்கிறது.

2005ஆம் ஆண்டு இங்கிலாந்தில் ஆஷஸ் தொடரை இழந்த போது தன்னுடைய ஆட்டத்திலும் பந்துவீச்சிலும் தடுமாறி வந்த ரிக்கி பொண்டிங் 'குடி என்பது என்னிடம் ஒரு பிரச்சினைதான்' என்பதை நேர்மையாக ஒப்புக் கொண்டுள்ளார். ஆண்ட்ரூ சைமண்ட்ஸ் போட்டிகள் நடைபெறும் நாட்களில் கூட மதுபான விடுதிகளில் சென்று முட்ட முட்டக் குடித்ததாக செய்திகள் வெளியாகின. அது கடைசியில் அவரது கிரிக்கெட் வாழ்வையே சீர்குலைத்தது என்பதையும் நாம் அறிவோம்.

பிளின்டொப் 2007ஆம் ஆண்டு உலகக் கோப்பை போட்டிகளின் போது மேற்கிந்திய தீவுகளில் நன்றாகக் குடித்து விட்டு படகில் சென்று கடலில் விழுந்ததும் இந்த தொடர் சம்பவங்களில் ஒன்றாகும்.

தற்போது மைக்கேல் கிளார்க், பிலிப் ஹியூஸ் ஆகியோர் இந்தச் சிக்கலில் உள்ளனர். ஆஷஸ் தோல்விக்கு முதல் நாளன்று மெல்போர்னில் உள்ள மதுபான விடுதியில் இருவரும் இரவு 12 மணி வரை குடித்ததாக நேரில் பார்த்த ஒரு நபர் தெரிவிக்க ஆஸ்ட்ரேலிய வீரர்கள் மீது பொதுமக்கள் வெறுப்பினை வெளிப்படுத்தி வருகின்றனர்.

## 2006 ஆம் ஆண்டுக்கு பின் டெஸ்ட் தொடரை கைப்பற்றிய பாக்.

வெலிங்டன் மைதானத்தில் நடைபெற்று முடிந்த பாகிஸ்தான் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இறுதி டெஸ்ட்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

முதல் டெஸ்ட் போட்டியில் வென்ற பாகிஸ்தான் தொடரை தனதாக்கியது. வெற்றிபெற 274 ஓட்டங்



கள் தேவை என்ற இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் வெற்றிக்குப் போகாமல் பாதுகாப்பு அவசியம் என்ற முறையில் ஆடி 5 விக்கெட் இழப்புக்கு 226 ஓட்டங்களை எடுத்து சமநிலை செய்தது.

யூனிஸ்கான் 81 ஓட்டங்களையும் தலைவர் மிஸ்பா 70 ஓட்டங்களையும் எடுத்தனர்.

வெற்றிக்கு விட்டோரி பல முயற்சிகளை மேற் கொண்டார். 2006 ஆம் ஆண்டுக்குப் பிறகு டெஸ்ட் தொடரை பாகிஸ்தான் வென்றது.

## ஐ.பி.எல். கிரிக்கெட் போர்வையில் ஒரு பொருளாதாரச் சந்தை

ஐ.பி.எல். கிரிக்கெட் வீரர்கள் ஏலம் என்பது ஊடகங்கள் பார்வையில் வெளிப்படையாக நடப்பது போல் தெரிந்தாலும் அது ஒரு புரியாத புதிராகவே நடைபெற்று வருகிறது. வீரர்களுக்கு செலவிடப்படவேண்டிய அதிகபட்ச தொகையில் நிர்ணயிக்கப்பட்ட உச்சவரம்பு முறையாக அனுசரிக்கப்படுகிறதா அல்லது ஒப்பந்தத்திற்கு வெளியே மேலும் சில ரகசிய பரிமாற்றங்கள் நடைபெறுகிறதா என்பதெல்லாம் விடை தெரியாத கேள்விகளாகவே உள்ளன.




ஐ.பி.எல். இரண்டாவது தொடரின் போது ஒரு வீரர் ஒரு குறிப்பிட்டத் தொகைக்கு ஒப்பந்தம் செய்தால் போதும் என்று கூறி ஐ.பி.எல். கிரிக்கெட்டில் விளையாட தனது ஆர்வத்தை தெரிவித்துள்ளார். ஆனால் அந்த வீரரை எந்த அணியும் அப்போது சீந்தவேயில்லை. மாறாக தற்போது நடந்து முடிந்த வீரர்கள் ஏலத்தில் அதே வீரரை ஒரு உயர்ந்த தொகைக்கு எந்த அணி அவரை வேண்டாம் என்று முன்பு கூறியதோ அதே அணி ஏலம் எடுத்துள்ளது என்று கிரிக்கெட் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்குக் காரணம் என்னவாக இருக்க முடியும்? சில பல தொகைகளை அந்த வீரர் அணியின் நிர்வாகத்தில் ஒருவர் அல்லது இருவருடன் பகிர்ந்து கொள்வதில்தான் இது போய் முடிந்திருக்கும் என்று நம்மால் ஊகிக்க முடிகிறது.

தாராளமய பொருளாதாரத்தின் முதன்மை உபகரணமான சந்தைப்பொருளாதாரம் கிரிக்கெட் ஆட்டத்திலும் புகுந்து களேபரம் செய்யத் தொடங்கி விட்டது. லலித் மோடியை நீக்கி விட்டால் எல்லாமே பரிசுத்தமாக ஆகிவிடும் என்று பி.சி.சி.ஐ. ஊடகங்களை வைத்து மக்களை நம்பவைக்கப்பார்க்கிறது.

உயர்ந்த ஆடைகள், நகைகள் அணிந்து ஏலத்தில் பங்கேற்கும் வீரர்களை ஏலம் எடுக்கும் நபர்களால் இந்திய கிரிக்கெட்டை எப்படி முன்னெடுத்துச் செல்ல முடியும்?

கிரிக்கெட் ஆட்டத்தின் மரியாதை வெற்று சந்தை மதிப்பாகிவிட்டது. கம்பீர் அடிக்கும் ஓப் சைட் அடியை விட அவர் எவ்வளவு தொகைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார் என்பதே ரசிகர்களின் பேச்சாக மாறியிருக்கின்றது.

Printed and published by Express Newspapers (Cey) Ltd. at No. 185, Grandpass Road, Colombo 14. On Friday January 21, 2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org